# புரட்சிக்
# கவிஞர்

# புரட்சிக் கவிஞர்

தொகுப்புநூல்

தொகுப்பாளர்
ப. முத்தையா

கமலா பிரசுராலயம்
சென்னை :: மதுரை

முதற் பதிப்பு—பிப்ரவரி 1946

விலை ரூ. 1-8-0

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Ma
and Published by Kamala Prachuralayam,
P. I. C. Q. H. MS. 197, Copies 1000

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

—பாரதிதாசன்

---

நம் கவியரசர் பாரதிதாசன் அவர்கட்கு ஐம்பத்து நான்காவது ஆண்டு நிறையுறுவதைக் கண்டு அவர்களைப் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட எண்ணம் எழுந்தது. அதன்படி பல அறிஞர்களும் நம் வேண்டுதலுக்கு இயைந்து கட்டுரை - கருத்துரை - கவிதை - வாழ்த்துரை வழங்கினார்கள். அவர்களின் மதிப்பு மிக்க பல வேலைகளுக்கிடையே, நமக்கு உதவியமைக்கு நம்முடைய இதயம் நிறைந்த நன்றி! வணக்கம்!

இன்னும் சிலர், அவர்களின் ஓய்வின்மையாலும் உடல் நலமின்மையாலும் கட்டுரை - கருத்துரை - வாழ்த்துரை வழங்க முடியவில்லை. இதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஏனெனில், அவ்வறிஞர் பலர் நம்மீதும் நம் கவியரசர்மீதும் அன்பும் - ஆர்வமும் கொண்டவர்கள் உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உயர்ந்த தகைமையாளர்கள். எனவே அவர்கள் நமக்குப் பின்னர் உதவுவார்கள். நாமும் பயன்படுத்திக் கொள்ளுவோம். அவர்கட்கும் நம் நன்றி!

இன்று, தமிழிலக்கியத்தில் ஊடாடித் திரிகிறவர்கள் நடுவில், பெருந்தகைமை வாய்ந்த பேரறிஞர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டாகும். இதில் எழுதியுள்ளவர்களில், பலர் வெவ்வேறு கருத்துடையவர்களாயினும் மேதைக்கு, இவர்கள் மதிப்புச்

செலுத்தும் மாண்புடையவர்கள் என்பதை யறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இதைத் தான் நாமும் இன்றைய தமிழ் உலகில் எதிர்பார்க்கிறோம். வாழ்க அத்தகைய தமிழகம்!

'திராவிட நாடு', 'சக்தி' இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளை இதில் இணைத்துக் கொள்ள இசைந்த அவற்றின் ஆசிரியர்கட்கு நம் நன்றி. மற்றுஞ் சில நண்பர் களின் கட்டுரைகள் இடமின்மையால் தங்கி விட்டன அவர்கள் நம்மை மன்னிப்பார்களாக!

இந்த நூலை அச்சிடும்பொழுது நமக்குத் துணையா யிருந்து திருத்தி உதவிபுரிந்த நம் அருமை நண்பர் **புதுமைப்பித்தன்** அவர்கட்கு நம் நன்றி!

**வாழ்க! கவியரசர் பாரதிதாசன்!**

**—ப. முத்தையா**

## உள்ளுறை


1. கவிஞர் வாழ்க்கைக் குறிப்பு—ப. முத்தையா ... 1
2. வாழ்த்துரை—திரு. வி. க ... 4
3. நீடூழிவாழ்க—நாவலர் பாரதியார் ... 5
4. பாரதிதாசனுர்க்குப் பாராட்டுரை ... 6
—ரா. பி. சேதுப்பிள்ளை
5. ஆற்றல் வாய்ந்த புரட்சி ... 7
—எஸ். வையாபுரிப்பிள்ளை
6. பாரதிதாசன்—பரலி. சு. நெல்லையப்பர் ... 8
7. புரட்சிக் கவிஞன்—நாமக்கல் கவிஞர் ... 9
8. கவிஞர் பாரதிதாசன்—கம்பதாசன் ... 10
9. தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ... 11
—டி. ஏ. வி. நாதன்
10. ஒப்புயர்வற்ற புரட்சிக்கவிஞர் ... 12
—ஏ. எஸ். சர்மா
11. பாரதிதாசன்—ரா. கிருஷ்ணமூர்த்தி ... 13
12. கவி பாரதிதாசர்—சுத்தானந்தபாரதி ... 14
13. கவி பாரதிதாசன்—ப. கோதண்டராமன் ... 16
14. கவிஞர் வாழ்க !—விசு. திருநாவுக்கரசு ... 18
15. பாட்டெனப்படுவது பாரதிதாசன் பாட்டு ... 21
—டாக்டர். அ. சிதம்பரநாதச செட்டியார்
16. பழந்தமிழ் புதுக்கும் பாரதிதாசன் ... 26
—ஞா. தேவநேயப்பாவாணர்
17. உயிர்க்கவி பாரதிதாசன் ... 28
—கோ. சி. பெரியசாமிப் புலவர்
18. இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற கவிஞர் 31
—கா. அப்பாத்துரைப் பிள்ளை
19. நாமும்-நமது கவியும் ... 34
—கோவை அ. அய்யாமுத்து

20. பாரதிதாசன்-புரட்சிக்கவி ... 40
—சோ. இலக்குமிரதன் பாரதியார்

21. புரட்சிக் கவிதை—புதுமைப்பித்தன் ... 45

22. பொதுவுடமைக் கவிஞர் ... 51
—நாரண துரைக்கண்ணன்

23. அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன் ... 56
—சி. என். அண்ணாத்துரை

24. புரட்சிக் கவிஞர்—ஏ. கே. செட்டியார் ... 61

25. புதுமை அறிஞர்-புதுவைக்கலைஞர் ... 66
—கி. ஆ. பெ. விசுவநாதம்

26. புரட்சியுள்ளம்—மு. வரதராசனார் ... 69

27. உறுதிக் கவிஞர்—க. அன்பழகன் ... 71

28. புரட்சிக் கவிஞர்—இரா. நெடுஞ்செழியன் ... 74

29. உண்மைக் கவிஞர்—கு. ப. ரா. ... 80

30. உயர்ந்த கவிஞர்—தி. ஜ. ர. ... 84

31. புதுமைக்கவி பாரதிதாசன் ... 87
—வி. ஆர். எம். செட்டியார்

32. புரட்சிக் கவிஞர்—ப. ரா. ... 91

33. நான் கண்ட பாரதிதாசன் ... 93
—வ. உ. சி. சுப்பிரமணியம்

34. கவிக் களஞ்சியம்—எம். ராஜகோபால் ... 97

35. இன்பக் கவி—எஸ் பத்மகுமாரி ... 103

36. வானொலிச் சொற்பொழிவு ... 106
—புதுமைப்பித்தன்

37. மலேயாவில் சொற்பொழிவு ... 109
—ரெ. சீனுவாசன்

38. உவமைக்குப் பாரதிதாசன் ... 112
—வல்லிக்கண்ணன்

# கவிஞர் வாழ்க்கைக் குறிப்பு

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் 29-4-1891ல் புதுவையில் பிறந்தார். புதுச்சேரியில் பெரிய வணிகரா யிருந்த கனகசபை முதலியார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம்.

சுப்புரத்தினம் சிறுவயதிலே, பிரஞ்சு மொழிப் பள்ளி யில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பள்ளியில் பயின்ற காலமே அதிகம். தமது பதினாறும் ஆண்டில் கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். இயல்பால் தாய்மொழிப்பற்றும், முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின், இரண்டாண்டில், கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். பதினெட்டு வயதிலேயே, அவரின் சிறப்புணர்ந்த அரசியலார் அவரை அரசியல் கல்லூரித் தமிழாசிரியராக்கினர்.

இளமையிலேயே, இயலுடன் இசையும் நாடகமும் அவரைத் தழுவி நின்றன. அவருடைய இசை இனிமை யில் ஈடுபட்டோர், பள்ளி நாடகங்களில் அவரை முக்கிய நடிகராக்கி மகிழ்ந்தனர்.

முத்தமிழ் மன்னராக விளங்குதற்குரிய அறிகுறிகள் இளமையிலேயே அவரிடம் காணப்பட்டன.

மொழியறிவும், இசையுணர்வும், நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறுவயதிலேயே சிறு சிறு பாடல்கள் அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர் கட்குப் பாடிக் காட்டுவார். அதில் பெரும் இன்பத்தை அடைவார்.

நண்பர் ஒருவரின் திருமணத்தில் விருந்துக்குப்பின், நம் கவிஞர், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார்.



395—1

பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். பாரதியார் அப் பாட்டைக் கேட்பதை நம் கவிஞர் அறியார். அப்பாடலே, அவரைப் பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

"சுப்புரத்தினம் ஓர் கவி—அதற்குரிய தன்மை அவரிடம் உண்டு" என்ற எண்ணம், பாரதியாருக்கு அவரைக் கண்டபொழுதே தோன்றியிருக்கவேண்டும். ஓர் நாள், பல நண்பர்களிடையே, இதைத் தெரிவிக்க விழைந்த பாரதியார், "சுப்புரத்தினம் கவி இயற்றவல்லவன்" என்று கூற, 'எங்கே எழுதச்சொல்லுங்கள் பார்ப்போம்' என்று நண்பர்கள் கேட்க, 'பாடு' என்று பாரதியார் சொல்ல, "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்ற பதினாறு வரியுள்ள இரண்டடிகளைப் பாடினார்.

அதன் அழகும், பொருளும், அவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்தின.

வேறு யாரும் பெறாத ஒரு மதிப்பை - பாராட்டை - புகழை பாரதிதாசன் பாரதியாரிடம் பெற்றார், 'கவிஞன்' என்ற சிறப்பால்!

கனக - சுப்புரத்தினத்தின் முதற் பாடல், பாரதியாராலேயே "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த - கனக சுப்புரத்தினம் எழுதியது" என்றெழுதப்பட்டு 'சுதேசமித்திரன்' இதழுக்கு அனுப்பப்பட்டது.

பாரதியாரிடம் சுமார் பத்து ஆண்டுகட்கு மேல் பழகியவர். பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, பாரதிதாசன் வாயிலாகக் கேட்டு மகிழாதவர் இல்லை. பாரதியாரைப் பற்றிப் பாரதிதாசன் எழுதுகிறார்.

பாரதிதாசன் அவர்கள், அடிநாள் முதலே சாதிபேதத்தையும், சமயபேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும், விரிந்த அறிவும், கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்.

பாரதிதாசன் அவர்கள் பாடிய அந்நாளைய கதர்பாட்டுக்களைப்போல் இதுவரை யாரும் பாடியதில்லை.

அவரது "சுப்பிரமணியர் துதியமுது" என்ற நூலில் உள்ள 'கீர்த்தனைகள்' கீர்த்தனாசிரியர்கட்கும் வழி காட்டும் சிறப்புடையன.

பாரதிதாசன் பாடல்கள் சில 'பாரதியாரின் பாடல்' என்றே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதுமுண்டு பல நண்பர்களால்.

பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை நிரம்பியவர். அவரது சிறுகுறிப்பு முதல் கட்டுரை - கவிதைகள் வரை அனைத்திலும் கருத்து - உணர்ச்சி - நகைச்சுவை இவ்வகைகள் பரக்கக் காணலாம்.

நம் கவிஞர் அவர்கட்கு, ஒரு செல்வனும் மூன்று செல்விகளும் உள்ளனர்.

தம்மைப் பிறர் பாராட்டவேண்டும் — 'புகழ்மாலை' சூட்டவேண்டும் எனக் கருதி தம் 'மனச்சாட்சியைப்' புறக்கணித்து, உண்மைக்குப் புறம்பானவற்றை உண்மை என்று, இயற்கைக்கு - மக்களுக்கு ஒவ்வாத கருத்துக் களை எழுதித் தருபவர் அல்ல!

நிலைத்த நெஞ்சினர்; நேர்மை அவர் தம் இயல்பு. அவருக்குச் சூழ்ச்சி தெரியாது! உண்மை - உழைப்பு - மேதை இவைகளுக்கு மத்தியில் இருப்பவர். "நான் செய்யவேண்டியது என்ன வென்பதுதான் என்னுடைய சிந்தனையே தவிர, பிறர் என்ன எண்ணுவார்கள் என்பதல்ல!" என்று கூறுகிறார் நம் கவியரசர். இதே கருத்தைத்தான் ஞானி எமர்ஸனும் கூறியுள்ளார். பாரதிதாசன் தமிழ்க் கவிஞர் - தமிழர்களின் கவியரசர். தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவிஞர். தமிழர்களின் புகழ் மீண்டும் மேதினி யோங்குவதற்காகப் பிறந்த உத்தமக் கவியரசர்!

—ப. முத்தையா

## *வாழ்த்துரை*

*எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும் அருவியின் முழவும் இனிக்கும்;* பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.

*புதுவைப் பொழில்—புரட்சிக்கனல்*
*காதற்கனி—வாழ்க!*

—திரு. வி. க.

## நீடூழி வாழ்க

பாரதிர வேபுரட்சி பாடும் புலமைவிறற்
போரெதிர் வாரைப் புறங்காண்பான் - பாரதி
நேசனையார் தாசனென நிந்திப்பார்? புத்தறிஞர்
பூசனைபோ தாதோ புகழ்க்கு.

வம்பப் புலமை வரகவிதைச் செம்மல்,தன்
ஐம்பத்து நாலவை யார்விழுவில் - தம்பித்து
வாடாத அன்பரெலாம் வாழ்த்த வளம்பெருக
நீடூழி வாழ்க நிலைத்து.

—நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார்

---

வம்பு - புதுமை, விறல் - வெற்றி.

## பாரதி தாசனுர்க்குப் பாராட்டுரை

பாவலர் பாரதிதாசனுரைப் பல்லாண்டுகளாக நான் அறிவேன். அவர் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு. பண்பும் உண்டு; பயனும் உண்டு. "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமையில்லை" என்னும் பாரதியார் வாய்மொழியை இவர் பொன்போற் போற்றுபவர். இந்நாட்டில் உண்மைத் தமிழர் தலையெடுக்கும் காலத்தில் இவர்க்கு உருவச்சிலை யெடுப்பர். அன்பர் பாரதிதாசனுர் நெடுங்காலம் தழைத் தோங்கி வாழ்ந்து, தமிழ்த் தொண்டு புரிக.

—ரா. பி. சேதுப்பிள்ளை
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

# ஆற்றல் வாய்ந்த புரட்சி

புரட்சியைக் கண்டால் எனக்கு வெறுப்புக் கிடையாது. புரட்சியில்லாதபடி உலகத்தில் நன்மை ஒன்றும் இதுவரை விளைந்ததில்லை. சமூதாயச் சீர்திருத்தம் முதலியவற்றில் இதுவரை தலையிட்டுள்ளவர்கள் அனைவரும் புரட்சிக்காரர்களே; ஒவ்வொரு கவிஞனும் ஒருவகையில் புரட்சிக்காரன் என்றே நான் கூறுவேன். கம்பனைக் குறித்து நான் அவ்வாறே எழுதியிருக்கிறேன். ஆனால், அது ஒரு நல்ல நெறியைப் பின்பற்றியதாக இருத்தல் வேண்டும். ஒரு பரம்பரையை உண்டுபண்ணக்கூடிய வல்லமை உடையதாக இருத்தல் வேண்டும். அப்புரட்சி ஒரு மனிதனுடைய தனியளவில் நின்றுவிட்டால் போதாது; பொதுமக்கள் அதனை அங்கீகரித்தல் வேண்டும். அவர்கள் அதில் பங்கு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அது நீடித்த பயனைத் தரவல்லது. **பாரதிதாசனுடைய புரட்சி புதுமையாக வுள்ளது; ஆற்றல் வாய்ந்தது. இவ்விரண்டு இயல்புகளும் நன்ருகப் புலப்படுகின்றன.** இப் புரட்சியால் உண்டாகும் விளைவை எதிர்காலம்தான் மதிப்பிடுதல் வேண்டும்.

**—எஸ். வையாபுரிப்பிள்ளை**
சென்னைச் சர்வ கலாசாலை
ஆராய்ச்சித்துறைத் தலைவர்

நண்பர் பாரதிதாசனின் ஐம்பத்து நான்காவதாண்டு நிறைவையொட்டி ஒரு புத்தகம் வெளியாவதுபற்றி நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பாரதிதாசன் உலகத்தில் தோன்றிப் பல ஆண்டுகள் ஆயினும், அவர் உடம்பிலும் உள்ளத்திலும் இளமை யுடையவராகவே விளங்குகின்ருர். அவர் ஓர் உண்மைக் கவியாயிருப்பதே அவரது இளமைக்குக் காரணம்.

பாரதிதாசனை ஒரு வீரக்கவி யென்று சொல்ல வேண்டும். பாரதியார் சொல்லும் "வீரத் தமிழ்ச் சொல்லின் சாரத்தை" பாரதிதாசன் பாடல்களில் காணலாம். அசத்தியத்தை, அஞ்ஞானத்தை, அநியாயத்தைக் கண்டிப்பதில் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பற்றவை. "பொய்திகழும் உலகநடை என்சொல்கேன், என்சொல்கேன்" என்று தாயுமானவர் புலம்பினுர். "நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்!" என்று பாரதியார் நெஞ்சம் குமுறினுர். பாரதிதாசனும் அதே நிலையில்தான் தமது பாடல்களைப் பாடியிருக்கிருர். சில இடங்களில் அவரது கண்டனம் மிகவும் கடுமையாயிருப்பின், அதற்கு அவரது உணர்ச்சி மிகுதியே காரணமாகும்.

தமிழ்நாட்டில் கவி பாடுவதில் பாரதிதாசனுக்கு நிகரானவர் பாரதிதாசனே ஆவர். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திருந்து, பல அற்புதப் பாடல்கள் பாடித் தமிழ் அன்னைக்குச் சூட்ட வேண்டுமென்று அவள் அடிமலர்களை வாழ்த்துகின்றேன்.

—**பரலி. சு. நெல்லையப்பர்**

*மாஜி ஆசிரியர் "லோகோபகாரி"*

# புரட்சிக் கவிஞன்

பொன்னையும் பாரான் புகழுரை வேண்டான்
தன்னலம் கருதித் தயங்கிட மாட்டான்
அமிழ்தினும் இனிதென ஆன்றோர் போற்றும்
தமிழ்மொழித் தொண்டே தவமெனத் தாங்கி
தாய்மொழிப் பண்பின் தனிமையைக் காக்கும்
வாய்மையே தன்னுடை வாழ்வின் உயிர்ப்பென
முதுமையிற் புகுந்துள முரண்களை மாற்றி
புதுமையிற் பாடும் புரட்சிக் கவிஞன்
கெடுதலை யெல்லாம் கிளர்ச்சியால் வெல்லும்
விடுதலை வேட்கை வெறிகொண்ட வீரன்
உள்ளொன்று வைத்துப் புறமொன் றுரைக்கும்
கள்ளத் தனங்களைக் கடிந்திகழ் புலவன்
பாரதி அவர்களின் பக்தனும் நண்பன்
பாரதி தாசன் பல்லாண்டு வாழ்க!

—வெ. இராமலிங்கன்
(நாமக்கல் கவிஞர்)

## கவிஞர் பாரதிதாசன்

வீரமறத் தமிழன்; நெஞ்சில்
விடுதலைக் கொள்கை யாளன்;
பாரதியைக் காத்த புதுமைப்
பாவலன்; அன்பிற் பழுத்தோன்
நேரமெலாம் தமிழர் ஆட்சி
நிலைபெற உழைப்போன்; உலகில்
பேரறிஞன்; என்றன் ஆசான்
பீடெலாம் பெற்று வாழ்க!

—கம்பதாசன்

# தமிழ்த்தாயின் தவப்புதல்வர்

கவிஞர் பாரதிதாசனுக்குப் பல பெரியார்களும், புலவர்களும், இதரத் தமிழ் அறிஞர்களும் புகழ்மாலை சூட்டியிருக்கிறார்கள். அவரைப் புரட்சிக்கவிஞரென்றும், புதுமைக் கலைஞரென்றும், புதுமை அறிஞரென்றும் பலவிதமாகப் பாராட்டியிருக்கிறார்கள். நந் தமிழ்நாட்டில் அவருடைய சிறந்த கவிதைகளைப் போற்றாதார் யாருமே யில்லை என்று சொல்லலாம். அவருடைய புரட்சிக் கொள்கைகளும், புதுமை எண்ணங்களும் சிறுபான்மைக் கூட்டத்தாருக்கு உடன்பாடில்லாமல் இருக்கலாம்; அவருடைய பரந்த கருத்துகளும், சிறந்த அறிவுரைகளும் பிற்போக்காளர்களுக்கு வேம்பாக இருக்கலாம்; ஆனால், கவிஞர் பாரதிதாசன் கவிதைகளின் பண்பை அனுபவித்தவர்கள் அனைவரும் அதைத் தீம்பாலமுதமாகக் கொள்வர் என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட அரும் பெருங் கவியரசை எவ்வளவு புகழ்ந்தாலும் அது மிகைபடக் கூறல் என்னும் குற்றத்தின்பாற் படாது.

எவ்வளவு புகழுரை கூறினாலும் அவ்வளவும் தகும் என்று சொல்லும்படியான பெருமை உடையவை நமது அருமைக் கவிஞர் பாரதிதாசனுடைய கவிதைகள். அவருடைய சொல்வளம், கற்பனைத்திறம், அறிவுச் சித்திரம், மொழிப்பற்று, இயக்கத்தொண்டு முதலியவற்றை நன்கறிந்த தமிழுலகம், இன்று அவரை "தமிழ்த் தாயின் தவச்சேய் வாழி! பல்லாண்டு வாழியவே!" என்று மனமுவந்து வாழ்த்துகின்றது.

—டி. ஏ. வி. நாதன்
"பத்திரிகை ஆலோசகர்

# ஒப்புயர்வற்ற புரட்சிக்கவிஞர்

இன்றையத் தமிழ் உலகில், ஓர் ஒப்புயர்வற்ற புரட்சிக்கவிஞர் அன்பர் பாரதிதாசன் ஆவர். அவர் மனதுக்கு உகந்த ஒரு முறையில், தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்துக்கும், தமிழர் சமூகத்திற்கும் தளராது சேவை புரிந்து வருபவர். அவருடைய கொள்கைகளில் பலருக்கு அபிப்ராய பேத மிருக்கலாம். ஆனால் அவருடைய தமிழ்த் தொண்டில் அவருடைய மேதையில் எவருக்கும் அபிப்ராயபேத மிருக்க முடியாது. மறுமலர்ச்சி என்பதற்காக இலக்கணத்தைப் புறக்கணித்து விடாமல், சொல்லுக்குச் சொல் உயர் ததும்பும் வண்ணம் சிறந்த பொருள்களை உள்ளடக்கி நயம் மிகுந்த கற்பனைப்பொலிவுடன் புதுமைக் கவிதைகள் இயற்றுவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

—ஏ. எஸ். சர்மா

ஆசிரியர் 'செட்டிநாடு

பாரதிதாசன் அவர்களுக்கு 54 வயசு ஆகிறது என்பதை அறிந்து எனக்குப் பெரிதும் வியப்பு உண்டாயிற்று. மூன்று வருஷத்திற்கு முன்பு ஆவினிப்பட்டி என்னும் கிராமத்தில், அவ்வூர்ப் பாடசாலையின் ஆண்டு விழாவின்போது அவரைப் பார்த்தேன். பார்வைக்கு முப்பது வயசுக்காரராகத் தோன்றினர். ஆனல், சொற்பொழிவு நிகழ்த்தியபோதோ, 'அவ்வளவு வயசு இருக்காது, இருபது இருபத்துநான்குதான் இருக்கலாம்' என்று தோன்றியது. அவ்வளவு வீராவேசத்துடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் பேசினர். தமிழ் மக்கள் தாழ்வடைந்துள்ள காரியங்களைப்பற்றிப் பேசும்போது, அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் நெருப்பைக் கக்கிக் கொண்டு வெளிவந்தது. தமிழரின் மேன்மையைப்பற்றிப் பேசும்போதோ, பெருமிதத்துடன் உள்ளத்தைக் காட்டிலும் ஒரு சாண் அதிகமாக உயர்ந்து நின்று சிம்மத்தைப் போல கர்ஜித்தார். புதுச்சேரியில் பாரதியார் வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றைப்பற்றி அவர் கூறக் கேட்ட போது, 'பாரதியாரைப் பார்க்கவில்லையே, அவருடன் பழகவில்லையே!' என்ற குறை எனக்கு நிவர்த்தியாகி விட்டது. அவ்விதம் பாரதியாரைச் சபை முன்னல் நேரில் கொண்டுவந்து நிறுத்தி அவருடைய குணதிசயங்களைத் தத்ரூபமாக நடித்துக் காட்டினர்.

பாரதிதாசன் அவர்களுடன் கழித்த அந்த ஒருநாள் அநுபவத்தை வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதென்று நினைக்கிறேன்.

தேசபக்த வெறியும், சீர்திருத்த ஆவேசமும் ததும்பும் பாரதிதாசனுடைய கவிகளைப்பற்றியும், அவர் தமிழுக்குச் செய்யும் பல தொண்டுகளைப்பற்றியும், தமிழ்ப் பெரியார்களும் அறிஞர்களும் எழுதுவார்கள். அவற்றைக் குறித்து நான் சொல்வதற்குப் பாரதிதாசனுடைய சஷ்டியப்த பூர்த்தியை எதிர்நோக்குகிறேன்.

—ரா. கிருஷ்ணமூர்த்தி
ஆசிரியர் 'கல்கி

ஷெல்லியும் புஷ்கினும் புரட்சிக் கவிகள். ஷெல்லி தனது இஸ்லாமியப் புரட்சியின் முன்னுரையில் இவ்வாறு எழுதினான்: "நான் பழைய முறையையோ, புதிய கவிகளையோ காப்பியடிக்கவில்லை. எனக்கென ஒரு நடை கண்டு கவிபாடுகிறேன். இந்தக்காலம் என்கவியை ஒப்பா விட்டால் பரவாயில்லை. நான் யாருக்கும் அஞ்சவில்லை. சுதந்தரமாகத் தலைநிமிர்ந்து என்வழியில் நடக்கிறேன்."

இதே தைரியத்துடன் புஷ்கினும் பாடுகிறான்: "அண்ணே! பழைய பஞ்சாங்கத்தைப் படித்தாலும் பிழிந்தாலும் சொட்டு மழையாவது வருமா? கந்தாய பலனைப் பாடம் பண்ணினால் வயல் விளையுமா? உலகின் முன்னேற்றம் உழைப்பில் உள்ளது. நன்றாகப் பாடுபடு. வந்ததைப் பகுத்துண். எல்லாரும் சமமென்று நினை!"

இதே கருத்தைப் பாரதியார், "எல்லாரும் ஓர்குலம்; உலகம் பொதுவுடைமை; ஒருவனுக்கு உணவில்லா விட்டால் உலகே பட்டினிகிடப்பது போலாகும். கட்டென்பதனை வெட்டென்போம். உடம்பில் மயிர் முளைப்பதுபோல மண்ணில் பயிர் முளைக்கிறது. வானும் அதை வளர்க்கிறது. அதன் பயனை அனைவரும் போது மட்டும் உரிமையுடன் உண்ணலாம்" என்றார்.

இம்மூவரும் கொழுத்த புரட்சிக்கவிகள். நான்காவது புரட்சிக்கவி நமது பாரதிதாசர். பாரதிதாசர் தமிழ் இரத்தினம்—கனகரத்தினம். அவர் கவிதையும் சொல்லின்பமாகிய கனகத்திற் பதித்த பொருளின்பமாகிய இரத்தினம்போல நிலவும். நிமிர்ந்த பார்வை, 'அச்சமில்லை' என்ற முறுக்கான மீசை, வயதை விழுங்கிய வாலிபவீறு, உரப்பான பேச்சு, புதுமைவேட்கைகொண்ட உள்ளம்—இவையே பாரதிதாசர்!

பாரதிதாசர் சென்ற இருபத்தைந்தாண்டுகளாகக் கவித் தொண்டு செய்துவருகிறார். அவர் தக்க தமிழ்ப்புலவ ராதலால், உள்ளுணர்ச்சிக்கேற்ற சொற்கள் அமை கின்றன. சொற்செல்வர் என்று அவரைச் சொல்லலாம். சொற்கள் உணர்ச்சியில் சாணைபிடித்துக் கலைமெருகேறி வரும் பண்பை நான் அடிக்கடி கண்டு வியந்திருக்கிறேன். பாரதியார் கவிப்புயலானால் தாசர் கவிக்கனல் என்னலாம். அவர் முதன்மையாக அறுசீர் எண்சீர் விருத்தங்களையும் ஆசிரியப்பாக்களையும் மிகத் திறமையுடன் அமைக்கிறார். அவர் கவிதைகள் எல்லாம் புதியபுதிய இயற்கையழ குடன் பொலிகின்றன. பாரதிதாசர் பழைய கொள்கைகளை மாரீசம் செய்யும் போலிக்கவியல்லர். சாமிக்கழுகும் பேச்சும் அவரிடமில்லை. வெட்டொன்று துண்டு இரண் டாகவே அவரது உணர்ச்சி, புதுமையை நாடிப் பாய் கிறது. முதன்மையாக காதல் சுதந்தரத்தை அவர் ஷெல்லியின் வேகத்துடன் பாடுகிறார். தமிழர் வேறெந்தச் சாதிக்கும் தாழ்ந்தவரல்லர் என்று அழுத்தமாகப் பாடி, நமது இனத்திற்கு அளவற்ற பெருமையைத் தந்திருக் கிறார். காலத்திற்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாத கண் மூடித் தனங்களைச் சவுக்கடி கொடுப்பதில் அவரே இன்று முதன்மைபெற்றிருக்கிறார்.

மறுமலர்ச்சித்தமிழகம் பாரதியார் முதல் எத்த னையோ எழுத்தாளரைத் தந்திருக்கிறது. சுமார் நூறு நல்ல எழுத்தாளர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். இவ ருள் பத்து அரிய கவிகள் இருக்கிறார்கள். அனைவரும் தமிழுக்கு வேண்டியவர்களே. அவர்களுள் பாரதிதாசர் ஒரு தங்கரத்தினம். அவர் நூல்களை வெளியிடும் முல்லைப் பதிப் பகம் வாழ்க! பாரதிதாசருக்கு அன்பாகுக!

—சுத்தானந்த பாரதி

அரவிந்த ஆச்ரமம், புதுவை.

## கவி பாரதிதாசன்

தமிழ்நாட்டுக் கவி கனக சுப்புரத்தினம் (பாரதி தாசன்) அவர்கள் சுப்பிரமணிய பாரதியாரின் நேர் சீடராவர். இருபது (அல்லது இருபத்திரண்டு) வயதி லேயே இவருக்கு கவிச் சக்கரவர்த்தியின் நட்பும் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும் வாய்த்தது. இவர் செய்த பாக்கியமென்றே சொல்லவேண்டும். அவரைப் போலவே இவரும் ஆவேசக் கவி. அவரைப் போலவே இவருடைய சொல்லில் உயிர்ச்சக்தியும் வேகமும் உண்டு. சாதாரண மக்கள் பேசும் எளிய, இயற் கையான சொல்லே இவரது சொல்லுமாதலால், அது மக்களின் உள்ளத்தில் சுருக்கெனத் தைக்கும் தன்மை யுடையதாகும். கருத்துக்களிலும் கையாளும் விஷயங் களிலும், பாரதியார் அக்காலத்து மக்களின் உண்மை யான பிரதிநிதியாக விளங்கியதைப் போலவே, பாரதி தாசனும் இக்காலத்துப் பிரதிநிதியாக விளங்குகிறார். அவரைப் போலவே இவரும் உண்மையான-நேர்மையான கவியாவர். இன்று தமிழ்நாட்டில் சொல்வளமும் கவிதா சக்தியும் புகழுமுடைய ஒருசில கவிகள், இல்லாத அனுப வத்தை உண்மையனுபவம் போலப் பறையறைந்தும், இன்று நிகழ்வதைப் பத்தாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந் ததுபோலத் திரித்துக் கூறியும் வருகின்றனர். பலவாண்டு களுக்கு முன்பே பூரண கவிதா சக்தியும் ஆற்றலும் பெற்றுவிட்டதாக இதரர் கருதவேண்டுமென்பது அவர் களின் நோக்கம். ஆழ்ந்து நோக்குவோருக்கே இவர்

களின் போலித்தன்மையும் அசந்தையும் தெற்றெனை விளங்கும். நம்முடைய பாரதிதாசன் அவர்கள் அத்தகையோரைச் சேர்ந்தவரல்லர். அவருடைய கவிதைகள் யாவும் அவ்வப்போது அவருக்கு நேர்ந்த அனுபவங்களினுடையவும், உள்ளத் தெழுச்சிகளினுடையவும் பிரதி பிம்பங்களேயாகும். அவர் தொடக்கத்திலிருந்து எழுதி வந்திருக்கும் கவிதைகளைக் கால வரிசையில் படித்தால், அவரது கவிதா சக்தியும், உள்ளப் பாங்கும், கருத்துக்களும் எங்ஙனம் படிப்படியாக வளர்ச்சியும் மாறுதல்கள் அடைந்துவந்துள்ளன என்பது புலனாகும்.

கவி பாரதிதாசனின் பாடல்களில் கவிதையழகும், கற்பனையழகும், ஓசை நயமும் சிறப்புடன் விளங்குகின்றன.

கவி கனக சுப்புரத்தினம் நீடூழிவாழ்க!

—ப. கோதண்டராமன்
அரவிந்த ஆச்ரமம், புதுவை.



395—2

# கவிஞர் வாழ்க !

தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுமையும், எழிலும், புத்துணர்ச்சியும் உண்டாக்கிய பாரதியை முதல்வராகக் கொண்டு இந்நாள் வளர்ந்துவரும் கவிதைச் செல்வம் தமிழ்மக்களிடையே ஒருபெரும் கவிதையார்வத்தை உண்டாக்கிவருகிறது.

சங்க காலத்தில் மெய்மையும், எழிலும், நுணுக்கமும் தனிப்பண்பும் பெற்று உலாப்போந்த கவிதை, பின்னாளில் பொய்யொடு புனைந்துரையணிந்து நிலவுவதாயிற்று. காலச் சுழற்சியும், மக்கள் மன உணர்வும் இதற்கொரு காரணமாயின.

இவ்விருபதாம் நூற்றாண்டு இந்நாள் கவிஞருள் சிறந்தோராகிய பாரதிதாசன் தரும் கவிதைகளில் இயல்பொடு அமைந்த புனைந்துரையும், அதனொடு கலந்து மகிழ்விக்கும் புதுமையும் புத்துணர்வும் தமிழ்மக்கள் உள்ளத்தில் பரவி வருகின்றன. காலப் புயலுக்குத் தப்பி நிற்கும் கவிதைகள் மிகச் சில என்றால், அவைகளுள் நம் கவிஞரின் பாடல்கள் முன்னிற்பன என்றே கூறுவேன்.

எதிர்காலம் பாரதிதாசனார் பக்கமிருத்தலை இன்னே கூறுகிறேன்.

'தெள்ளு தமிழில் இசைத் தேனைப் பிழிந்து எடுத்துத் தின்னும் தமிழ்மறவர் யாம்', 'புவி ஆளப் பிறந்தவன் தமிழன்', 'நமைவென்ற நாட்டினரில்லை' என்பனபோலும் தம் கவிதைகளைக் கவிஞர் தமக்கென அமைந்ததொரு இசையில் பாட அன்றொருநாள்

வீரத்தால் அவர் மார்பு விரியக்கண்டேன். கேட்டோர் உள்ளத்தைப் பிணித்தது.

பீடுநடையும், ஏறனைய தோற்றமும் இவர்க்கு இயல்பாயின. தலைக்கேறிய தமிழ் மயக்கம் இவர் வாழ்வொடு பிறந்த சால்பாயிற்று.

இயற்கைப் பொருளிடத்தே மறைந்து கிடக்கும் அழகுகளைக் கவிஞரின் கண்கள் மிகக் கூர்மையாய்க் காணுகின்றன. கவிதைகளில் சொற்கள் கொஞ்சுகின்றன. சில இடங்களில் குதிக்கின்றன. வடிவேந்தி வரும் நிலையில் அவை தாங்கும் வண்ணமும் பல.

அழகு மங்கை ஆடல்புரியும் நல்லரங்கு கவிஞர் பலர்க்குச் சோலையாயிற்று. குயிலும், வண்ண மயிலும், தேன் வண்டும் அரங்கை நிகழ்த்துவோராயினர். இந்நீர்மையில் வளர்ந்தது கருத்து. இவர் கவிதையில் 'நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில் நாடகத்தைச் செய்கின்ருள்' என அழகு நங்கையின் ஆடல்நெறி புதுமை பெறுகிறது.

அழகு மங்கையின் என்றும் குன்ருஇளநலச் செவ்வியை, "பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண். பழமை யினுற்சாகாத இளையவள் காண். நசையோடு நோக்கடா எங்குமுள்ளாள், நல் லழகு வசப்பட்டால் துன்பமில்லை" என்னும் பகுதிகள் அழகுணர்ச்சியையும், அவை தாங்கிவரும் குறிக்கோளையும் எடுத்துக் காட்டுகின்றன.

தென்றல் பிறந்த கதையைப் பிறர் பாடல்களில் கண்டேன். அது வளர்ந்த நிலையை இவர் கவிதை சொல்லக் கேட்டேன். பொதிகை நீராடி, மலர்மணம் உண்டு, வண்டுபாட இசைக்கலை தேர்ந்து நாளும் வளரும் தென்றலுக்கு வருகையொடு வாழ்த்துக்கூறும் இவர்

கவிதைப்பண்பு சிறப்புடையது. தென்றலை நோக்கி 'பெண்கள் விலக்காத உடையை நீபோய், விலக்கினும் விலக்கா நுன்னை' என்பது தென்றலின் குறும்பு. புலனுகாத தென்றல் இவர் கவிதையில் புதுவடிவம் பெறுகிறது என்பதொன்றே சிந்தனைக்குரியதாகும்.

*    *    *

வைய மன்னற்கு நடை கற்பிக்கும் புருக்கள்; சிறுகால் நண்டுப் பிள்ளைகள்; விழுதைப்பாம்பென நினைத்து மருளும் குரங்கு; 'தமிழா நீ வாழ்க' என இவர் வாழ்த்தும் கொடுவாள் மிசைவேடன். இவை அனைத்தும் சுவை வடிவம் பெறுகின்றன.

இவர்தம் கவிதைகளில் இனிக்கும் சொற்கள், அவை நினைக்கச் சுரக்கும் இன்பம் பல வாதலைக் காணுகிறேன். இலக்கிய அழகு ஒன்றே அன்றி விழுமிய குறிக்கோள் பல ஆங்காங்கு நிரம்பக் கிடைக்கின்றன.

இன்பத்தை வார்த்து வழங்கும் சுவைக்கிண்ணம் கவிஞரின் பாடல்கள். இவர் நிறையாண்டு வாழ நான் பல்லாண்டு கூறுகிறேன்.

—வித்துவான் விசு. திருநாவுக்கரசு.
ஆசிரியர் : மகளிர் கலாசாலை
புதுக்கோட்டை

# பாட்டெனப்படுவது பாரதிதாசன் பாட்டு

தற்காலத் தமிழ்மக்கள் கருத்திற்குத் தக அவர் தம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உதவும் வகையிற் கவி இயற்றுபவர்களில் தலைசிறந்து விளங்குபவர் பாரதிதாசன் அவர்கள். சுப்பிரமணிய பாரதியாரை அடியொற்றி அவர் பாராட்டும் வண்ணம் கவி எழுதத் தொடங்கியதால் 'பாரதிதாசன்' எனப் பெயர் வைத்துக் கொண்ட கனக சுப்புரத்தினம் அவர்கள் பொழிந்துள்ள பொன்னும் மணியும் பற்பலவாகும். நன்றி மறவா பெற்றி வாய்ந்த தமிழ்மக்கள் உள்ள நம் நாட்டில் அவருக்கு நிலைபெறுதலுடைய புகழுண்டாகியிருப்பது கண்கூடு. தமிழ்மணம் வீசும் எந்தவிடத்திலும் அவர் பாட்டு இசைக்கப்படாது இருத்தலில்லை. "இன்பம் எனப்படுதல் தமிழ் இன்பம் எனத் தமிழ் நாட்டினர் எண்ணுக" என்றார். "வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரங்கொள் கூட்டம், அன்னார் உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினால் பலராய்க் காண்பார் கள்ளத்தால் நெருங்கொணாதே என வையங் கலங்கக் கண்டு துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம் சொக்கும் நாள் எந்த நாளோ?"

"செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்", "பொங்குதமிழர்க் கின்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு", "தமிழினை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" போன்ற வீரவுரைகளை அழகாக வழங்கியுள்ள பாரதிதாசருக்குத் தமிழகம் என்றும் கடப்பாடுடைத்து.

அவருக்குத் தமிழ்மொழியில் உள்ள பற்றிற்கும் ஆர்வத்திற்கும் எல்லையில்லை. அவர் பாடல்களை படிக்கிற அன்னியனும் தமிழன்பன் ஆகிவிடுவான்.

“ தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங் கண்டதில்லை”

“ தமிழென்று தோள் தட்டி ஆடு—நல்ல
தமிழ்வெல்க வெல்கஎன்றே தினம்பாடு”

“ தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்”

“ தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்”

“ உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே”

எனவரும் அடிகள் போன்றவற்றைப் பாடக்கேட்கும் தமிழர் ஆயுள்காறும் வீரத் தமிழர் ஆகிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழிசை உள்ளம் உருக்குவதைக் குறித்து “தமிழுணவு” என்னும் பாட்டிலே அழகாகக் கூறி யுள்ளார்:—

“வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்து என்றன் நெஞ்சையும், வானத்தையும், குளிர் நீரையும், நிலவையும், தமிழர் குலத்தையும் ஒன்றெனச் செய்ததுவே”, “என்றும் தமிழ் வளர்க! கலை யாவும் தமிழ்மொழியில் விளைந் தோங்குக” என்ற இடங்களை நோக்குக.

உலகில் ஒற்றுமை வேண்டும் என்பதையும், மக்கள் தம்முடைமையைத் தனியுடைமையாய் மதிக்காது பொது வுடைமையாக மதிக்கவேண்டும் என்பதையும், ‘உலக ஒற்றுமை’, ‘முன்னேறு’. ‘உலகம் உன்னுடையது’, ‘புதிய உலகுசெய்வோம்’ முதலிய தலைப்புக்களில் அழகாக எடுத்து இயம்பியுள்ளார்.

பெண்கள் விடுதலைக்கும், பெண்கள் முன்னேற்றத் திற்கும் உரியவகையில் அவர் பாடலுட் பல அமைந்தவை. அவற்றைப் படிப்போர் காதல் மணங்களைத் தடைப் படுத்தக் கூசுவர். கைம்பெண் மறுமணத்தை மறுக்க முன்வரார்.

இவை, உண்மையென்பதை "மாந்தோப்பில் மணம்" "காதற் குற்றவாளிகள்" "காதல் மகத்வம்" "காதலைத் தீய்த்த கட்டுப்பாடு" என்னும் தலைப்புகளில் வரும் பாடல்களைத் துய்ப்போர் அறிவர்.

பெண்களுக்காக மிகவும் பரிந்து பேசும் இக்கவிஞர் மறைவாக மயிலிடம் கூறியது வெளியாகிவிட்டதே! பெண்ணினம் யாது செய்யுமோ, அறியேன். பிறர் பழி நூற்றிருந்து பாரதிதாசனைப் பொய்யாக்குவரா? அன்றி அவர் ஏதோ காவியப் பித்துப்பிடித்த நேரத்தில் பாடிவிட்டார் என்பரா?

அவர் மறைவாகக் கூறியதை நோக்குங்கள்:

"அழகிய மயிலே, அழகிய மயிலே!
நீயும் பெண்களும் நிகர்என் கின்றார்!
நிசம்அது! நிசம்! நிசம்!—நிசமேயாயினும்
பிறர்பழி தூற்றும் பெண்கள்இப் பெண்கள்!
அவர்கழுத் துன்கழுத் தாகுமோ சொல்லாய்!

அரிவையர் அறிவிலார் என்பதை மறுத்தெறிய "வீரத்தாய்" என்பதில் வரும், விசயராணி வரலாறு ஒன்றே போதுமே:

"அரிவையர் கூட்ட மெல்லாம்
அறிவிலாக் கூட்டம் என்பாய்,
புரிவரோ, விசயராணி புரிந்தஇச்
செயல்கள் மற்றோர்?".

பெண்ணுலகம் அன்னையும் ஆசானும் ஆருயிர்க் காப்பாருமாக வேண்டுமென்று கவிஞர் விழைகிறார். கஞ்சியும் பறித்துக் காதலும் பறித்தாரே ஆடவர் எனக் கலங்குகிறார்.

"ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும், அஞ்சுவதும், நாணு

வதும், ஆமையைப்போல் கெஞ்சுவதும் ஆகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி" என இரங்குகின்ருர்.

"மாதர்தம் உரிமை மறப்பது மாண்பா?" "மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா" ஆய்ந்துபார்? என்கிருர்.

கல்வியில்லாத பெண் குடும்பத்திற்குப் பெரிய இடும்பை யென்பதை 'இருண்ட வீட்டிலும்' கல்வி யுடையவள் பேரின்பம் நல்குபவள் என்பதைக் 'குடும்ப விளக்கிலும்' நயம்பட எடுத்துக் காட்டியுள்ளார். அந் நயங்களை, அந்நூல்களை ஓதிச் சுவைக்க.

பத்திரிகை, யாத்திரை, புத்தகசாலை முதலிய தலைப் புக்களில் அமைந்த கருத்துக்கள் மனத்தில் இருத்திச் செயற்படுத்தத் தக்கவை!

பத்திரிகைப் பெண்ணுனவள் ஓவியம் தருகிருள், காவியம் தருகிருள், மேவிடும் விகடம் பேசுகிருள், கூவு கிருள், வீரப்பேச்சுக் கொட்டுகிருள்.

இன்னும் அவள் செய்யும் செயல்களைப் 'பத்திரிகை' என்ற தலைப்பிற் பார்க்க!

புத்தகசாலையில் இனித்த புவி, இயற்கை யெழில் எல்லாம் காணலாம், இசைகேட்கலாம், மணம் முகரலாம், சுவை உண்ணலாம்.

ஆதலால்,

"புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில் யாண்டும்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல்
வேண்டும்"

எனப் பகர்கின்ருர் பாரதிதாசர்.

விளையாட்டாகவும் எவ்வளவோ பாடல்கள் பாடியுள்ளார். "எமனை எலி விழுங்கிற்று" போன்றவை அவை.

யாத்திரை போகும்போது ஒருவர் மறவாது எடுத்துச் செல்லவேண்டியவற்றை ஒரு பாட்டிலே செப்பியிருப்பதை உன்னுங்கள் :—

"சீப்புக் கண்ணாடி ஆடை
சிறுகத்தி கூந்தலெண்ணெய்
சோப்பு பாட்டரி விளக்குத் தூக்கும்
கூஜா தாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை, செருப்புக்
கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய் கைக்கொள்க
யாத்திரைக்கே."

சீப்பில்லா' மாந்தர் சிறந்த மனிதரல்லராததால், சீப்பினை முதலிற் சொல்லி, பணப்பையை மறந்துவிடுவோர் பலராதலினாலே அதனைக் குறிக்க ரூபாய் என்று கடைசியில் வைத்து ஞாபகப்படுத்துகிறார் போலும்! இன்னும் அவர் கவி நயங்களையும், அவர் கவிக் கருத்துக்களையும் காணவிழைவோர் அவர் கவிதைகளைக் கற்பாராக.

பாரதிதாசன் மென்மேலும் தமிழுணர்ச்சி யூட்டிச் செழிக்க.

—டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# பழந்தமிழ் புதுக்கும் பாரதிதாசன்

பாவலர் பாரதிதாசன் அவர்கள், பெரும்பாலும் ஆசிரியப்பாவிலும், ஆசிரிய மண்டிலத் (விருத்தத்)திலும், இக்காலத்திற்கும், இந்நாட்டிற்கும் ஏற்றவாறு பொது மக்கட்கு விளங்கும் எளிய - இனிய - இலக்கண நடையில், சீர்திருத்தக் கொள்கைகளையும், முன்னேற்ற வழிகளையும், உணர்ச்சிக் கருத்துக்களையும், எழுச்சிச் செய்திகளையும், அறிவுக் கதிர்களையும், அழகிய சிறு நூல்களாகவும், தீஞ்சுவைப் பாட்டுக்களாகவும், இடைவிடாது எழுதி வெளியிட்டுவரும் நாட்டுத் தொண்டு ஒப்பற்றதாகப் போற்றத்தக்கதாம்.

பண்டைக்காலத்தில் சில அறிஞர் தத்தம் ஊருக்கு மட்டுமின்றித் தமிழ்நாடு முழுமைக்குமே ஆசிரியராக நூலாலும் - உரையாலும் அறிவுறுத்தினர். இவருள், மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனாரும், மதுரை ஆசிரியன் பாரத்வாசி நச்சினார்க்கினியரும் சிறந்தவராவர். இவர் போன்றே, நம் பாவலரும், புதுச்சேரிக்கு மட்டு மன்று, தமிழ்நாடு முழுமைக்குமே ஆசிரியராவர்.

இவ்வாசிரியர் இருபாலார்க்கும் தந்த எதிர்பாராத முத்தத்தின் பின், விலையேறப்பெற்ற பல எதிர்பாராத முத்தங்கள் (முத்துக்கள்) இவர் வாயினின்று ஒவ்வொன்றாய் வந்துகொண்டே யிருக்கின்றன. இவற்றுள், இருண்ட வீடு, குடும்ப விளக்கு என்னும் ஈர்உரை யாணிகளும் ஒவ்வொரு வீட்டிலும், அழகின் சிரிப்பு ஒவ்வொரு மாணவ னிடத்தும் இருக்கத்தக்கன. இவற்றுள் முன்னவை நல்வாழ்க்கைக்கும், பின்னது இயற்கை வள்ளலிடம் புலமையும், பாவன்மையும் பெறுவதற்கும் ஆற்றுப் படுப்பன. 'அழகின் சிரிப்பு' என்னும் பெயரே பல சிறந்த கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சிறு செய்யு ளாகும்.

> "இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

என்னும் குறளுக்குக் கல்விச் செல்வத்திற்கும ஏற்ற உரையைக் கொள்வதற்குத் தூண்டுவது அழகின் சிரிப் பாகும்.

இங்ஙனம், பண்டு செய்யுள் மொழியாயிருந்து, இன்று உரைநடை மொழியாயிருக்கும் தமிழை, முன்பு, முத்தமிழாயிருந்து இன்று இயற்றமிழ் அளவாயிருக்கும் தமிழை, ஒருகால் திருந்திய கருத்துக்களையே கொண் டிருந்து இன்று மூடப் பழக்க வழக்கங்களையும் பொய்க் கதைகளையுங் கூறுந் தமிழை, மீண்டும் செய்யுள் மொழி யாயும்; முத்தமிழ் மொழியாயும், செந்நெறி மொழியாயும், மாற்றுவதால் பழந்தமிழ் புதுக்கும் பாரதிதாசன் என்றேன்.

இவரைச் சிலர் புரட்சிப்பாவலர் என்பர். புரட்சி என்பது கீழ்மேலாய் புரளுவதாதலாலும், இடைக் காலத்திலிருந்து சீர்கெட்ட தமிழை மீண்டும் தலைக்காலம் போலச் சீர்ப்படுத்துவது நம் பாவலர் தொழிலாதலாலும், பழந்தமிழ் புதுக்கலென்றாலும் புரட்சி என்றாலும் ஒன்றே யென்க.

இவர் பலர்க்கும் ஏற்பப் பல பொருள்படுமாறு தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டதே ஒரு புரட்சி என்க. பொதுமக்கட்குரிய அறிவு விளக்க நூல் களைப் பிற்காலம்போல் உரை நடையில் வரையாது முற்காலம்போற் செய்யுளிலே வரைந்தது மற்றுமொரு புரட்சி யென்க. இவரைப் பின்பற்றியே பொது மக்கட்கு எளிய செய்யுள் நடையில் நூல் யாத்த ஏனோரு முளர். ஆயினும், இவர் என்றும் சிறந்தே நிற்பார் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை.

இப் புரட்சிப் புலவர் நீடூழி வாழ்ந்து நிலவுலகிற்கு, சிறப்பாக, எம் தமிழ்நாட்டிற்கு, ஒரு பெரும் காரிருள் நீக்கும் கதிரவனாக விளங்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் மீதூர்வாராக.

—ஞா. தேவநேயப்பாவாணர்
சேலம் கல்லூரி

பாரதிதாசன் அவர்களும் யானும் சென்ற பதினைந்து ஆண்டுகட்கு முற்பட்ட உணர்ச்சியொத்த நட்பாளர்களாதலின் அவரைப் பாராட்டுதலைக் கண்டு யான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

புதுவைப் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களின் பாடல்களை, உரைநடைகளைப் படித்தவுடன் பலநாட்டுப் புரட்சிக்கவிகளும், புரட்சி உரை நடையாளர்களும் எம் அகக்கண்முன் தோன்றுகின்றனர்.

ருஷ்ய நாட்டில் நிகழ்ந்த கொடிய காட்சிகளைக் கண்டு கிருபாட்கின் கூறிய உரையைப் போன்று நம் உயிர்க்கவி பாரதிதாசன் அவர்களும் நம் நாட்டில் "வலியோர் சிலர் வதையே புரிகுவதா?" என வினவுகின்றார். மேலும் சாதியினால் உயர்வு தாழ்வு கற்பித்து, உண்டு கொழுத்து உறங்கித் திரியும் கூட்டத்தையும், அவர்கட்கு உழைத் துழைத்துப் போட்டு உடம்பு இளைத்திளைத்து எலும்புந் தோலுமாய் நடமாடும் பிணமாய்த்திரியும் இந்நாட்டு மக்களினத்துள், மற்றொரு பிரிவினரையும் கண்டு வருந்திய உயிர்க்கவி பாரதிதாசன்,

"முழங்காற் சேற்றினில் முக்கி விளைத்தவன்
மூடச் சகோதரன் பள்ளப் பயல்—அதை
மூக்குக்கும் நாக்குக்கும் தண்ணீர்க் காட்டித்
மோசக்காரன் மேலா தோழர்களே" [தின்னும்

எனக் கொதித்த உள்ளத்தோடு நம்மைக் கூவி வினவுகின்றார். இங்ஙனம் மேனாட்டுக் கவிகள் எழுப்பிய வினாவுரைகளைக் கேட்ட வீரர்கள் வேற்று நாடுகளில் என் செய்தனர்? பிரெஞ்சு நாட்டில் ரூசோவின் எழுத்து அந்நாட்டு மக்களைப் புரட்சி செய்யத் தூண்டிற்று. இத்தாலி தேசத்தவரான சோசப் மாசினி, கரிபால்ட்டி ஆகிய இருவரின் சொல்லும் செயலும் எழுத்தும் இத்தாலி நாட்டுக்குப் பெரும் பயன் விளைத்து அந்நாட்டு மக்கட்குச்

சுதந்தரத்தையும் தந்தது. நம் பாரதிதாசன் பாடல்கள் புரட்சிக்கு வழி வகுக்கின்றன. வலியோர் சிலர் எளியோர்தமை வதை புரிந்து வருதலைக் கண்ட உயிர்க்கவி பாரதிதாசன் அச் செயலைக்கண்டு உளங் கொதித்து,

"கொலை வாளினை எடடா
மிகுகொடியோர் செயலறவே
குகைவாழ் ஒருபுலியே
உயர்குணமேவிய தமிழா"

என, கொடுமையகற்றுதற்கு வாளேந்திப் போர் புரியத் தமிழர்கட்கு அறிவுறுத்துகின்றார். கொடுமையின் மிகுதி என்செயத் தூண்டுமென்பதை யாம் கூறவும் வேண்டுமோ?

நம் பாரதிதாசன் அவர்கள் புரட்சிக்கவிகளைப் புனையா திருப்பாராயின், சமூக சீர்திருத்தப் பாடல்களைப் பாடாதிருப்பாராயின், ஏனையோரைப்போல் எளிமையில் புகழைவிரும்பி மக்கள் நலன் நாடாது ஒதுங்கி வாழ்ந்திருப்பாராயின் இன்று தமிழகத்தில் அவர் சிறந்த புலவராக வைதீகப் புல்வர்களால் மதிக்கப்பட்டிருப்பார். பார்ப்பனப் பத்திரிகைகள் அத்துணையும் அவரை ஒருசேரப் புகழ்ந்திருக்கும். புரட்சிக்குப் புகலிடமாய், சமுதாய விடுதலைக்குத்தக்க புலவராய், நாட்டுப் பற்றை ஊட்டும் பாடல்களை வரைந்தளிக்கும் நற்பாவலராய், நம் உயிர்க்கவி பாரதிதாசன் அவர்கள் இலங்குகின்றமையினாலே, மதவாதிகட்கும், மற்றும் பலருக்கும் வேண்டாதவராக நம் பாரதிதாசன் தோற்றமளிக்கிறார். கவி பாரதிதாசனின் உயர்வை இப்பொழுதுள்ளார் அறியாது போயினும் காலம் கணித்து நிறுத்துமென்பதில் ஐயமுண்டோ?

"தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்குநேர்
தமிழெங்கள் இளமைக்குப்பால்—இன்பத்
தமிழ்நல்ல புகழ்மிக்க புலவர்க்குமேல்"

எனத் தமிழைப்பற்றி நம் பாரதிதாசன் பாடிய

பாடல்களை ஒரு தமிழ்மகன் படித்தானாயின் எத்தகைய உணர்வுபெறுவான் என்பதனை யாம் எவ்வாறு உணர்த்த இயலும்? மேலும் இவர் எழுதியுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், காதல், வீரம், கைம்மை நீக்கம், கைம்மைத்துயர், கர்ப்பத்தடை, தமிழ் நாட்டில் சினிமா முதலிய தலைப்புக்களில் அமைந்த பாடல்கள் இயற்கையைப் பிழிந்து எடுத்தமைத்த தன்மையில் அமைந்தனவாகும். 'குடும்ப விளக்கு', 'இருண்ட வீடு' என உடன்பாட்டுப் பொருளும் எதிர் மறைப் பொருளும் உணர்த்த எழுந்த இரு நூல்களும் இக்காலப் பழக்க வழக்கங்களை இனிது விளக்கி மக்கள் கல்வியறிவு உடையோராயும், குடும்பத்தை நடத்த வல்லோராயும் இருத்தல் வேண்டுமென்பதனையும் வலியுறுத்துகின்றன. இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்னும் உரைநடை நூல் போன்ற உயர் நூல்கள் நல்ல வீர உணர்ச்சியை எழுப்பக்கூடியன. வங்காளமொழியிற் சிறந்த கவிஞராகத் திகழ்ந்த கவி ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் தம் தாய்மொழியாகிய வங்காளத்தில் அரிதின் முயன்று யாத்தளித்த "கீதாஞ்சலி" என்னும் கீர்த்திசால் நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று "நோபல்" பரிசு பெற்றுச் சிறந்தாற்போல நம் உயிர்க்கவி பாரதிதாசன் பாடல்களும் இயற்கையை யொட்டி எழுதப் பெற்ற இன்னுயிர்ப் பாக்களாதலின் இவையும், சிறந்த முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றால் "நோபல்" பரிசிற்குரிய பாவாக எதிர்காலத்தில் திகழலா மன்றோ?

இப் புலவர் பெருமான் யாங் கூறியாங்கு எதிர் காலத்தில் "நோபல்" பரிசு பெற்றுச் சிறந்து தமிழ்த் தொண்டாற்றிப் பல்லூழி வாழவேண்டித் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றேன்.

—கோ. சி. பெரியசாமிப் புலவர்
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

# இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்

தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இருபெருங் கவிஞர் 'பாரதி'யும் 'பாரதிதாசன்' என்றழைக்கப்பட்டுவரும் கவிஞர் கோமான் கனக-சுப்புரத்தினமுமே யாவர்.

பாரதி இப் புதிய நூற்றாண்டின் விடிவெள்ளி போல்வரெனில் பாரதிதாசன் அதன் இளவள ஞாயிறென்னலாம். அவரது கவிதை இன்னும் புதுப்புது வகையில் வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றதாதலால் அவரைத் தற்போதைக்கு இளஞாயிறு என்று கூறுவதே பொருத்த முடையதென்று எண்ணுகிறேன்.

பாரதிதாசன் தம்மைப் 'பாரதிதாசன்' என்று கூறிக் கொள்கிறார்-கூறிக்கொள்ள விரும்புகிறார் என்றுகூட அறிகிறேன். ஆனால் இப்பெயர் அவர் தனிப்பெரும் சிறப்பை முற்றிலும் மறைப்பதெனக் கொள்பவருள் யானும் ஒருவன்.

பாரதியார், பழய செக்குமாட்டுப் போக்கைத் தமிழ்க் கவிதை யுலகினின்றும் ஓட்டியவர். அதே வகைக் கவிஞர் 'பாரதிதாச'னும் என்ற முறையில்தான் இப்பெயர் அவருக்குப் பொருந்தக்கூடும். ஆனால் பாரதிதாசன் பழமையைத் தவிர்த்தமட்டிலுமோ, பாரதியைப் பின்பற்றியதில் மட்டிலுமோ அவர் பெருமை அமைந்துவிடவில்லை. 'பாரதிதாசன் கவிதைகள்' வெளிவந்துள்ள தொகுதியைமட்டும் வாசிப்பவர்கள் அவரையும் பாரதியுடன் இணைத்துக் கூறலாம். ஆனால், அவர் புரட்சிக் கவிதையும் ஒன்றிரண்டு சிறுபாடல்களும் இவ்வெல்லையைத் தாண்டிவிட்டன. அவருடைய இன்றைய நூல்கள் பாரதியாரின் எல்லையைக் கடந்து பலவகையிலும் விரிவு பெற்றவையாய் விளங்குகின்றன.

பாரதியார் கண்ணன் பாட்டில் தம் காவியப்பண்பை முதலில் சுட்டிக்காட்டிக் குயில் பாட்டில் அதன் மலர்ச்

சியை வெளிப்படுத்தினார். அவர் புகழ் இவ்விரண்டையுமே பெரிதும் சார்ந்துளது. இவற்றினும் பெரிய அளவில் அவர் காவியம் அமைக்க அவர் செய்த முயற்சியே பாஞ்சாலி சபதம் ஆகும். பாரதியார் ஒரு செடி அளவில் விட்டுச்சென்ற இக் கவிதைப்பயிர் பாரதிதாசன் நூல்களில் கொடிப்பந்தர்களாகவும், நன்செய் வயல்களாகவும், சோலைகளாகவும், காடுகளாகவும் வளர்ந்து அழகும், ஆழமும், விரிவும் செறிவும் பெற்றுத் திகழ்கின்றது. கவிதைக்குக் கவிதை; கதைக்குக் கதை; நாடகத்துக்கு நாடகம்; உரைநடைக்கு உரைநடை, எனப் பாரதிதாசன் கவிதை தன் முழு எல்லையிலும் பரந்து அதற்கப்பாலும் சென்றுள்ளது.

பாரதியார் சிறப்புவகையில் இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்; புதுயுகக் கவிஞர்; பாரதிதாசன் சிறப்புவகையில் இருபதாம் நூற்றாண்டின் கவிஞர் ஆவதோடு பொதுவகையில் எல்லா நூற்றாண்டுக்குமே உரியவர். பாரதியார் புது 'யுக'த்தின் எதிரொலி. பாரதிதாசனோ புதுயுகத்தின் எதிரொலி மட்டுமின்றி 'யுகாந்தரங்க'ளின் எதிர் ஒலி முழக்கமும் ஆவர்! ஏனெனில், அவர் புதுமையுடன் பழமையையும் இணைத்து என்றும் நின்று நிலவும் புதுமையுருவை நமக்குத் தந்துள்ளார். அவர் கவிதையில், சங்க காலத்தில் காணப்படும் வாய்மையையும் திணைநெறி வழாமையையும் காணலாம். ஆனால் அதன் கடுஞ்சொல் வழக்கும், புதைபொருள் மயக்கமும், செயற்கைச் சூழல்களும் இங்கே இல்லை. இடைக்காலக் காவியங்களின் கவின் நடையையும் புனைவுகளையும் இதில் காணலாம். அவற்றின் பொய்ம்மைகளும் பசப்புரைகளும் குறிக்கோளற்றுக் கும்பலுடன் கூத்தாடும் குளறுபடிகளும் இதில் கிடையா. பாரதி ஒருவரையன்றிப் பாரதிதாசனுடன் ஒப்பிட்டுக் கூறத்தக்க கவிஞர் பிற்காலத்தில் எவருமில்லையென்னலாம்.

காளிதாசனையும், ஷேக்ஸ்பியரையும், மில்ட்டனையும் மொழிபெயர்க்கப் புகுந்த புலவர்கள் தமிழ்நாட்டில் தமிழர் உயிருட் கலந்து தமிழர் வாழ்வு வாழும் இறவாக் காளிதாசனும், ஷேக்ஸ்பியரும், மில்ட்டனுமான ஒரு கவிஞரை (பாரதிதாசனை) அறிந்துகொள்ள முயலாதது

அவர்களின் தற்கால அடிமையுணர்ச்சியையே காட்டுகின்றது. பழம்புலவர் நடை புரியாவிடினும், புரிந்துகொள்ள வைக்கப் பாடுபடும் இவர்கள், பிறநாட்டுக் கவிஞர்கள் கவிதையையும் பழங்காலக் கவிஞர் கவிதையையும் மாத்திரைக் கோலின்றித் தமிழரிடையே புத்துயிர் பெற்றெழும்படிச் செய்யப் பாடுபடும் இவர்கள், தம் பக்கம் நின்று, அனைவருக்கும் புரியும்படிபாடும் உயிருள்ள கவிஞன் குரலை ஏனோ உணருகின்றிலர்?

பழமைக் கவிஞர்கள் மக்கள் வாழ்க்கையாகிய பாதையில் முன் நோக்கியோ அல்லது பக்கம் நோக்கியோ கூட நடப்பவர் அல்லர். பின் நோக்கி நடப்பவரே ஆவர்!

பாரதிதாசன் மொழிவரை யறையால் தமிழ்க் கவிஞர். ஆனால் கருத்தளவையால், கவிதைச்சுவை யளவையால், மொழி எல்லையையும், நாட்டு எல்லையையும் கால எல்லையையும் கடந்த உலகக் கவிஞர்களுள் ஒருவர்.

பிற மொழிகளில், அவர், சிறு நூல்கள்கூட மொழி பெயர்க்கப்படுமேல் இது ஒருவாறாக உலகிற்கு விளங்கு மென்று எண்ணுகிறேன்.

பாரதிதாசன் தனித் தமிழ்க்கவிஞர் ஆவர். அவர் நூல்களைக் கால வரிசைப் படுத்தி வாசிப்பவர், அவற்றின் கவிதைத் தன்மையின் வளர்ச்சியோடு தனித்தமிழ் நடையிலும் வளர்ச்சியிருப்பதைக் காண்பர்.

தனித் தமிழ்ச் சொற்களிலெல்லாம் தமிழர் இலக்கிய மாண்பு செறிந்திருத்தல் கண்டு அவர் வரவர மிகுதியான ஆர்வத்துடன் அவற்றை வழங்கிவருகிறார். அதோடு தனித்தமிழார்வம் மொழித் துறையில் தமிழன் விடுதலை வேண்டுவதைக் குறிக்கும் என்றும்; அதனைப் போற்றுவது தமிழர் இயல்பு என்றும் அவர் கொள்கிறார். "அழகின் சிரிப்பில்" 'தமிழர் ஆவோர் தனித் தமிழ்ச் சொல்லை யழியாதுகாக்கும் மரபினரே' என்று அவர் கூறியுள்ளார்!

—கா. அப்பாத்துரைப்பிள்ளை,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி

கட்டுக் கடங்காதவன் கவி. கவியைப் போன்ற சுதந்திர புருஷன் மக்களில் வேறு யாருமில்லே.

கவி, ஒரு விசித்திரமான மனிதன். அவன் வயிறு காய்ந்துகொண்டிருக்கும். அவன் அதைப்பற்றிக் கவலே யில்லாது, ஏதோ ஒரு கற்பனேயுலகில், ஏழாவது உப்பரி கையில், உல்லாசமாக ஒரு பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருப்பான். அல்லது ஒரு தலேவனே, அவன் தலேவியிடமிருந்து பிரியச்செய்து, அவனேயும் அவளேயும் காதல் நோயால் வாட்டி வதைத்துக்கொண்டிருப்பான். நாம், 'சீ' என்று துரத்தும் கருங் காக்கையிடமிருந்து, அவன் ஓராயிரங் கதைகள் கேட்டுக்கொண்டிருப்பான்.

அவன் உள்ளத்தினின்று ஊற்றெடுத்துப் பாய்வதே கவிதை.

அக் கவிதைகள் கடவுளேப்பற்றியதாக விருக்கும். கழுதையைப் பற்றியதாகவு மிருக்கும். பக்தியைப் பற்றிய தாகவிருக்கும். பரத்தையைப் பற்றியதாகவு மிருக்கும்.

தென்னேமரத்தின் குருத்தோலேயும், பழுத்தோலேயும் வாழ்க்கையின் தத்துவங்களேப்பற்றித் தீவிரமாகப் பேசிக் கொண்டிருப்பதாக கவி பாடிடுவான்.

கவிக்கு இறக்கைகள் உண்டு. அவன் எங்கும் பறந்து செல்வான். கடலுக்குள் மூழ்கி முத்துக் குளிப்பதுபோல், கவியும் மனிதரது உள்ளத்தில் புகுந்து அலசிப் பார்த் திடுவான்.

அன்னே தன் குழந்தைக்கு அமுது படைக்கிருள். அழகான ஆடையும், அணியும் தருகிருள். குழலே வாரிப் பின்னுகிருள். பூச் சூட்டுகிருள். நெற்றியில் பொட்டிட்டு முத்தமுங் கொடுக்கிருள். கல்வி யூட்டுகிருள். கதைகள் சொல்லிக் களிப்பூட்டுகிருள். கடிந்தும் பேசுகிருள். கட்டளேகள் போடுகிருள். கசப்பான மருந்துங் கொடுக் கிருள். கவியும் இப்படியே. அவன் சமுதாயத்துக்குப் பற்பலவிதமான கவிதைகள் கொடுப்பான்.

சில சமயம் அவன் கவிதைகள் தித்திப்பான பட்சணங்கள் போலிருக்கும். சிலசமயம் ருசியற்ற தவிடுபோன்றிருக்கும். சில சமயம் வேப்பங்கனி போன்று மிருக்கும்.

ஒரு கவிதை குழந்தை கொஞ்சுவது போன்றிருக்கும். மற்றொன்று! காதலர் கதைப்பது போன்றிருக்கும். வேறொன்று எரிமலை கக்குவது போன்றிருக்கும்.

கவிதையைப் படித்துச் சிலர் இன்புறுவார்கள். சிலர் வியப்புறுவார்கள். சிலர் மெய் சிலிர்ப்பார்கள். சிலர் சினம்பொங்கி எழுவார்கள். சிலர் வீரம் பெறுவார்கள். சிலர் சோகமுற்றுக் கண்ணீர் வடிப்பார்கள். சிலர் ஆனந்தக் கூத்தாடுவார்கள்.

கவிதைக்கு இலக்கணம் உண்டு; கவிஞனுக்கு இலக்கணம் இல்லை. கவியின் உள்ளம் களிப்புறமட்டும் கவிதைகள் பிறந்தால் போதாது. நமது உளமும் அக் கவிதைகளால் களிப்புறவேண்டும்.

கவியைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தின் நிலைமை சிறப்புறத்தக்க கவிதைகள் தோன்றியே தீரவேண்டும். சமுதாயச் சூழ்நிலைக்குக் கவியானவர் தனதுள்ளத்தையும், உணர்ச்சியையும் பறிகொடாதிருக்க முடியாது.

சமுதாயம் மடமையில் ஆழ்ந்திருக்கும். சமுதாயத்தில் கொடுமைகள் சூழ்ந்திருக்கும். சமுதாயம் கூக்குரல் கிளப்பாது பிணம்போல் உறங்கிக்கிடக்கும். இந்நிலையில் சமுதாயத்தைத் தட்டி யெழுப்பவேண்டிய கடமை கவிஞனுடையதாகிறது.

கவிஞனின் உள்ளமும் உணர்வும் சமுதாயச் சூழ்நிலைகளால் மாறுதலடைந்தே தீரும். அம் மாறுதலின் விளைவால் கவியினுள்ளத்தில் புரட்சி தோன்றும். புரட்சிக் கவிதைகள் பிறக்கும். அதனால் சமூகம் விழிப்படையும். செழிப்படையும்.

எத்தனை பெரிய புயலடித்தாலும், மலை அசைவதில்லை. அதைப்போல் சமூகத்திலே என்ன நேர்ந்தாலும், என்ன விளைந்தாலும், கவியுள்ளம் மலைபோல் அசையாதிருக்கும் என்று எண்ணமுடியாது, சொல்ல முடியாது,

இருக்க முடியாது. இது உண்மை. சதாசர்வ காலமும் வானையும், மீனையும், மலரையும், மலையையும், வனத்தையும், மணத்தையும், காலைக் கதிரவன் நிறத்தையும், மாலைச் செவ்வானத்தின் நிறத்தையும், அந்திப் போழ்தையும், அதன்பின் தோன்றும் நிலவையும், அதன் ஒளியையும், அவ்வொளியில் காயும் பெண்ணையும், அவள் துகிலைக் கலைக்குங் காற்றையும், அத்துகிலுள் காணும் உடல் வனப்பையும், அவ்வுடலுள் ஆடும் உளத்தையும், அதன் நினைப்பையும் பற்றியே, கவிவாணர் கவிதைகள் புனைந்து கொண்டிருக்க வேண்டுமென நாம் கருதுவது தப்பாகும். அத்தகைய கவிதைகளே அமரத்துவம் பொருந்தியவை என்று நாம் கருதிக் களிப்பதும் நகைப்புக்கிடமாகும்.

உப்பரிகையின் முற்றத்திலே, நிலவொளியிலே, காதற் கதைகள் பேசும் கணவனும், அவன் தன் காதற் கிழத்தியும் கவிதையின் பாத்திரங்களாய் அமைந்தால் மட்டும் போதாது.

அதே மாடியின்கீழே, தெருவோரத் திண்ணையிலே, நாளெலாம் நாய்போல் அலைந்து திரிந்தும், ஈனவயிற்றை நிரப்ப முடியாமல், மெய்சோர்ந்து, கண்கள் இருண்டு, காதுகள் பஞ்சடைந்து, நெஞ்சம் புழுங்கிக்கொண்டிருக்கும் ஏழையும், அவன் ஏக்கமும், அவன்பால் சமூகம் காட்டுங் கொடுமையும், சமூக அமைப்பின் அநீதியும் கவியின் உள்ளத்திலிருந்து கவிதைகளாகப் புறப்பட்டாக வேண்டும்.

இன்று நம்மிடையே வதியும் **கவிஞர் பாரதிதாசனை** எடுத்துக்கொள்வோம். அவர் கவி. சிறப்பான கவி. கவிதையுள்ளம் படைத்தவர். அவ்வுள்ளத்தை இன்று ஆட்கொண்டிருப்பது தமிழ். தமிழர் என்னும் உணர்ச்சி தமிழ் நிலை குலைந்துவிட்டது. தமிழர் சீர்குலைந்துவிட்டனர். தமிழரைக் கவி தட்டி யெழுப்புகிறார். தமிழின் பெருமையைத் தாரணிக்கு எடுத்துக் காட்டுகிறார். தமிழர் வீழ்ச்சியுற்ற காரணத்தையும், அவ் வீழ்ச்சி இன்று மீட்சி பெறும் அவசியத்தையும், வழியையும், அவர் உள்ளத்தினின்று பாயும் உயர்ந்த கவிதை மொழிகளால் எடுத்தோதுகிறார்.

"வஞ்சகர், வந்தவர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம் செயல், ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார்
தமிழனே இது கேளாய்"

என்று உறங்குந் தமிழனைத் தட்டி எழுப்பிக் கூறுகிறார். தமிழ்க் கவியுள்ளம் தமிழரின் கவியுள்ளம் அவ்வாறு கூவுகிறது.

"நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல்இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்."

என்னும் மொழிகள், தமிழனின் நெஞ்சில் அமரத்துவம் பொருந்தி நிற்காது போகுமா?

"தமிழரின் மேன்மையைஇகழ்ந்த வனை, என்
தாய்தடுத் தாலும்விடேன்
எமைநத்து வாயென எதிரிகள்கோடி
இட்டழைத் தாலும்தொடேன்"

என்ற கவியின் வீரமும் உறுதியும் கலந்த சொற்கள் சாவை எதிர்பார்த்து நிற்கும் கிழத் தமிழனையும் வாலிப னாக்கும் அல்லவா?

மறையுமோ இச்சொற்கள் தமிழரின் உள்ளத்தி னின்று? மறப்பனோ எத்தமிழனும் இக் கவிதனை?

மற்றவர், மாற்றார் இம்மொழிகண்டு அஞ்சலாம். எள்ளி நகைக்கலாம். இதுவும் ஓர் கவிதையோ, இவரு மோர் கவிஞரோ என்று ஏசலாம்; பேசலாம். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

தமிழன் அடிமையாகிவிட்டான். ஆண்மை குன்றி விட்டான். மடமையிலாழ்ந்து, "இருண்ட வீட்டில்" முட்டிக்கொள்கிறான். உழைப்பவர்க்கு உணவில்லை. வாழ்வினில் சுகமில்லை. சிலர் சுரண்டுகிறார்கள். பலர் சுரண்டப்படுகிறார்கள். அந்நியர் நம்மனைவர்மீதும் ஏறிச் சவாரி செய்கிறார்கள். சாதி, சமயம், சுயநலம், உயர்வு,

தாழ்வு, மூடப் பழக்க வழக்கங்கள், தப்பான எண்ணங்கள் என்று பல நோய்கள் தமிழனைத் துன்புறுத்துகின்றன.

நாயும் வாழ நாணும் சேரிகளிலே, கீற்றுக் குடிசையெனும் ஓட்டைக் குடிசையிலே, உடலை மறைக்கத் துணியும், குடலைநிறைக்கச் சோறுமின்றி, செல்வந்தரால் சுமத்தப்படும் உழைப்புக்கும், அவமதிப்புக்கும் யாதொரு குறைவுமின்றி, உயிரைக் கையால் பிடித்துக்கொண்டு, உணர் விழந்து, உடல் மெலிந்து, ஒளியிழந்து, மதியும் மானமும் அறவே இழந்து, பொருளும் நலனும் யாதென அறியாமல், வறுமையின் வித்தாய், துன்பத்தின் உருவாய், பிணியின் களஞ்சியமாய், தவிக்கும் தமிழனை உயர்த்த வேண்டும் எனப் பாரதிதாசனின் கவியுள்ளம் துடிக்கிறது. அவர் :

"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம் இதைத்தான்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டு கண் டந்திக்குப்பின்
விண்மீனுய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!"

என்று, தன் தமிழ்த் தம்பிக்கு எடுத்துக் காட்டுகிறார்!

சிலர், கலைக்காகமட்டும் கலை வேண்டுமென்கிறார்கள். இன்பம் நுகரவே கவிதை வேண்டும் என்கிறார்கள்.

துன்பம் நீங்கின இடத்தில்தானே இன்பம் விளையும் என்பதை அவர்கள் மறந்து பேசுகிறார்கள்.

என் நண்பரொருவர். கலாரசிகர். "பிச்சைக்காரன்" என்ற நாடகத்தைப் பார்க்க, குடும்ப சமேதராய், முப்பது ரூபாய் கொடுத்துக் கொட்டகையில் முன்னிடம் தேடுவார். நாடகம் பார்க்கப் பார்க்கப் பரமானந்தம் அடைவார். "அடடா! பேஷ்! பேஷ்! எவ்வளவு உயர்வான நடிப்பு! இதுவன்றோ கலை! இவனன்றோ கலைஞன்!" என்று வாய்விட்டுக் கதறுவார்!

பிச்சைக்காரனாய் நடித்தவனை வானளாவப் புகழ்ந்து பேசி, அவனுக்கொரு தங்கப் பதக்கமும் பரிசாகக் கொடுத்துவிட்டுக் கொட்டகையினின்றும் வெளியேறுவார்!

வழியிலே ஒரு பிச்சைக்காரன். நடிகனல்ல! உண்மையான பிச்சைக்காரன். அவனுக்கு ஒரு கால் இல்லை. ஒரு கவுட்டியைக் கக்கத்தில்வைத்து ஊன்றி, அதன் ஆதரவில் நின்றுகொண்டு:

> காலற்ற நொண்டி ஐயா—எனைக்
> காத்திட வேண்டும் ஐயா!

என்று கரமேந்திக் கதறுகிறான். என் நண்பர்—கலாரசிகர் அவனைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

பிச்சைக்கார வேஷத்தில் தோன்றியவன்மீது அவருக்குப் பரிவு ஏற்பட்டது. உண்மையான பிச்சைக்காரன் மீது அவருடைய கடைக்கண் பார்வையும் செல்லவில்லை.

கலையை கலைக்காகமட்டும் ரஸிக்கும் அறிஞர் அவர்! பிச்சைக்காரனின் வாழ்வைச் சுட்டிக்காட்டி, ஜன சமூகத்தின் கண்களை விழிக்கச்செய்ய வேண்டுமென்ற நாடக ஆசிரியரின் உட்கருத்தை நமது நண்பர் உணரவும், ஒப்புக்கொள்ளவும் மாட்டார், அதை நாம் எடுத்துக் கூறினால், "என்ன மதியீனம்! கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுபோவதா?" என்று அவர் நம்மீது சீறிவிழுவார்!

கவிதா ரஸிகர்களும் இத்தகையோர் இருப்பார்கள். அவர்களுக்கு பாரதிதாசனின் கவிதைகள் எப்படியோ என்னவோபோலிருக்கும். அவர்களைப்பற்றி நமக்காவதென்ன?

பாரதிதாசன் தமிழ்க்கவி. தமிழரின் கவி. தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி. தமிழரின் புகழ் மீண்டும் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி. அவர் நமது கவி!

அவரும், அவரது கவிதையும், தமிழும், தமிழரும் நீடூழி வாழ்க!

—கோவை அ. அய்யாமுத்து

உள்ளம் பண்பட இயற்றமிழும், மொழி கனிந் தினிக்க இசைத்தமிழும், செயல்வளம் சிறக்க நாடகத் தமிழும் பண்டைத் தமிழர் கண்டனர். பல நூற்றுண்டு களாகத் தமிழ் இலக்கிய உலகம் வறட்சியுற்றது. அயலார் ஆட்சி அழலில் அது வெந்தழிந்த பாலைவன மாயிற்று. நல்லார் இதயக் கடல் நீரெல்லாம் வெம்பி வானிற்புக. கருமேகங்கள் திரண்டு கவிந்தன. உலர்ந்த உள்ளங்களைக் கோடை இடியெனத் தட்டி யெழுப்பி, மீண்டும் தளிர்க்கச் செய்யும் விடுதலை வெள்ளப் பெரு மழைகளாகக் கொட்டின. வங்கத்தை வளம்படுத்திய தாகூரும், தமிழுலகிற்குப் புத்துயிரளித்த பாரதியாரும் குறிப்பிடத்தக்க கொண்டல்கள் காலத்திற்ருேன்றிய பருவமழைகள்.

இன்று பாரதியார் வழித்தோன்றல்கள் எனச் சொல்லத்தக்க கவிஞர்களில் குறிப்பிடத்தக்க மூவர் இன்றுமுளர். பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை, இராமலிங்கம் பிள்ளை ஆகிய மூவர்களுடைய பாக்களி லும் எளிய நடையும், இனிமையும் ஒருங்கே கண்டு களிக்கின்ருேம்.

தேசிகவிநாயகம் பிள்ளை கவிகளில் இயற்கையின் எல்லையற்றவளமும், இராமலிங்கம் பிள்ளை பாக்களில் காந்தீய-தேசிய விடுதலைக் கருத்துகளும் சிறப்பாக எடுத் தாளப்படுகின்றன. எனில் பாரதியின் ' புரட்சிப்போக்கு ' அவரது தாசரின் சுவை மிகுந்த கவிகளில்தான் அதிகமாக மிளிர்கின்றது. 'புரட்சி! புரட்சி! புரட்சி! எங்கு நோக்கினும் புரட்சி! எதனிலும் புரட்சி!' இம்மொழியே இவர் போற்றும் மறை!

'சஞ்சீவி பருவதத்தின் சாரலிலே' வேடுவக் குப்ப னிடம் வாடாப்பூ வஞ்சி மூலிகை வேண்ட காதற்குப்பன், 'பறந்தான் பருவதமேல் பாங்கியையும் தூக்கியே'

அருந்திய மூலிகையால் நானிலமக்கள் தாம் வேறுபட்ட பேச்சுக்களையும் செவியில் உணர, எங்கோ நடந்த இராமாயணக் கதையில், அநுமன் சஞ்சீவிமலையைத் தூக்கும் பகுதியைக் குப்பன் கேட்டு, நடுங்கிக் காதலை மறந்து கதறுகிறான்.

அந்நிலையில் வஞ்சி :

"மன்னும்உலகம் மறைந்தொழியுங் காலமட்டும்
பின்னும், மலைதூக்கும்மனிதன் பிறப்பதில்லை
பொய்யுரைப்பர், இந்தப்புவியை ஒருசிற்றெறும்பு
கையால் எடுத்ததென்பர், ஐயோஎன் றஞ்சுவதோ?
உள்ளபகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது...
மக்கள்உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்கவேண்டும் இதயத்தில்' ஈதன்றி
நல்லறிவைநாளு முயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப்போக்கிப் புதுநிலை தேடல்வேண்டும்"

எனக் கொஞ்சும் கிள்ளைமொழிகளால் மடமையுமச்சமு மகற்றக் கேட்கின்றோம்.

மன்னன் தன் மகள் அமுதவல்லிக்கு கவிதை இயற்றக் கற்பிக்கும்படி உதாரனை நியமிக்க "பிறர் சூழ்ச்சி, செந்தமிழை அழிப்பதுண்டோ? நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையில் போட்டால் நிறை தொழிலாளர்கள் உணர்வு மறைந்துபோமோ?" என்றபடி இருவருக்கும் நடுவில் இட்ட திரைச்சீலை விலக, நங்கை தன் காதல் நவில, கவிஞன் அயர்ந்து,

"உண்ண முடியாதே, ஊராள்வோன் கூர்வாளும்
வண்ணமுடிச் செல்வாக்கும் வந்து மறிக்குதடீ
எண்ணக்கடலில் எழுங்காதல் நீளலைதான்
உண்ணும் மணிக்குளத்தில் ஓடிக்கலக்காமல்
நால்வருணங்கள் விதித்தார் நாட்டார்கள்
... ... ... ... ... ... ...
காதல்நெருப்பால் கடலுன்மேல் தாவிடுவேன்
சாதியெனும் சங்கிலிஎன் தாளைப்பிணித்ததடீ"

எனத் தெரிவித்தபின், தெரிவை தேற்ற உதாரன் அவளை அணுகிறான். பின்னர் அரசனறிந்து உயிர்த்தண்டனை விதிக்க கொலைக்களத்தில் கூடிய மக்களிடம்,

"சிரம்அறுத்தல் வேந்தனுக்குப் பொழுதுபோக்கும்
சிறியகதை ! நமக்கெல்லாம் உயிரின்வாதை"

எனப் பல மொழிந்து, 'புரட்சிக் கவிஞன்' நீதிகெட்டு முழங்க. நாட்டு மக்கள் சீறி எழுந்து, இருவருக்கும் மீட்சி தந்து குடியாட்சி நிறுவுகின்றனர். மூடநம்பிக்கைகளையும் வருண பேதங்களையும் கடிந்து காதலைப் போற்றும் இக் கவிஞரின் இதயவொளி இக்கவிகளில் மிளிர்வதை எளிதில் காணுகின்றோம்.

வீழ்ந்த தமிழன் உயர்வுகருதும் பெருமையை 'என்னாளோ' எனும் கவியில் பேசுகின்றார்.

"ஆட்டும்சுட்டு விரல்கண்டே
ஆடிற்று வையம்என்று
கேட்டுநான் இன்பஊற்றுக்
கேணியிற் குளிப்பதென்றோ ?
விண்ணிடை இரதம்ஊர்ந்து
மேதினி கலக்குதற்கும்
பண்ணிடை தமிழைச்சேர்த்துப்
பாரினை மயக்குதற்கும்
மண்ணிடை வாளையேந்திப்
பகைப்புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர்உள்ளார்
எனும்நிலை காண்பதென்றோ".

காதற் குடும்பம், இல்லறவாழ்க்கையில் இன்பம். எனில் இந்நாள் அதன் நிலை என்ன ? அதில் ஓர் கட்டம்,

"தொத்துநோய், ஏழ்மை, பணக் காரர்தொல்லை
தொடர்ந்தடிக்கும் கூரையிலே பிள்ளையோபிள்ளை
... ... ... ... ... ...
எழில்மனைவி தன்னுடலில் முக்காலும் தேய்ந்தாள்
... ... ... ... ... ...
வரும்படியை நினைக்கையிலே உள்ளமெலாங்நோகும்

வாராத நினைவெல்லாம் வந்துவந்து தோன்றும்
துரும்பேனும் என்னிடத்தில் சொத்தில்லை......
இரும்பானான் செத்துவிட்டால்என் பிள்ளைகட்கே
என்ன கதி ?"

எனக் கணவன் வருந்திக் கரைந்து தெருத்திண்ணையில் துயில்கொள்ள, அருமனைவி வந்து மலர்க்கரத்தால் தொட்டு,

"தெருவினிலே பனிஎன்றாள். ஆமென்றுசொன்னேன்
தெரிந்துகொண்டேன் அவள் உள்ளம் வார்த்தை
[என்னதேவை ?"

எனக் கனிகின்றான்.

பழம் புலவர்கள் அகத்துறைச் செய்யுட்களில் எங்கும் நாம் காணாததும் இன்றுள்ள அடிமை வாழ்வில் புகுந்ததுமான ஒரு புதுமைப் பிரிவும் அது சிறிதும் நிற்காது சிதறுவதும்,

"காதலுக்குவழி வைத்துக்கருப் பாதைசாத்தக்
கதவொன்று கண்டறிவோம், இதிலென்னகுற்றம்"

என்று வழி தேடுவதும் காண்கின்றோம்.

"கடையர்" "செல்வர் என்றதொல்லை
கடவுள்பேர் இழைத்ததே" என்றும்

வறுமைக்கு மாற்றாக,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதயப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பாநீ"

என்றும்,

"அச்சமே கீழ்மக்கள் ஆதாரமன்றோ"

என்றும் கூறுகிறார் புரட்சிக் கவி.

எல்லையற்ற இன்பம், துன்பம், இருள், ஒளி, வெளி, இறுதி, ஊழ், இன்னோரன்ன பல பொருள்களிலே ஒன்றைக் கருத்திலே உருவாக்கிக் கற்பனையிலே வடித்து, திரையில் தீட்டிய ஓவிய வண்ணங்களாலோ, பாக்

களிலே புனைந்த பேசும் பொற் சித்திரங்களாலோ, பிறர் மனதில் பிரதிபலிக்கச் செய்வது, ஆன்ற பெரும் புலவருக்கும் அரியதொன்றும்.

பாரதியார் காளியின் ஊழிக்கூத்தில் நாட்டம் வைத்தார். அண்டம் வெடிக்கிறது. எங்கும் இடியும் இரத்த வெள்ளமும்! பூதங்கள் வெறியாட்டம்! மண்ணும் விண்ணும் மற்றுளவும் சிந்திச்சிதைதல் சக்தி வேகம். சிந்தைக்கலைதல். தலைகளுடைதல். விழி அனலில் எத்திக்கும் எரிதல். "காலத்தோடு மூவுலகும் நிர்மூலப் படுகின்றது." அன்னையின் ஊழிக்கூத்து என்னகோலம். என்ன கோரக்காட்சி!

ஆனால் அவருடைய தாசராகிய நம் புரட்சிக்கவியோ உலகத்தாயின்கூத்தில்' ஓர் உவகைக் காட்சியை எழுப்புகின்றார்.

"கருமுகிற் கூந்தல் அவிழ, இடையினின்று அலையும் பூந்துகில் பெருவெளி எங்கும், புதுநகை மின்னித் துலங்க ஒரு கையில் வானப் பெருவில்லும், ஒரு கையில் கதிர் வேலும் ஏந்தி, அடுநீள்விழியிற் கனலைப் பெருக்கி, மடமைப் பகையும் சாகப், பின்வருமோர் கொடுமைகொள் வறுமைத் தீயும், அலறிப்புறமேக, அடிமைத் தனமே துகள் துகளாக அறிவே உயிராய், அதுவே அவளாகி, குறியும் செயலும் ஒன்றாய் இயலக் கூத்தாடுந் தாய் பார்த்திடுந்தோறும் உவகை! உவகை!

காலம் நம் புரட்சிக்கவியின் காலடியில் காத்து நிற்கின்றது. மன்னுயிர் சிறக்க, தமிழர் மீண்டும் தம் தனிப்பெரு நிலையெய்தத் தன் கவிகளைக் கொட்டுவாராக!

வாழ்க புரட்சிக்கவி பாரதிதாசன்!

—சோ. இலக்குமிரதன் பாரதியார்
நிர்வாக அதிகாரி 'தினமணி'

கடவுள், காதல், யுத்தம், புகழ்ச்சி, நீதி என்ற பாதையில் நெடுங்காலமாக ஓடிய தமிழ்க் கவிதை, பாரதி யுகத்தில் ஒரு புதிய நோக்கைப் பெற்றது. பாரதியார் பழைய லட்சியப் பாதையினின்று விலகிச் செல்லவில்லை; விலகவும் முயலவில்லை.

கம்பீரமான கோவில்களும், கம்பீரமான விருத்தங்களும் தமிழ்ப் பண்பை எவ்வளவு உயர்வுபடுத்துகிறதோ, அவ்வளவு, லகுவான பண்களும், சிறு சிறு சந்தங்களும் அழகு செய்யமுடியும் என்பதைக் காட்டிவிட்டார். அவருடைய காதலியான கண்ணம்மாவுக்கு, 'பாலத்துச் சோசியனும் கிரகம் படுத்தும் என்று' சொல்வான்; அவருடைய தெருவிலே விளையாட்டுப் பிள்ளையாகத் திரியும் கண்ணன், பெண்களுக்கு ஓயாதத் தொல்லையாகக் கொம் மாளம் அடிப்பான். அவருடைய இதயபீடத்தில் அமர்ந்த கடவுள்கள், எங்கோ, எப்போதோ என்று சொல்லும் படியான எட்டாப் பொருள்கள் அன்று; சித்தாந்தம் படைத்த உருவமன்று; தூரத்திலே நின்று கும்பிட்டு மட்டும் வழிபடும் தெய்வங்களன்று. நம்முடன், சதையும் ரத்தமுமாய் உறவு கலந்து, நம்முடன் ஒன்ருக, நம் தோள்மீது கைபோட்டு உலாவும் தெய்வங்கள், பாரதியாருடன் சென்ருல் கடவுள்களின் உண்மை நமக்குத் தெரிய வரும்; நம் மன்னிப்புக்கும் அன்புக்கும் உரியவர்களாகத் தென்படுகிருர்கள். பாரதியின் பணி அது.

ஆனல், * 'எழுக புலவன்' என பாரதியாரின் ஆசியைப் பெற்ற பாரதிதாசன் நோக்கத்தில் முற்றிலும் மாருனவர்.

---

* பாரதியார் : தராசு

" பரமசிவன் வந்துவந்து வரம் கொடுத்துப் போவார்
பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும் "

என சினிமாப் படங்களையே வியாஜமாகக்கொண்டு கடவுள், சமயம் முதலிய அங்கீகரிக்கப்பட்ட சகல கருத்துக்களையும் தாக்குபவர். தாக்குவதில் விசேஷ ருசியுடன் (திருப்பணி செய்யும் பக்தர் கூட்டத்தைப் போலல்லாமல்) சாக்கிய நாயனாராக நின்று கல்லாலடிப்பவர். காவிய முறை, கட்டுக்கோப்பு, உவமை சமத்காரங்கள் ஆகிய வற்றில் இவர் பாரதியாருக்குச் சற்றும் சளைத்தவரல்ல.

அவருடைய புதிய உவமை நயங்களைமட்டும் தொகுப்பது என்றாலே ஒரு தனிப் பிரசுரம் வெளியிட முடியும். இன்று கவிஞர் என்று பெயரெடுத்து உலாவும் பெரியார்களில் இவரது உவமையும் நண்பர் ச. து. சு. யோகியாரின் வாக்கு தாட்டியுமே எனது மனசைக் கவர்ந்துள்ளன. மற்றவர்கள் அப்படியப்படித்தான்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதம் ஒரு எரிமலை. நம் நாகரிகம் நோக்கு இழந்து, நெறி தவறி கால் தள்ளாடி விட்டதே என்ற கொதிப்பில் பிறந்தது. அந்த ஆவேசத்தை பாரதிதாசனிடம் பார்க்க வேண்டுமாகில் 'புரட்சிக் கவி'யில் ஓரளவு காண முடியும். ஓரளவு எனக் கூறுவதற்குக் காரணமுண்டு. சூதின் வெறியால் மனைவியைத் தோற்று, அவள் மானபங்கப் படுத்தப்படுவதை, மதோன்மத்தமாக திக்குத் திசை தெரியாமல் கூத்தடிக்கும் வெற்றி வெறியை, தோற்றவர்களின் கொதிப்பை, பகடைக் காயாகச் சீரழியும் பாவையின் வேகின்ற நெஞ்சை, சூழ்நிலையாகக் கொண்டு தீட்டப்பட்ட ஒரு ஓவியம் பாஞ்சாலி சபதம். புரட்சிக்கவி அப்படிப்பட்டதல்ல . நீதியென்றும், ராஜவம்சம் என்றும் சொல்லிக் கொண்டு, காதலை வாளுக்கிரையாக்க முயலும் ஒரு மன்ன

னுடைய முயற்சியைக் குலைத்துவிடும் சமத்காரப் பெருமைக்குக் கொண்டுவிடும் நேர் ஒழுக்கான கதைப் போக்கு. உதாரன் தேச மகா ஜனங்களிடை மன்ன னுக்கும் தனக்கும் நேர்ந்த வழக்கை எடுத்துச் சொல்லு கிறான். உதாரன் நாடியது ஒன்று; நடந்தது வேறு. ஜனங்களுடைய மனசை உருக்கவைப்பதற்காக அவன் பேசினான்; அது ஜனங்களின் மனசில் கொந்தளிப்பை ஏற்படுத்துகிறது. வீராப்பு பேசிய மன்னன் ஜனங்க ளுடைய கோபாவேசம் கொதித்துப் பாயு முன்பே ஓட்ட மெடுத்துவிட்டான்.

'பில்ஹணன்' (புரட்சிக்கவி) கதை பழைய கதை. அந்தப் பழைய கதையிலே பட்டமஹிஷி, பிராமணனைக் கொல்லக்கூடாது என்ற நியாயத்தை எடுத்துச்சொல்லி, அவனது மனசைத் திருப்புவதாக முடிகிறது. ஆனால் புதிய கற்பனையோ எனின்,

"சிரம் அறுத்தல் வேந்தனுக்குப் பொழுதுபோகும்
சிறியகதை, நமக்கெல்லாம் உயிரின்வாதை"

என்ற அடிப்படையில், உடல், பொருள், மூச்சைத் தந்து நாட்டைக் கட்டிய மக்களுக்கு உரிமையா, அல்லது ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன் அதிகாரமே சரியா என்ற கேள்வியாக முடிவடைகிறது. பாரதிதாச னின் கற்பனை காலதேச வர்த்தமானங்களுக் கேற்ப, இன்றைய மக்களின் கேள்வியாக, பரிணமிக்கிறது. 'புரட்சிக் கவி'யில் கதாபாத்திர சிருஷ்டி அற்புதமானது; அமுதவல்லி என்ன, உதாரன் என்ன, மன்னன்தான் என்ன, உயிருடன் நடமாடும் சித்திரங்கள்.

இதில் பாரதியாருக்குச் சமதையாக இருப்பவர்கள் **இன்றைய கவிஞர்களில் பாரதிதாசன் ஒருவர்தான் என்பது எனது அபிப்ராயம்.**

பாரதிதாசனுடைய நீண்ட காவியங்களிலே தலை சிறந்தது 'புரட்சிக்கவி' என லகுவாகச் சொல்லிவிடலாம். அடுத்தபடியாகக் குறிப்பிடவேண்டியது பாண்டியன் பரிசு என சமீபத்தில் அவர் எழுதியுள்ள நீண்டகாவியம். இது ஒரு நேர்த்தியான கதை. காவியச் சுவையுடன் கதைச் சுவையும் போட்டி போடுகிறது. ராஜீய சூழ்ச்சி, சிங்காதன வேட்கை, யுத்தம், பூதப் பீதி, காதல் யாவும் நிறைந்த ஒரு நயமான சொற் சித்திரம். போர்க் களக் குமைச்சலிலே ஒரு காட்சி:—

... ... ... ... சாவு
கொற்றவர்கள் இருவர்பால் மாறிமாறி
நொடிக்குநொடி நெருங்கிற்று! வெற்றிமங்கை
நூறுமுறை ஏமாந்தாள் ஆளைத்தேடி!

இந்தக் காவியத்திலே நரிக்கண்ணன் என்ெறாரு நய வஞ்சகத் துரோகி வருகிறான்; அவனைத் துரோகி என்று சொல்லக்கூடாது. அவனை சுயகாரிய 'வீடணப்பசு' என்று கூறவேண்டும். தங்கையின் கணவனைக் கொல்லு கிறான். தங்கையைக் கொல்லுகிறான். தனக்கே முடி கவித்துக்கொள்ள மாய் மாலக் கண்ணீர் விடுகிறான். எதையும் நம்பும் வேழநாட்டு மன்னனையும் ஊரையும் ஏமாற்றுகிறான். முடிவில் தான் வெட்டிய குழியிலேயே விழுந்து மடிகிறான் பாரதிதாசனுக்கும் ஏனைய கவிஞர் களைப்போல, முடிவில் தர்மந்தான் வெற்றி பெறுகிறது. உலகியலில் அப்படியா? பிரபஞ்ச நியதியிலே தர்மத் துக்கும் நியாயத்துக்கும் இடம் இருக்க முடியுமா? அப்படியே இடம் கிடைத்தாலும் சந்தர்ப்ப விகாரந் தானே என சந்தேகங் கொள்ளுகிறவர்களுக்கு அங்கீகரிக் கப்பட்டுவரும் தர்மா தர்மப் பிரச்சினைகளில் இன்னும் ஆழமான ஆணிவேர்களை எட்டிப் பிடிக்கவேண்டும் எனவே விரும்புகிறார்கள்.

பாரதிதாசனின் இன்னும் இரண்டொரு விசேஷ அம்சங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர் ஏதோ சுயமரியாதைக் கொள்கைகளுக்கு அடிமையானவர், அதனால் அவரிடம் தேசபக்திப் பாட்டுகளைப் பார்க்க முடியாது. அந்தமட்டில் அவர் மட்டமான கவிஞரென சிலர் சித்தாந்தம் பண்ணுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு "உன்னை விற்காதே" என்ற பாட்டை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

" இன்பம் வந்து நெருங்கிடு நேரத்தில்
ஈனர் அஞ்சிக் கிடக்கிற நேரத்தில்
ஒன்றி லாயிரம் தர்க்கம் புரிந்துபின்
உரிமைத் தாய்தனைப் போ வென்று சொல்வதால்
என்னையீன்ற நறுந்தாய் நாட்டினை
எண்ணுந் தோறும் உளம் பற்றி வேகுதே!
அன் பிருந்திடில் நாட்டின் சுகத்திலே
ஆயிரம் கதை ஏன் வளர்க் கின்றனர்?"

இப்படிப் பாடுவோரைத் தேசப்பற்று இல்லாதவர் என்று குற்றம் சாட்டவேண்டும் என்னில், பாரதியார் தொடுத்துவைத்த பாணியில், அவர் கற்பனையை அவலமாக்கி, உயிரற்ற கொடிப்பாட்டு, நாட்டுப்பாட்டு என்ற எதிரொலிச்சான் கோவில்களைப் பிறர்போல அவரும் கட்டவில்லை என, வேண்டுமானால், சொல்லிக்கொள்ளலாம். அதெல்லாம் மறைவாக நமக்குள்ளே பேசிக்கொள்ளுகிற கதைகளாக இருக்க முடியுமே தவிர, மேடை ஏறாது.

இரண்டாவதாக இவர் காதல் துறையில் பாடும் பாட்டுகள் யாவும் உடம்பு விகாரங்களைத் தட்டியெழுப்பும் பாட்டுகளே தவிர, உள்ளத்தின் போக்கைக் காட்டுவன அல்ல; புலன் நுகர்ச்சியில் சந்துஷ்டி

யேற்பட்டுவிட்டால் போதும் எனச் சொல்லுவதைப் போல் இருக்கிறது என்று சிலர் அளக்கிறார்கள்.

அவரது பாடல்கள் உடம்பை மறந்துவிட்டு, நெறி திறம்பாக் காதல்துறை காட்டும் வெறும் சொப்பனாவஸ்தைகள் அல்ல என்பது உண்மை. உடம்பை மறந்த காதலைப் பாடுகிறவன்தான், தான் கற்பனாலோகத்தில் நடப்பதாக நினைத்துக்கொண்டு, உளைச்சேற்றில் மிதிக்கிறவன்.

1. "நேரான குங்குமக் கொங்கை
காட்டிச் சிரித்தொரு பெண்
போராள் பிடிபிடி யென்றே
நிலவு புறப்பட்டதே"

எனவும்,

2. "கொங்கைகளும் கொன்றைகளும்
பொன்சொரியும் காலம்"

எனவும், மனம்விட்டுப் பாடிய கவிஞர் பரம்பரையைச் சேர்ந்தவர்தான் அவரும். தமிழ்ப் பண்புக்குப் புறம்பானவர் அல்ல. ஏதோ பத்தொன்பதாம் நூற்றாண்டு இங்கிலீஷ் இலக்கியத்தின் போலி மூடாக்குகளை வைத்து எதை யெடுத்தாலும் விரசம் விரசம் எனத் திரைபோடும் ரசனோபாக்கியான கர்த்தர்களுக்கு இது புரியாமலிருந்தால் பாரதிதாஸன் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்? இன்று, இலக்கியத்தை இங்கிலீஷ் கண்ணாடிகொண்டு சோதனைசெய்து, அந்தச் சங்கப் பலகையின் அங்கீகாரம் பெற்றதே கவிதை என நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றால், அதைவிட தமிழ்க் காவியத்துக்கே சந்தனக் கட்டையில் சிதைவைத்து சந்துஷ்டியடையலாம்.

—புதுமைப் பித்தன்

1. அவ்வை : அக்ஷிக்கோவை 2. நந்திக் கலம்பகம்

ஆறு நேராகவும் வளைந்து வளைந்தும் ஓடுகிறது, அதன் இயற்கைக் கதியில். 'என்னிடமுள்ள நீரைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்ளுங்கள்' என்று அந் நதி மக்களைக் கூவி யழைப்பதில்லை. நதியின் இரு பக்கங்களிலும் வாழும் மக்கள் அந்த ஆற்று நீரைக் குடிக்கவும், குளிக்கவும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

செடி, கொடி மரங்களில் மலரும் மலர்கள் இயற்கையாக மலர்ந்து நறுமணத்தை நாலாபக்கமும் வீசுகின்றன. "நாங்கள் நல்ல மணத்தைக் கொடுக்கிறோம்; எங்களைப் பறித்துக்கொண்டு போங்கள்; சூடிக்கொள்ளுங்கள்" என்று அவை சொல்லுவதில்லை.

மக்கள்தாம் மலர்களின் நறுமணத்தில் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்து அவற்றைப் பறித்துச் சூடுகின்றனர். அதுபோல கவிஞன் தன் இயற்கைப் போக்கில் ஏதோ பாடுகிறான். தன் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் அரிய பெரிய கருத்துக்களையும் தத்துவங்களையும் கவிதையாகப் பொழிகிறான். "என் கவிதைகளில் இந்தவிதமான சிறந்த கருத்துக்களைப் புகுத்திப் பாடியிருக்கிறேன்; உயர்ந்த தத்துவங்களைக் கூறியிருக்கிறேன்; என் கவிநயங்களைப்படித்து அனுபவியுங்கள். பாராட்டுக் கூறுங்கள்" என்று எந்த உண்மைக் கவியும் கூறுவதில்லை. ஆனால், கவிஞனின் கவிதைகளைப் படிக்கும் மக்கள் தாம், "இக் கவிஞன் தன் கவிகளில் இன்ன கருத்தைப் புகுத்தி எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறான்; உயர்ந்த தத்துவங்களைக் கவிதாரசனையுடன் எத்துனை நயமாகக் கூறியிருக்கிறான்?" என்றெல்லாம் வியந்து பாராட்டி மகிழ்கிறார்கள்.

இராப்பாடிப் பறவை காரிருளில் உட்கார்ந்து தன்னுடைய ஏகாந்தத்தை மறந்து மகிழ்ச்சி கொள்வ

தற்காக—தன் ஆத்ம சாந்திக்காக—இனிய குரல் எழுப்பிப் பாடுகிறது. அதைக் கேட்பவர்கள் கண்ணில் படாத அப் பாடகனின் பாட்டின் இனிமையில் அப்படியே லயித்துப்போய் விடுகிறார்கள். அதுபோல, கவிஞனும் தன் ஆத்ம திருப்திக்காக, கவிபாடுகிறான். அதைப் படிப்பவர்கள் அதிலுள்ள அழகிய கருத்துக்களையும் கவிச் சுவையையும் அறிந்து அனுபவித்து மகிழ்கிறார்கள்.

கவிஞன் யாருக்கும் கட்டுப்பட்டவனல்லன். அவன் இன்ன பொருள் பற்றித்தான் பாடவேண்டும், இப்படித்தான் பாடவேண்டும் என்று எவரும் கவிஞனைக் கட்டுப்படுத்த முடியாது; கட்டுப்படுத்தவும் கூடாது. கவிஞன் தன் விருப்பம்போல் எதையும் பாட உரிமை உண்டு; தனக்குச் சிறந்தது எனத் தோன்றும் எதையும் பாட அவனுக்கு அதிகாரமுண்டு.

சுதந்திரமாகப் பாடும் கவிஞன்தான் உண்மையான கவிஞன்; சிறந்த கவிஞன். பிறருக்குக் கட்டுப்பட்டு, பிறர் விருப்பத்தை அனுசரித்து, பிறர் ஏவலை எதிர்பார்த்துக் கவிதை இயற்றுபவன் சிறந்த கவிஞன்—உண்மைக் கவிஞன் ஆகமாட்டான்.

இவ்வகையாகப் பார்த்தால், பாரதிதாசன் ஒரு சிறந்த கவிஞர்; உண்மைக் கவிஞனொருவனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த லக்ஷணங்கள் அனைத்தும் உடையவர் என்று தாராளமாகச் சொல்லலாம். பாரதிதாசன் பிறருடைய பாராட்டுதலைப் பெறக் கவிதைகளை இயற்றவில்லை. தம் ஆத்ம திருப்திக்காகக் கவிதை புனைந்துவருகிறார். அவர் பிறருடைய விருப்பத்தையும் நோக்கத்தையும் அனுசரித்து, கவிதை இயற்றிவந்திருந்தால் எப்போதோ மற்றோர் வகையில் பிரசித்தி பெற்றிருப்பார். ஆனால், அவர் அவ்விதம் ஏற்படக்கூடிய போலிப் புகழை விரும்பவில்லை. அவர் யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாமல், தம் கொள்கையில் நின்று கவிதைகள் இயற்றிவரலானார். ஆதலால், இப்போது நிலையான உண்மைப் புகழைப் பெற்றுவிட்டார்.

பாரதிதாசன் ஒரு கட்சிப் பிரசாரக் கவிஞர் என்பது

சிலருடைய கருத்து. இது தவறு. தமிழர் சமுதாயத்தின் தற்போதைய நிலையின் பிரதிபலிப்புத்தான் பாரதிதாசனின் கவிதைகள் என்று கூறுவது முற்றும் பொருந்தும். தமிழ்ச் சமூகத்தில் நிலவியுள்ள மூடப் பழக்க வழக்கங்களையும், அர்த்தமற்ற கொள்கைகளையும் களைந் தெறியும் கருவிகளாக பாரதிதாசன் கவிதைகளைக் கொள்ளவேண்டும். ஜன சமுதாயத்தின் பலமும் பலவீனமும்தான் கவிதையாகவும் இலக்கியமாகவும் வெளிவருகிறது. சமுதாயமின்றி, இலக்கியமோ கவிதையோ இல்லை. வாழ்க்கையும் கவிதையும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. வாழ்க்கைக்கும், கவிதைக்கும் தொடர்பு இருந்தால்தான் கவிதை முதன்மையடையும். இவ்விதமாக நோக்கினால், பாரதிதாசன் கவிதைகள் தமிழ்ச் சமுதாய சீர்திருத்தத்துக்குப் பெரிதும் உதவி புரிவனவாகும்.

காதல், இயற்கை வருணனை போன்ற விஷயங்கள்தாம் கவிதை புனைவதற்கு ஏற்றவை என்று கருதப்பட்ட காலம் மலையேறிவிட்டது. 'கவிச் சொற்கள்,' 'கவிக் கருத்துக்கள்' என்று தனியாக எவையும் இல்லை. கவிதை என்பது, காண்கிறவனிடம் இருக்கிறதேயொழிய, காணப் படும் பொருளில் இல்லை. எல்லாம், பார்க்கிறவனுடைய கண்களையும் பார்த்ததைப் பயன்படுத்திக் கொள்ளும் பார்வையையும் பொறுத்துத்தான் இருக்கிறது. கவிஞனுக்குக் கலைப் பண்போடு விரித்து எழுதும் நுண்ணறிவு மட்டும் இருந்தால், எந்தப் பொருளையும் தன் கவிக்கு வேண்டிய பொருளாக எடுத்துக்கொள்ளலாம்.

கலைப் பண்புடன் விரித்து எழுதும் பேரறிவுசான்ற பாரதிதாசன், காதல், இயற்கைக் காட்சிகளைமட்டும் தம் கவிக்குரிய பொருள்களாகக் கொள்ளாமல், தொழிலாளர் நிலை, பெண்ணுரிமை, சகோதரத்துவம் முதலிய விஷயங்களையும் குறித்து இனிய கவிதைகள் இயற்றலானார்.

இவ்விதம் சமதர்மம் நிலவும் புத்துலகைப்பற்றி, பாரதிதாசன் பாக்கள் இயற்றித் தம் கவிதைகளுக்கு ஒரு

தனிப் பண்பை ஏற்படுத்திக்கொண்டார். புரட்சிக்கவி என்ற சிறப்புப் பெயரையும் பெற்ருர்.

"ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்ருல், அத்தேசம் ஒழிதல் நன்ரும்."

"ஏழைமுத லாளியென்ப தில்லாமற் செய்"

"வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெலாம் ஒப்புடையார்!"

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்."

"பொது உடைமைக் கொள்கை திசை
யெட்டும் சேர்ப்போம்"

என்பனபோன்ற அடிகளில் சமதர்மக் கொள்கை மிளிர் வதைக் காண்போர், பாரதிதாசன் சமதர்மம் வேண்டும் புரட்சிக்கவி என நன்கு அறிவர்.

"செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபேதங் கண்டாய்!"

"வாழ்கின்ருர் முப்பத்துமுக்கோடி மக்கள் என்ருல்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்"

என்பனபோன்ற அடிகளில் நம் சமூகத்தில் நிலவிவரும் சாதி சமயச் சழக்குகளை வெளிப்படுத்த பாரதிதாசன் தவறவில்லை. பாரதிதாசன் கவிதைகள் உலக இயற்கை யழகுடன் பெரிதும் பொருந்தி நடக்கின்றன.

இவ்விதம் வாழ்வின் விளக்கமாய் உயிருடன் ஒட்டு வதாய், பாரதிதாசன் கவிதைகள் தமிழ்நாட்டுக்கு ஊட்ட மளிப்பனவாய் இருக்கின்றன.

கவிதைக்கு உணர்ச்சி, சொல், கருத்து, அழகு, இனிமை ஆகியவை முக்கியமாகும். இவையனைத்தும் பாரதிதாசன் கவிதைகளில் இயல்பாய் அமைந்திருக் கின்றன.

இனிய எளிய சொற்களில் உயர்ந்த கருத்துக்கள் அமைந்து கற்ருர்க்கும் மற்ருேர்க்கும் இன்பந்தரவல்ல வகையில் பாரதிதாசன் கவிதைகள் அமைந்துள்ளன. இவர் தம் கவிதைகளில் புதியமுறையில் சில உவமைகளை எடுத்தாளுகிருர். தம் கவிதைப் பாங்குக் கேற்ப, சொல், இசை, எதுகை, மோனைகளை லாகவமாக அமைத்துக் கொள்ளுகிருர்.

தாம் சொல்லும் விஷயங்களை - அழகான உண்மைகளையும் அற்புதமான கருத்துக்களையும் - நன்கு அனுபவித்துக் கவிப்பண்பும் கற்பனைத்திறனும் கொண்டு வெளியிட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, காதற் குற்றவாளிகள் காதலைத் தீய்த்த கட்டுப்பாடு, கைம்மைப் பழி, குழந்தைமணத்தின் கொடுமை, தளை அறு, உலக ஒற்றுமை, தொழிலாளர் விண்ணப்பம், புதிய உலகு செய்வோம், சகோதரத்துவம், பலிபீடம், சுதந்திரம், வாளினை எடடா, முதலியவை பாரதிதாசன், ஜன சமுதாயத்தில் பொதுவுடமைப் புரட்சிக்கவி என்பதை என்றென்றும் நிலைநிறுத்தக் கூடியனவாய் இருக்கின்றன. அத்தகைய சிறப்பு வாய்ந்த புரட்சிக்கவி நீடூழி வாழ்க!

—நாரண - துரைக்கண்ணன்

ஆசிரியர், "பிரசண்ட விகடன்"

அமெரிக்க நாட்டிலே, ஒரு பாரதிதாசன் புதுக்கவி என்றும் புரட்சிக்கவி என்றும் கொண்டாடப்படுபவர். ஆனால், தமிழரில், தன் மானக் கோட்பாடுடையவர் புரட்சிக்கவி பாரதிதாசனைத் துவக்கத்திலேயே பாராட்டினர். அமெரிக்க நாட்டுப் பாரதிதாசனுக்கு, ஆரம்ப காலத்திலே அஃதும் இல்லை. இன்றும் நமது கவிஞரை இங்குள்ள ஏடுதாங்கிகள், ஏதேனும் கூறிடுவர் இறுமாப்புடன். அன்று, அமெரிக்கநாட்டுக் கவிஞனையும் அவ்விதமே ஏளனம் செய்தனர். பின்னரோ, புகழுரையைப் பொழிந்தனர்!

புரட்சிக்கவிஞர், வால்ட்விட்மன் என்பாரையே, நாம், அமெரிக்க நாட்டுப் பாரதிதாசன் என்றோம். அவர், கவிதை எப்படி இருத்தல் வேண்டும், என்பதுபற்றித் தமது கருத்தைப் பல சமயங்களிலே கூறியிருக்கிறார். ஒருகவி, கவிதையின் இலட்சணத்தை விளக்குவது, அவரை நாம் அறியவும், அவர் மூலம் பொதுவாகவே கவிதாமணிகள் எவ்வண்ணம் இருப்பர் என்று தெரியவும், ஓர் வாய்ப்பளிக்கிறது. இதோ வால்ட்விட்மன், படப்பிடிப்பு! பாருங்கள், கவியின் உருவம் கவர்ச்சியுடன் காட்சி அளிப்பதை.

வால்ட்விட்மனின் கருத்துகள், பல, பாரதிதாசனுடையது போன்றே, பழையகட்டுகளை உடைத்தெறியும் வெடி குண்டுகள் போன்றுள்ளன. மக்களின் மேம்பாடே, விட்மனுக்குக் குறிக்கோள். மத தத்துவார்த்தங்களிலே அவர் மயங்கவில்லை. அவருடைய மணிமொழிகளிலே, சில இங்கு தருகிறோம்.

பழைய கட்டுப்பாடுகளையும் முட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து, கவிதைக்கும் வசனத்திற்கும் புதிய சுதந்தர ஓட்டந் தருகிறேன். ஆசான் எனினும் பாரேன்; அவன் எழுதிய வழக்கமான கருத்துக்களைத் தகர்த்தெறிவேன்.

உள்ளத்தை வெளிப்படையாக, சீர் தளைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன், எதுகைமோனையின் அடிமையல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும் இலக்கணத்திற்குங் கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன். அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா!

எந்தப் பழைய வழக்கத்திற்கும் தொத்தடிமையல்லன். பழைமைக் குட்டையில் பாசிப்படர்ந்த பழக்கங்களை ஒழித்து, அவன் வாழ்விற்கு ஓட்டமளிக்கிறான்.

உண்மைக்கவி ஒரு தீர்க்கதரிசி. அவன் பழங்கவிகளின் எதிரொலியல்லன்; பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரன், அல்லன்.

கவி, வெறும் நீதிப்புரோகிதன் அல்லன். உவமையணிகளிலும், வர்ணனைகளிலும் விளையாடிக் காலங்கழிப்பவன் அல்லன்.

கவிகள், பிறர் அறிய முடியாத அருளாவேசத்தை விளக்குவோர், நிகழ்காலத்திற்படிந்த மகத்தான எதிர்காலச் சாயலின் கண்ணாடிகள். அங்கீகாரமின்றி, உலகிற்கு அறமளிப்போர் கவிகளே!

மனிதா! நீ யாருக்கும் தலை வணங்காதே; நிமிர்ந்து நட; கைவீசிச் செல்! உலகைக் காதலி! காதலில் கூசாதே! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மத வெறியரை ஒதுக்கித்தள்ளி, மனச் சாட்சியைத் துணைகொண்டு நட. ஏழைகளிடம் இரக்கம்காட்டு. தொழிலாளருக்கு ஆறுதலளி. பாட்டாளியிடம் பரிவு கொள். தாராளமாக உதவு. உழைப்பை மதி; ஊருக்கு உதவு! உனக்கு எட்டாத கடவுளைப்பற்றித் தெரிந்ததாகப் பிதற்றாதே!

எதையும் சிந்தித்துப் பார்! யாருக்கும் நீவிர் தாழ்ந்தவரல்லீர்! எவர்க்கும் அடிமையல்லீர்! நீவிரே தலைவர்! தலை நிமிர்த்திடுக!

பண்டு நடந்த அற்புதங்கள்? வெறும் பொய்கள். நம்பாதீர்! அகம்பாவக் கொடுங்கோலரை வீழ்த்துவீர், வீழ்ந்தோரை உயர்த்துவீர்!

இனி உலகில் புரோகிதர், சாமியார் அதிகாரம் நடக்காது. அவர்கள் காலம் மலையேறிப்போய்விட்டது. ஒவ்வொருவனும், தனக்குத்தானே உபதேசியாகிவிடுவான். உள்ளம் உணர்ந்து உரத்துடன் வாழ்வான். பழைய கட்டுப்பாடுகள் ஒழியும்!

மனிதா! எதற்கும் அஞ்சாதே! ஆற்றலுள்ள வெற்றி வீரனெனன விளங்கு, வாழ்வை நடத்த முனைந்துநில்!

நமது இன்றையச் சமுதாயம், பூச்சழகில், பேச்சழகில், வெளி வேடத்தில், தன்னலப் போட்டிப் பொருமையில், கலகலத்துப்போன அந்த நாள் வழக்கங்களில், மோகம்கொண்டு, உள்ளே உரமற்று, ஒன்றுமின்றிக் கிடக்கிறது. இந்நிலை மாறவேண்டும்.

நம் இலக்கியங்கள், வெறும் வார்த்தைக் கோவையாக உள்ளன. இலக்கியமே. நாட்டினருக்கு ஊட்டமளிப்பது. இலக்கியம் வாழ்வின் விளக்கமாய், உயிருடன் ஒட்டுவதாய் இருத்தல் வேண்டும்.

உடலுறுதி, உள்ள உரம், கருத்துப்பொலிவு, கருத்து விடுதலை, கலைப்பண்பு, பயன்தரும் தொழில் ஊக்கம், நல்லநட்பு, ஈகை, சுரண்டுவதற்குப் பயன்படாத (மனிதத்) தொடர்பு, சாதிமதப் பிடிவாதமற்ற வீறுநடை, பணத்திமிரற்ற உறவு, இவையே குடி அரசின் குணங்கள்! குடி அரசு பொருளைவிட, மனிதனை மேன்மையாக மதித்திட வேண்டும்.

நான் உலக மக்களில் ஒருவன்! செருக்கற்றவன்! கள்ளமற்ற வெள்ளை உள்ளம்! எவருடனும் செல்வேன் கைகோர்த்து! களிப்புடன் வானத்தை நோக்கி வணங்கி வரம் கேட்பதில்லை. உழைத்து வாழ்கிறேன். ஊரை ஏய்த்தல்ல. இருப்பதைக் கொடுக்கிறேன் மற்றவர்க்கும். மக்களின் தோழன் நான். புலவரிடமல்ல பாடங்கேட்டது, எனக்கு ஆசிரியர் எளியோர். அவர் தரும் பாடத்தைப் பேராசிரியர்களுக்கு நான் போதிக்கிறேன்.

காற்று எங்கும் வீசும், நானும் அப்படியே, எங்கும் உலவுவேன். ஏழை பணக்காரன், புண்யமூர்த்தி

பாபாத்மா, பத்னி பரத்தை, ஆண்டான் அடிமை என்ற வேறுபாடு எனக்கு இல்லை. பருவமழைபோல் பலருக்கும் பயனளிப்பேன்.

மனிதரனைவரும் எனக்கு ஒன்றே! எவருக்கும் அஞ்சேன். எதற்கும் அழேன், எதையும் தொழேன். சடங்கும் சாமி கும்பிடுதலும் எனக்கில்லை. என்னை நான் உணர்ந்தேன்! தொல்லையில்லாத விடுதலை பெற்றவன் நான்! எந்தக் குருவிடமும் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை. நான் மோட்சந்தேடவில்லை.

எனக்குத் தெரிந்த உலகம் ஒன்றே. அஃது அகண்ட உலகினும் பெரிய உலகம் அது. நான்! நானே

முணு முணுப்பதில்லை எதற்கும். பாபத்திற்கு அழுவதில்லை, யாரையும் தொழுவதில்லை, கடவுளையும் குருக்களையும்பற்றிப் பேசிக் காதைத் துளைப்பதில்லை. இல்லை என்ற கவலை இல்லை. சேர்த்துப் பூட்டும் பித்தமில்லை. முன்னோருக்குப் பணிவதில்லை. சடங்கு சங்கடம் எனக்கில்லை.

எனக்குக் கட்டில்லை, காவலில்லை, சட்ட திட்டமில்லை.

பிறர் புண்ணுறல் நானும் புண்ணுவேன். மற்றவர் மகிழ, நானும் மகிழ்கிறேன்.

தத்துவ ஏடுகளைவிட, என் பலகணியருகே காலைக் கதிரோன் பூத்திடுவது எனக்குக் களிப்பூட்டுகிறது.

போனவை போகட்டும்! புத்துலகு, பேருலகு காண்போம். நாம் காணவேண்டிய உலகு, தொழில் உலகு; உறுதி உலகு! அதற்கு வழிகாண்பீர்!

நரகம் எனும் பூச்சாண்டி எனக்கு வெறும் தூசி. மோட்சம் எனும் மாயவலை எனக்கு அணுமாத்திரம்!

உயரிய கருத்துகளே!
மனிதக் குறிகோள்கள்!
வீரமே! ஆர்வமே! ஆற்றலே!
நீவிர், எனக்கு ஆண்டவராகுக!

* * *

இதுபோலப், பரம்பரைக்காரர் பயந்தோடும்படிப், பாடினர், புரட்சிக் கவிகளை, விட்மன்! அவரை ஒரு கவி என்று ஏற்க மறுத்தனர். கவலைகொள்ளவில்லை. கொடுமையைக் காய்ந்தார்! மடைமையைச் சாடினர்! மணிமொழியை வீசினர்! ஏழ்மைகண்டு பயந்தாரில்லை! ஏளனம் கண்டு சலித்திடவில்லை! எதிர்ப்புக்கு அஞ்சவில்லை.

வால்ட் விட்மன் ஒரு வம்பன் என்றனர். வாதாடவில்லை! அவன் ஓர் அபாயக்குறி என்றனர்! 'ஆம்' என்ருன். அவனை வெறுத்தனர், கண்டித்தனர்; ஆனல் அவனைத் தங்கள் உள்ளங்களிலிருந்துமட்டும் பெயர்த்தெடுத்துவிட முடியவில்லை. அவனுடைய கவிதைகள், உள்ளத்திலே ஊடுருவிச் சென்றுவிட்டன. தம்மையுமறியாமல் அவன் வயத்தராயினர்.

அமெரிக்கா, அங்கு தோன்றிய பாரதிதாசனைப் போற்றலாயிற்று. அவனுடைய 120-ம் ஆண்டுவிழாவை ஆனந்தமாகக் கொண்டாடிற்று. நியூயார்க்கில் வால்ட் விட்மனுக்குச் சிலை அமைத்தனர்!

நாம், நமது பாரதிதாசனுக்குச் செய்தது என்ன? ஏதும் செய்ய வன்கயற்றவரா நாம்? என்னை நான் இக் கேள்வி கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு கணம் எண்ணிப்பாருங்கள், பாரதிதாசன் அங்குப் பிறந்திருந்தால்?

—சி. என். அண்ணுத்துரை.

ஆசிரியர், " திராவிடநாடு "

"புதுச்சேரியில், வாத்தியார் வீடு எங்கே?" என்று கேட்டால், பெருமாள் கோவில் தெரு 95-ஆம் நம்பர் வீட்டைக் காட்டுவார்கள். வீட்டின் முகப்பில் 'பாரதி தாசன்' என்ற பெயர் காணப்படும். வீட்டின் உள்ளே சென்றால், தாழ்வாரத்தில், ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருக்கும் மனிதர் உங்களை வரவேற்பார்.

முறுக்கான மீசை; கப்பீரமான தோற்றம்; ஆணித் தரமான பேச்சு; தலைக்கேறிய தமிழ் மயக்கம் – இத்தனை சிறப்புக்களும் கொண்ட இவர்தான் பாரதிதாசன். இவருடைய உண்மைப் பெயர் சுப்புரத்னம்.

பாரதிதாசனைப் பார்த்தால், அவருக்கு வயது 54 என்று யாரும் நம்பவே மாட்டார்கள். ஆனால், இது உண்மை.

பாரதிதாசன் பத்து வருஷகாலம் நாட்டுப் பள்ளியில் பயின்றார். அதன் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயா, தமிழி லும் தெலுங்கிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். தாம் கொண்டுள்ள தமிழ்ப் பற்றுக்கு, நாட்டுப் பள்ளிதான் அஸ்திவாரம் என்கிறார் பாரதிதாசன். நாட்டுப் பள்ளியி லிருக்கும்பொழுது, திருக்குறள், நிகண்டு, சதகம், அந்தாதி முதலிய பல தமிழ் நூல்களை மனப்பாடமாக ஒப்பு விப்பாராம்.

நாட்டுப் பள்ளியில் பயின்ற பின்னர், புதுவைத் தமிழாசிரியர் பள்ளியில் பாரதிதாசன் மூன்றுவருஷங்கள் பயின்றார். இங்கே உபாத்திமைத் தொழிலுக்குரிய தனித் தமிழே கற்றுக் கொடுத்தார்கள். இங்கு பயின்ற நாற்பது பேரில் முதன்மையான தேர்ச்சி பெற்றார் பாரதிதாசன். தமது 18-ஆவது வயதில் அரசாங்க உத்தியோகத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக அமர்ந்தார். பாரதிதாசனுக்குத் தமிழ் தவிர, பிற பாஷைகள் தெரியாது. அதற்காக அவர் வருத்தப்படவில்லை.

பாரதிதாசன் தமிழறிவு பெற்றதற்கு, மற்ருெரு காரணம் மகாவித்வான் பூ. அ. பெரியசாமி பிள்ளை. அவர் பாரதிதாசனின் தந்தையாரிடத்தில் மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் கணக்கு வேலை பார்த்து வந்தார். அந்த மகாவித்துவானின் தொடர்பு, பாரதிதாசனுக்கு நீண்ட நாள் இருந்தது.

பதினைந்தாவது வயது முதற்கொண்டே பாட்டுப் பாடத் தொடங்கினுர் பாரதிதாசன். மதமே வேண்டாம் என்று கூறும் பாரதிதாசன், முதன் முதல் பாடிய பாட்டு, 'சுப்பிரமணியர் துதி யமுது!' பின்னர், 'தாழ்த்தப் பட்டார் சமத்துவப் பாட்டு', 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'பாரதிதாசன் கவிதைகள்,' 'எதிர்பாராத முத்தம்,' 'இரணியன்,' 'குடும்ப விளக்கு' முதலிய நூல்களை எழுதினுர்.

பதினேழாவது வயது முதற்கொண்டே, பாரதி தாசன் அரசியலில் பங்கெடுத்தார். தேர்தல் பிரசாரம், போலிங் ஸ்டேஷன் நிர்வாகம், துணிவுள்ள காரியங் களுக்குத் தலைமை ஆகிய விஷயங்களிலே பாரதிதாச னுக்குப் பேர் உண்டு. இவரது பிரசாரத்தால் ஜயித்த தேர்தல்கள் பல. அரசியலில் பங்கெடுத்தது காரணமாக, இவர் இரண்டு வருஷம் உத்தியோகத்திலிருந்து விலக்கப் பட்டார். ஒரு மாதம் சிறையி லிருந்தார். புதுவைக் கிறிஸ்துவர்கள் விரும்பாத பெயர்களிலே 'பாசதிதாசன்' என்பதும் ஒன்று.

பாரதிதாசன், தமது முப்பதாவது வயதில் பழனி யம்மாளை மணம் புரிந்தார். இப்பொழுது அவருக்கு மூன்று பெண்களும் ஓர் ஆண் மகனும் உள்ளார்கள்.

புதுவைக்கு வந்த பெரும் தேசியத் தலைவர்களான கோகலே, திலகர், தாஸ், காந்தி, நேரு ஆகியவர்களை நேரில் பார்க்கும் பாக்கியம் பாரதிதாசனுக்குக் கிடைத் தது.

அரவிந்தர், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதி யார், வ. உ. சிதம்பரம்பிள்ளை முதலியவர்களிடம் பாரதி தாசன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகினுர்.

பாரதிதாசன் 1920-ஆம் ஆண்டில் சத்தியாக்கிரக இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்.

பத்திரிகைத் துறையிலும் பாரதிதாசனுக்கு நல்ல அனுபவம் உண்டு. வ. வே. சு. ஐயர் நடத்திய 'தேசபக்தனி'ல் கட்டுரைகள் எழுதினார். ஐந்து வருஷம் 'தேச சேவகன்' நடத்தினார். பொது உடைமைப் பிரசாரத் துக்குக் கருவியாக 'ஆத்மசக்தி' என்ற பத்திரிகையை வெளியிட்டார். 'புதுவை முரசு' 'டூப்ளேக்ஸ்' 'தாய் நாடு' முதலிய பல பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். 'கவிதா மண்டலம்' என்ற சிறந்த பத்திரிகையைச் சில காலம் நடத்தினார். அது ஒரு புதுமையான பத்திரிகை; எல்லாம் கவிதை. இந்தப் பத்திரிகைக்கு அரசியல் சமூகக் கொள்கைகள் கிடையாது. கவிதையை வளர்ப் பதுதான் கொள்கை. சுத்தானந்த பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை போன்ற பல அறிஞர்கள் கவிதைகள் எழுதி வந்தார்கள். இந்தப் பத்திரிகாலயத்துக்கு, மதிப் புரைக்காக மலைபோல் புத்தகங்கள் வந்து குவியுமாம். மதிப்புரையும் கவியாகத்தான் வரும். ஒரு புத்தகத்துக்கு ஒரு கவி பெறுவது நல்ல வியாபார மல்லவா?

தற்காலத்துத் தமிழ்ப் பத்திரிகைகளைக் குறித்து வருந்துகிறார் பாரதிதாசன். தமிழ்ப் பத்திரிகை நடத்து பவர்களில் பெரும்பாலோர், தமிழ்ப் படித்தவர்கள் அல்ல என்பது பாரதிதாசனின் அபிப்பிராயம்.

நிறைய நிறையத் தமிழ் நூல்கள் வெளிவர வேண் டும் என்பது பாரதிதாசனின் விருப்பம். பிற பாஷை மொழிபெயர்ப்பு நூல்கள், அளவுக்கதிகமாக வெளிவரு கின்றன என்று அவர் கருதுகிறார். தமிழ்க் கலைகளான கவிதை, இசை, கூத்து, ஓவியம், கல்தச்சு, பொம்ம லாட்டம் முதலியவைகளுக்கு, தமிழர்கள் இன்னும் அதிகமான ஆதரவு காட்டவேண்டும் என்று அவர் நினைக் கிறார்.

அவரைச் சில கேள்விகள் கேட்டேன்.

**கேள்வி:** தமிழர்களுக்கு ஒரேமாதிரியான உடை வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** ஆம். ஆண்களுக்கு ஒரேவிதமான உடை வேண்டும். சுருக்கமுள்ள கால்சட்டையும், சமஸ்கிருதத்தில் அங்கரட்சா என்று சொல்லும் முழங்கால் அளவு தொங்கக்கூடிய மேல் சட்டையும் பொருத்தமா யிருக்கும்.

**கேள்வி:** நமது நாட்டில் ஆண்கள் நகையணிவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** ஆண்களோ அல்லது பெண்களோ நகையணிவதை நான் விரும்பவில்லை. இயற்கையழகே நல்லது. பெண்கள், தங்கள் உருவத்தைக் குலையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரவிந்த ஆசிரமத்திலுள்ள பெண்களைப் பாருங்கள். நகையணிந்தால்தான் அழகு உண்டாகும் என்று நான் கருதவில்லை.

**கேள்வி:** பிற பாஷைகளிலுள்ள வார்த்தைகளைத் தேவையான அளவு தமிழில் சேர்த்துக் கொள்ளலாமா?

**பதில்:** அவசியம் சேர்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி:** பழைய காலத்துத் தமிழ் நூல்களைத் திருத்தியோ அல்லது மாற்றியோ வெளியிடுகிறார்களே, அது சரியா?

**பதில்:** எந்தப் பழைய நூலையும் இந்தக் காலத்துக்கு ஏற்றவிதமாகவும், அவரவர்களுக்குத் தோன்றிய திருத்தத்தோடும், மாற்றியோ, சேர்த்தோ, குறைத்தோ, புதிய வெளியீடாக வெளியிடுவதில் நன்மை யுண்டு.

**கேள்வி:** தமிழ் மொழி அபிவிருத்தி சம்பந்தமாக, என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** பள்ளிக் கூடத்திலே, எல்லாப்பாடங்களையும் தமிழிலே சொல்லித் தர, படிப்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டும். தமிழுக்கு, ஒரு சர்வ கலாசாலை வேண்டும்.

**கேள்வி:** அண்ணாமலை சர்வ கலாசாலை இந்தக் குறையைப் பூர்த்தி செய்யவில்லையா?

**பதில்:** இல்லை. அண்ணாமலை சர்வ கலாசாலை வகுப்புப் பூசல்களை வளர்த்து வருகிறது. இதற்கு மறைவான காரணம் எனக்குத் தெரியவில்லை.

கேள்வி: தமிழ் ஸினிமாக்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: நான் மதத்தை வெறுப்பவன் என்று உங்களுக்குத் தெரியும். மூட நம்பிக்கை நிறைந்த புராணக் கதைகளைப் படமாகத் தயாரிப்பதால், சமூகத்துக்கு நன்மை ஏற்படாது. பொதுவாகத் தமிழ் ஸினிமாக்கள் ஜனங்களைத் திருத்துவதற்கோ' அல்லது நாட்டுக்கு நன்மை செய்வதற்கோ பயன்படவில்லை.

"பாரதியார் மிக உயர்ந்த கவிஞர். அவருடைய உண்மை வாழ்க்கை, மக்களுக்குத் தெரியவேண்டும். பாரதி வாழ்க்கையைப் படம் பிடிக்காதது தமிழ்நாட்டு அறிஞர்களின் தவறு'' என்கிறார் பாரதிதாசன்.

பாரதியார், அரவிந்தர், சிதம்பரம் பிள்ளை, வ. வே. சு. ஐயர் முதலியவர்களோடு மிக நெருங்கிப் பழகிய பாரதிதாசன், தம் அனுபவங்களைப் புத்தகமாக வெளியிட்டால், தமிழர்கள் இன்புறுவார்கள்.

"பாரதிதாசன் நன்றாகக் கவி பாடுகிறார்; ஆனால், அவர் பிராமணத் துவேஷி" என்று சிலர் கூறுகிறார்கள். பாரதிதாசன் பிராமணத் துவேஷி மட்டுமல்ல; மதத்தின் பேராலும், ஜாதியின் பேராலும், தர்மத்தின் பேராலும், நீதியின் பேராலும், யார் யார் கொள்ளையடிக்கிறார்களோ, யார் யார் மற்றவர்களை ஏமாற்றுகிறார்களோ, யார் யார் பிறர் உழைப்பில் உண்டு இன்பம் அனுபவிக்கிறார்களோ அத்தனை பேர்களையும் துவேஷிக்கிறார், பாரதிதாசன்.

எனக்குத் தெரிந்த வரையில், பாரதிதாசனுக்கு வாழ்க்கையில் இரண்டே இரண்டு ஆசைகள் தான் உண்டு: ஒன்று கவிதை; மற்றொன்று மீசை.

—ஏ. கே. செட்டியார்
ஆசிரியர் "குமரிமலர்"



395—5

## புதுமை அறிஞர் - புதுவைக் கலைஞர்!

உயர்ந்து வளர்ந்த உடல், பருத்து அகன்ற மார்பு, கறுத்து மினுத்த நிறம், கூர்ந்து உருளும் கண்கள், குறுகி அடர்ந்த மீசை, வீரம் நிறைந்த பேச்சு; அதட்டிச் சொல்லும் கருத்து; கலைக்கு வாழும் வாழ்வு; தமிழ் மொழியின்மீது காதல்; தமிழ் அறிஞர்மீது அன்பு; தமிழ் மக்கள்மீது கவலை; தமிழ் நாட்டின்மீது ஆர்வம்; பரந்த நோக்கம், விரிந்த அறிவு, உயர்ந்த ஆண்மை, சிறந்த புலமை, எளிமையான உடை. ஏறுபோன்ற நடை ஆகிய அனைத்தும் ஒன்றுகச் சேர்ந்த ஓர் உருவை நீங்கள் எங்கேனும் கண்டது உண்டோ? கண்டால், "பாரதிதாசன்!" எனக் கூவி, அழைக்கலாம்.

புதுவைக் கவியரசர் பாரதிதாசன் அவர்கள் ஒரு புதுமைக் கவி அரசரே ஆவர். 10 ஆண்டுகளுக்கு மேலாகவே அவர்களை நான் நன்கறிவேன். அவர்களோடு பேசிப் பழகி மகிழ்ந்தது குறைவு. அவர்களின் கவிதைகளைச் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்தது அதிகம்.

தமிழுக்கு அடைமொழிகள் பல. அவற்றுள் தலையாயவை ஐந்து. அவை, இனிய, எளிய, சிறந்த, பழைய, தனித்த என்பனவாம்.

இவற்றுள் தலைமை தாங்குவது இனிய தமிழே. இந்த இனிய தமிழையே, தீந்தமிழ் எனவும் தேன் தமிழ் எனவும் கூறுவதுண்டு. இவற்றிற்குப் பொருத்தமாகக் கவிபுனையும் ஆற்றலில் அதிக வலிமை உடையவர் அறிஞர் பாரதிதாசன் அவர்களே ஆவர்.

பாரதிதாசன் கவிதைகளுக்கு உவமை கூறவேண்டு மானால், அவர் கவிதைகளையேதான் உவமையாகக் கூறவேண்டும்.

"நாட்டு நலங் கருதிக், கவிதை புனையும் பழந்தமிழ்ப் புலவர்களைப்போல இக்காலத்தில் எவருமில்லை யென்று கூறிவிட முடியாது. இக்காலத்தில் உள்ள சிறந்த புலவர் களில் புதுவைப் பாரதிதாசன் ஒருவர் ஆவர்."

இது, கொழும்பு வானொலி நிலையத்தார், தங்கள் வானொலி மூலம் முன்பு ஒலி பரப்பிய செய்திகளுள் ஒன்று.

"எனது கவிகளும், என்னைப்போன்ற புலவர்களின் கவிகளும் தமிழ்மக்கள் உளத்தை மகிழ்விக்கும் ஆற்றல் வாய்ந்தவை; அன்பர் பாரதிதாசனின் கவிதைகள் நாட்டின், சமூகத்தின், மக்களின் உயிரை மகிழ்விக்கும் ஆற்றல் வாய்ந்தவை." இது பேராசிரியர் ந. மு. வே. நாட்டார் ஐயா அவர்களின் கருத்து.

"நான் பல மொழிகளிலுமுள்ள பல்வேறு இலக்கி யங்களையும் படித்துள்ளேன். பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு பிரஞ்சுப் பேராசிரியர்களின் இலக்கியங்களையும் படித்துப் பார்த்திருக்கிறேன். என்றாலும் தங்களின் "புரட்சிக்கவி" என்ற தமிழ் இலக்கியம் போன்ற ஒன்றை யான் எங்கும் கண்டதேயில்லை."

இவை திருச்சியில் ஒரு கூட்டம் நடந்த பிறகு கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் ஒரு பிராமண அன்பர் கூறிய சொற்கள்.

"கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். கதைக்காக ஒரு முறை, கலைக்காக ஒரு முறை, கவிக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒரு முறை, இன்பத்திற்காக ஒரு முறை, எழிலுக்காக ஒரு முறை, கொள்கைக்காக

ஒரு முறை, குறிப்பிற்காக ஒரு முறை படித்தேன். ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு படித் தேன் எனவே இனித்தது."

இது, அவர்களின் கவிதைகளுக்கு முன்பு ஒரு முறை யான் கூறிய மதிப்புரை.

தமிழ்நாடு செழிப்பதற்காக, தமிழ்மொழி வளர்வதற்காக, தமிழ்மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்காக, புலவர்-அறிஞர்-புதுமைக் கலைஞர்-புதுவைப் பாரதிதாசன் அவர்கள் இந் நிலவுலகில் பன்னெடுங்காலம் நல்வாழ்வு வாழவேண்டும் என நான் இந்த நல்ல நாளிலே என் முழுமனதோடு ஆசைப்படுகிறேன்.

பாரதிதாசன் வாழ்க!

—கி. ஆ. பெ. விசுவநாதம்
"மணிவாசகத் தமிழகம்" திருச்சி

## புரட்சியுள்ளம்

பாவலர் பாரதிதாசன் கடலைப் பாடுகின்றார். கடலின் ஓரத்தை நோக்கி, மணல் மெத்தையை நோக்கி, மெத்தை மேல் தாக்கவரும் அலைகளை நோக்குகின்றார். அலைகள் பெருகுகின்றன; ஏறி எழுகின்றன; வீழ்ந்து தாழ்கின்றன. அவற்றின் பூரிப்பும் ஏற்றமும், வீழ்ச்சியும் புரட்சியும் கண்டார் பாவலர்.

பலகாலும் பார்த்துப் பார்த்துப் பழகிய மற்றொரு காட்சியும் அவர் கண்முன் உடன் தோன்றுகிறது. (அதனைத்தான் உவமம் என்பது.) அவர் பலகாலும் பழகிய காட்சி எது? அக்காட்சியில் அலைகளைப்போல் பூரித்தல் ஏறுதல், வீழ்தல், புரளுதல் அனைத்தும் உள்ளனவா?

அக் காட்சிதான் கல்வி நிலையத்தில் இளைஞர் ஓடி ஆடி மகிழ்ந்து திளைக்கும் காட்சி.

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓரம் எல்லாம்
கிளியின் உடல் வண்ணம்போல்
மணல்மெத்தை; அம் மெத்தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி!

(அழகின் சிரிப்பு; கடல்-1.)

கடலைக் கண்டும் மகிழும் உள்ளம் - இயற்கையின் அழகுச் சிரிப்பில் மயங்கிய உள்ளம் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களை நினைக்கின்றது. சிறுவர்களின் சுறுசுறுப்பை நினைக்கின்றது; அவர்களின் பூரிப்பையும் களிப்பையும் ஆடலையும் நினைக்கின்றது! ஏன்? கடல் அலைகள் தரும் இன்பத்தைவிட, கல்வி நிலையச் சிறுவர்கள் பல மடங்கு பெருகிய இன்பம் தருவதைப் பாரதிதாசன் நன்கு உணர்ந்தவர். அதனால்தான் அலைகளின் இன்பப் புரட்சி அவருக்குச் சிறுவர்களின் வாழ்க்கைப் புரட்சியை நினைவூட்டுகின்றது.

சிறுவர்களின் சுறுசுறுப்பில், அழகைக் கண்டு இன்புற்ற உள்ளமே புரட்சியுற்ற உள்ளம். முதியவர்கள் சிறுவர்களைக் கண்டு எண்ணும் எண்ணத்தையும், பழங்கால ஆசிரியர்கள் பள்ளிக்கூடச் சிறுவர்களைக் கண்டு எண்ணும் எண்ணத்தையும் வீழ்த்தி வென்ற புரட்சியுள்ளம் இங்கே விளங்குகின்றது.

பாட்டுக்களில் புரட்சி என்றால், வெறுஞ் சொற்களில் மட்டுமோ? எதுகை, மோனைத் தொடைகளில் மட்டுமோ? உவமைத் திறங்களில் மட்டுமோ? இவையனைத்தும் புரட்சிகள் ஆகலாம்; ஆயினும், இவை போதிய பயன்தரா!

**மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத புதிய கருத்துக்களை எழுப்பிச் செம்மை செய்வதே சீரிய புரட்சி! அதனை இங்கே காணலாம்.**

—பேராசிரியர் மு. வரதராசனார்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

உறுதி! தோற்றத்தில், பார்வையில், உடலில், உள்ளத்தில், குரலில், உதட்டின் அசைவில், வெளிவருஞ் சொல்லில், அச் சொல் இசைத்துநிற்கும் பாட்டில், அதன் பொருளில் அனைத்திலும் உறுதி! உறுதி!!

இந்த 'உறுதி' தான் பாரதிதாசன். வர்ணாசிரம வைதீகத் தீயில் கருகாத பொன்னென ஒளிர்ந்து, மத மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்த அறிவுத்தூய்மையுடன் விளங்கி, நல்லுணர்வைத் தட்டியெழுப்பும் நன்மணியெனச் சிறந்து வருபவர்தான் பொற்றாயமணி புரட்சிக் கவிஞர் ஆவர்.

மக்கள் மனதிலும், மன்பதை (சமூக) நிலையிலும் மாற்றத்தையும் ஏற்றத்தையும் விளைவிக்கக் கொண்ட உறுதியன்றோ கவிதைகளில் விளையாடுகின்றது ?

தன்னம்பிக்கையுந் தாழ்வற்ற உள்ளமும், தமிழ்க் கவிதையிலே ஓர் புதுமையையும், தமிழர் வாழ்விலே ஓர் எழுச்சியையும், நாட்டிலே ஓர் புரட்சியையும் தோற்றுவித்திருப்பதையும் நாம் உணர வேண்டும்.

'ஓடப்பர், உணர்வப்பராகி, உதையப்பராகிவிட்டால், உயரப்பர் ஓடப்பரெல்லாம் ஒப்பப்பர் ஆகிவிடுவார்' என்பதிலேயே கவியின் புரட்சி உள்ளமும் உறுதியும் காணக் கிடக்கின்றன.

'புரட்சியை' வரவேற்கும் கவி, 'ஒற்றுமையை அதற்குத் துணையாக்கி, 'உதையை' அதன் செயலாக்கி,

'புத்துலகை' அதன் விளைவாக்கிப் பூரிக்கின்றார். அவருடைய மூச்சும் பேச்சும், எழுத்தும் பாட்டும் அறிவிப்பது அவ் 'வுறுதி'யையே!

காலை ஞாயிற்றின் கதிர்கள், கடலலைகள்மீது தாவிடும் காட்சியினிமையும், இருள் சூழ்ந்த வையத்தில் அடர்ந்த காட்டின் நடுவிடத்தின் துன்பக் கொள்கலநிலையும், 'குடும்ப விளக்கும்', 'இருண்ட வீடு'மாய்க் காட்சியளிக்கின்றன.

'குடும்ப விளக்கு' அறிவொளியும், அன்பொலியும், அழகுக் காட்சியும் பெருக்கும் குடும்பங்களே திருநாட்டினைத் திகழச்செய்யும் என்ற உறுதியால் உருப்பெற்றதாம். 'எல்லா நலமும் ஈந்திடுங் கல்வி இல்லா வீட்டை இருண்ட வீடாகக், கவிஞர் ஏட்டிலே காட்டுகிறார், நாட்டிலே இருண்ட வீடு இருக்கக்கூடாது என்ற உறுதியினால்!

நள்ளிரவு மெதுவாய் நடப்பதற்குக் கேள்வியால் அகலும் மடமையையும் எல்லாரும் ஒன்றாய் இருந்து மகிழ்ந்துள்ளம் சிற்றுணவு உண்பது 'வல்லார் இலக்கி'யத்தை வாரி அருந்துதலையும், நெஞ்சைக் கிளிபறித்துப் போனதினால் (காதலர் பிரிவு) மரம்போல அங்கே அவன் தனித்திருந்தது, தண்டமிழ்த் தேன் உண்டவர்கள் பொருளை யெண்ணித் தணிப்பதனையும், குழந்தைகள் உடனிருந்து கொஞ்சியே உண்பது, பழந்தமிழ்ப் பொருளை அள்ளிப் படித்தவர் விழுங்குதலையும், குடும்பத் தலைவி, குழந்தைகளுக்கெல்லாம் கண்ணுறங்குமுன் தணிக்கைச் செய்தல், பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக்கெல்லாம் பணிக்கை யிடலையும், உவமையாய் அமைத்திருப்பதும், அவ்வுவமையே கருத்திற் கின்பம் பயக்கும் ஓர் தனிக் கருத்தை உள்ளடக்கிக் கிடப்பதும் கண்

டுணர்ந்து இன்புறற்பாலதாம். உவமையிலும் ஓர் புதுமை, உறுதிக்கருத்தை உணரவைப்பதற்காக.

இவ்வுறுதிகள் கொண்ட தமிழகத்தின் தலை சிறந்த அறிஞரை, தமிழகத்தின் விடுவிப்பாளரை, அடிமையொழிப்பாளரை, பொதுவுடமைப் போர் வீரரை, புத்துலகச் சிற்பியை, எதிர்காலத் தலைவரை, உணர்ச்சியின் உருவத்தை, புரட்சிக்கவி எனக் கூறல் மிகையாகாது.

உறுதிக் கருத்துக்களை உலகத்துக்களித்த ஒப்பற்ற கவிஞரே உலகத்தின் எதிர்காலத்தை அமைப்போராவர். ஆயின், நமது புரட்சிக்கவி, எதிர்காலத்தை நோக்கி, உலகினை ஒரு பெரு நெறியில் அமைத்துத் தருபவர் என்பதும், மக்கள் உய்ய அவ்வழியன்றிப் பிறிதொன் றில்லையென்பதும் உறுதியாமன்றோ!

உறுதிக்கவி, வெற்றி கொள்வதுறுதி!

வாழ்க புரட்சிக் கவி!
வெல்க அவ்வுறுதிகள்!!

—க. அன்பழகன்
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி.

# புரட்சிக் கவிஞர்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் என்று சொல்லியவுடனே இன்முகங்காட்டி எங்கே என்று எதிர்பார்க்கும் இளைஞர் பலரைத் திருச்சிப்பாசறையிலே கண்டோம். அக்காட்சி 'சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி' என்று கவிஞர் சொல்லிய சொற்றொடரின் எதிரொலி என்போம். போர்ப்படை நடத்திப் பாசறையமைத்துப் பகைவரைக் கொன்று வெற்றி பயந்து நிற்கும் தார்வேந்தனைப் பரணிபாடி மகிழ்விக்கும் பாவலன் வீரர்களிடையே தீரம்பேசி நிற்பது திராவிட நாட்டின் முந்தைநாள் பண்பு. அதுபோலப், புரட்சிக்கவிஞரின் உணர்ச்சிக் கருத்துக்கள் தூவப்பட்ட உள்ளத்தினுல் உந்தப்படும் இளைஞர்கள் வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே!' என்ற திராவிட நாட்டுப் பண்ணைத் தெருவெல்லாம் முழக்கஞ்செய்ய வீறிட்டெழுந்துள்ளார்கள். அந்த வெட்டாத கத்தியினை வீசாக்கையால் வெடுக்கென்று தூக்கி எமை வீழ்த்தப்பார்க்கும் முட்டாள்கள் வைதிகர்கள் குருக்கள் சூழ்ச்சி முனையழிய நடமாடிநாட்டு மக்கள் கட்டோடு சமத்துவத்தைத்தாவும் இன்பக் கருத்தளிக்கும் சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு என்ற பேரொலியை எங்கணும் எழுப்பத் துடிக்கின்றார்கள். பழைமையில் நெளியும் பாமரரும் பண்டிதரும், பணம் பிடுங்கும் பார்ப்பனரும் அந்நிலையைக்கண்டு மனங்கலங்குவர். யார் விரும்பினுலும், விரும்பாவிட்டாலும், தடுத்தாலும் தடுக்காவிட்டாலும், எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும் பகுத்தறிவுணர்ச்சி பரவியேதீரும். அது காலத்தின் கோலம். கருத்தின் வேகம்.

உரையாடலிலே ஒப்புக்கொண்டு மேடைப்பேச்சிலே வெளிப்படுத்த மறந்து போகும் 'விரிந்தமனப்பான்மையை யுடைய' தேசியத்தோழர்கள் பலரும் ஒப்புக்கொள்ளு கின்ற நிலைக்காவது வந்திருப்பது, தடுத்தும் தாண்டிப் பாய்ந்த உணர்ச்சி வெள்ளத்தின் விளைவு என்போம். நாளும் நாளும் செல்லவொழிந்தால் ஏது நினைந்து என்ன செய்வாரோ என்று பயங்கொண்டு நயங்கேட்கக் காத்துக் கொண்டிருக்கும் பண்டிதர்கள் சுற்றிவீற்றிருக்க, கவிஞ ரின் கவிதை ஒன்றைப்படித்துக் காட்டி இதுதான் கவி யாம்! இதில்தான் இலக்கணம் இருக்காம்! இதைப் பாடியவர்தான் கவியாம்!' என்று கேலிக்குரலிலே இழித்துக்கூறிய பண்டித மணியார் வாழும் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலே 'பாரதிதாசன்' படம் திறந்து வைக்கப்பட்டது என்றால்' கவிஞரின் கவிதை கல்லூரி மாணவர்களின் கருத்திலே எத்தகைய புரட் சியை எழுப்பியிருக்கவேண்டும்!

புரட்சிக்கவிஞரின் விதைகளிலே உள்ள கலையழகை யும், கவிநயத்தையும், கருத்தின்பத்தையும் பகுத்தறிவுப் பாதையில் நடக்கக் கற்றுக்கொண்ட பண்பினரேயன்றி மற்றையோர் போற்றார் - உணரார். காலத்திற்கு ஒட்டிய கருத்துக்களை முன்னேற்றப் பாதையிலே ஒட்டி, படித்தவ ரோடு பாமரரையும், பாட்டாளி மக்களையும், சேர்த்து இழுத்துச் செல்லுகின்றவன் எவனோ அவனே புத்துலகைத் தோற்றுவிக்கும் புரட்சிக்கவியாகக் காட்சி யளிக்கிறான். அவனே ஒடிந்த உள்ளங்களுக்கு உணர்ச்சி ஊட்டும் கவி! உயிர்க்கவி! மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கை, மதோன்மத்தர்களின் போக்கு, மமதையாளரின் செருக்கு, மதக்குருக்களின் கொடுமை, உலுத்தரின் உல்லாசவாழ்வு, வஞ்சகர்களின் சூழ்ச்சி, ஆகியவற்றை நமது புரட்சிக்கவிஞர் கண்டிக்கும் அளவுக்கு எந்தக் கவிஞனும் இந்த நாட்டில் இதுவரையில் சென்றதில்லை. கடவுளை இயற்கையில் காண்கிறார், நாகர்கோயிலார். நாமக் கல்லாரோ கடவுளும் காந்தியுமன்றி வேறொன்றறியேன் பராபரமே என்கிறார். காதலின் எழில், வீரத்தின் எழுச்சி, இயற்கையின் வனப்பு, தமிழின் சிறப்பு, கருத்தின்

தெளிவு, உழைப்போர் உள்ள நிலை மக்கள் பண்பு ஆகிய வற்றைக் கவிதைகளின் ஊடே ஊடே மல்கி மிளிரும்படி செய்யும் தன்மை நமது புரட்சிக்கவிஞரிடத்தே அமைந்திருக்கக் காணலாம். அறிவை அறிவாகவும் அன்பை அன்பாகவும் அழகை அழகாகவும் கவிஞர் தம் கவிதையில் காணுவாரேயன்றி அறிவே கடவுளாக, அன்பே கடவுளாக, அழகே கடவுளாகப் பகுத்தறிவுக் கவிஞராக, ஆனதன்பின் காணமாட்டார். அவர் தமிழிடத்துக் கொண்டிருக்கும் அன்பை "மங்கை ஒருத்தி தரும் சுகமும் மாத் தமிழுக்கீடாமோ" என்று வெளிப் படுத்தியிருப்பதுபோல் வேறு யாரும் வெளிப்படுத்த நினைத்ததில்லை. கவிகளில் பலர் வருந்தித் தத்தளிக்கும் இடங்களிலெல்லாம் மிக எளிதாகத் தாண்டிச் செல்லும் திறமைபடைத்தவர் நமது கவிஞர். தீந்தமிழுயர்வினுக் குச் செத்தான் அன்பன், செத்ததற்குச் செத்தாள் அத்தென்னுட்டன்னம் என்ற இடத்திலே மிக எளிதாகக் கதையை முடித்துவிட்டார். பாட்டுடைத்தலைவன் இறந்ததற்குப் பிறகு பாட்டுடைத்தலைவியை இறக்கச் செய்வதற்கு பலகவிதைகளும், பலபக்கங்களும், தாண்டிச் சென்று இடர்ப்பட்டு அவளும் இறந்தாள் என்று பலரும் முடிக்கக் காண்கிறோம். ஆனால் நமது கவிஞரோ "செத்தான் செத்தாள்" என்று மிக மிக எளிதாக எழில் துலங்கக் காட்சியைப் புலப்படுத்தியுள்ளார். கருத்துப் பொலிவோடு கூடிய புத்தம் புதிய உவமைகளை மக்கள் மனதிலே சென்று பதியும்படியாக ஆங்காங்குமிளிரச் செய்யும் பாங்கு கவிஞரிடத்தே தனித்தமைந்துள்ளது. எல்லாவற்றையும்விட நம்மையெல்லாம் மகிழச் செய்வது பகுத்தறிவுக் கருத்துக்களை எல்லாக் கவிதைகளிலும் அள்ளி வீசியிருப்பதுதான்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் களங்கமற்ற குழந்தையுள்ளங்கொண்டு கருத்துப் பொதிந்த உரை யாடல்களால் நம்மோடு மகிழும் பண்பினராவார். புலவர்கள் இயல்பாகவே வரவழைத்துக்கொள்ளும் வளைந்து வணங்கித் தன்னிலையில் தாழ்ந்து நடக்கும் பண்பினை நமது கவிஞரின் சொல்லிலோ, செயலிலோ,

தோற்றத்திலோ காண முடியாது. தன் உள்ளக் கிடக்கையை எவ்விடத்தும் எடுத்துக்கூற எப்பொழுதும் தயங்கியதில்லை. அத்துணை அளவு திண்ணிய உரம் படைத்தவர். அதற்கு மட்டும் ஒரு எடுத்துக்காட்டு. பிரான்சிலே ழூயில்பெரி என்பார் குடியரசுத் தலைவராக வந்தார். அவர் ஆட்சிப்பீடம் ஏறிய காலத்தில் கல்வி யானது குருமார்கள் கையில் இருந்தது. அந்தநாடு மட்டு மன்றி உலகில் எங்கணும் பாதிரிகள், குருமார்கள், ஆச்சார்ய பரம்பரையினர், தனிப்பட்டவர்கள் ஆகியவர் களால் கல்வி கற்பிக்கப்பட்டு வந்ததேயல்லாமல், எந்த அரசியலும் நேரே தொடர்பு படுத்திக் கைக்கொள்ள வில்லை மதகுருமார்கள் கையிலிருந்த கல்வியைப் பிடுங்கி அரசியலார் நடத்தினுல்தான் கல்வி எல்லோருக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும் என்று கருதிய ழூயில்பெரி, கருதிய தைச் செய்து முடித்தார். கல்விபுகட்டும் முறையிலே சிறந்த சீர்திருத்தத்தைச் செய்த அந்த தலைவரைப் போற்றிப்புகழ அவருடைய படத்தைப் பிரெஞ்சுப்பள்ளி களிலெல்லாம் விளங்கும்படி செய்வது வழக்கம். உலகிற்கே வழிகாட்டியாகத் தோன்றிய அந்தத் தலைவராம் ழூயில்பெரியின் நூற்ருண்டு நினைவுவிழா எங்கணும் கொண்டாடப்பட்டபொழுது, பாண்டிச்சேரியி லும் கொண்டாடப்பட்டது. அவ்விழாவை சிறப்புச் செய்ய எண்ணிச் செய்த பல நிகழ்ச்சிகளில் ஒன்ருக வாழ்த்துப்பாக்கள் பல மொழியிலும் இயற்றச்செய்வது என்ற திட்டத்தையும் போட்டார்கள். அதன்படி தமிழில் வாழ்த்துப்பா புனைய நமது கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். கவிஞரும் அதற் கிணங்கினுர். குள்ளநரிக்கூட்டத்தினர் சிலர் பாரதிதாசன் ஒரு சுயமரியாதைக்காரன், அவன் பாடுதல் ஏற்புடைத் தாகாது என்னும் கருத்துப்படச்செயற்குழுத்தலைவரிடம் புறஞ்சொல்லியும் பயனற்றும்போகவே பாரதிதாசனே தமிழில் பா இயற்ற வேண்டி ஏற்பட்டது. விழாவில், அழகு செய்யப்பட்ட மண்டபத்தில் கவர்னரும், அவரது ஆட்சி சுற்றமும், நீதிமன்றத்தலைவர்களும், குருமார்களும், பாதிரிமார்களும், பிரெஞ்சுநாட்டு, திராவிடநாட்டு மக்க

ளில் பணக்காரர்களும், பட்டம் பதவி வகிப்போரும், பாமரரும் குழுமி யிருக்கின்றார்கள். நிகழ்ச்சி நிரலின்படி தமிழில் வாழ்த்துப்பா இசைக்கப் புரட்சிக் கவிஞர் அழைக்கப்பட்டார். கவிஞரின் பாட்டை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துக் கூறச் சிலநரியுள்ளம் படைத்தோரும் அங்கிருந்தனர். காரணம் கவிஞரின் கவிதையில் வரும் சுயமரியாதைக் கருத்துக்களை எடுத்துக் காட்டி கவிஞரின்மீது பிரெஞ்சுத் தலைவர்களுக்கு ஆத்திரம் ஏற்படவும், அப்படி எடுத்துக்கூறிய தம்மீது அன்பு பிறக்கவுமாகும். புரட்சிக்கவிஞர் பாடத் தொடங்கி "**வறியோர்க்கெல்வாம் கல்வியின் வாடை**" என்று முதலடியை இசைத்தார். அதுமொழி பெயர்க்கப்பட்டது பின் "**வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை, வரவிடவில்லை மதக் குருக்களின் மேடை**" என்று இரண்டாவது அடியையும் சேர்த்து இசைத்தார். கவிஞரைக் காட்டிக்கொடுத்துத் தடை செய்யக்காத்திருந்த கல்நெஞ்சம் படைத்தகாக்கை யினத்தோன் உளங்களித்து மொழிபெயர்த்தான். உடனே பாதிரிமாரின் மலர்ந்த முகமெல்லாம் குவிந்தன. சாந்தம் குடியிருந்த உள்ளத்தில் சினம் குடியேறிற்று. கண்களின் வெண்மை சிவப்பாயிற்று. சாய்ந்திருந்தோர் நிமிர்ந்தார். கேளாச்செவிகள் கேட்கத்தலைப்பட்டன. விழாத் தலைவர் சோர்ந்தாரேனும் அறிவும் அவா மேலீட்டால் மற்றப்பகுதியையும் கேட்கவேண்டி 'கோந்தினியே' 'கோந்தினியே' (மேலே தொடங்கு மேலே தொடங்கு) என்றார். "**வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை, வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை, நறுக்கத்தொலைந்தது அந்தப்பீடை!**" என்று மூன்றாவது அடியையும் சேர்த்து கவிஞர் இசைத்தார். மொழி பெயர்க்கப்பட்டவுடன் கோணியிருந்த முக மெல்லாம் முற்றுங்கோணலாயின. தலைவர் மீண்டும் வாட்டமுற்றாரேனும் மேலும் அறிய 'கோந்தினியே' என்றார். "**வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை, வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை, நறுக்கத்தொலைந்தது அந்தப்பீடை, நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை!**" என்று நான்காவது அடியையும் சேர்த்து இசைத்தார் கவிஞர், மொழி பெயர்ப்பினைக் கேட்டார் தலைவர். சுருங்கிய முகம்

மலரத் துள்ளி எழுந்து சில சொன்னார். அதுதான்! அதுதான்! இந்தப்புலவன் சொல்லியதுதான். குருமார் களிடத்தே முடங்கிக்கிடந்த கல்வியை நாடெல்லாம் நீர் போல பரப்பினான் ஜூயில்பெரி. அதைத்தான் இந்தப் புலவன் சொல்கிறான். இவன்தான் புலவன்! மற்றையோ ரெல்லாம் புலவராகமாட்டார்! என்பது மகிழ்ச்சியினால் எழுச்சியுற்று அத்தலைவர் கூறிய கூற்று. அன்றுமுதல் அந்தத் தலைவரின் மதிப்பிற்குரிய கவியாகவும், உற்ற நண்பராகவும் கவிஞர் விளங்கினார். பாதிரிமாரின் சீற்றமும், பாராள்வோரின் கொடுமையும் சூழக்கூடும் என்ற நிலையிலும் கவிஞர் கொண்டிருந்த துணிச்சல் வேறு எந்தக் கவிஞருக்கும் இந்த நாளிலும் வந்ததாகக் கண்டறியோம். கவிஞர் தாம் பார்த்து வந்த வேலையினின் றும் ஓய்வுபெற்று வெளியேறிவிட்டார் என்பதைக் கேட்டுத் திராவிடம் மகிழ்ச்சிக்கொண்டு வருக என்று வாயார வாழ்த்தி மனமார வரவேற்கின்றது.

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

நான் முதன் முதலாகப் பாரதிதாஸன் அவர்களின் தனிப்பாடல்களைப் பழைய ‘ மணிக்கொடி ’ வாரப்பதிப்பில் பார்த்தேன். அவைகளிலிருந்த வார்த்தை நயத்தையும், சொல் வேகத்தையும், தெளிவையும் உண்மையான கவிதையின் ஸாரத்தையும் கண்டு திகைப்பும் சந்தோஷமும் கொண்டேன். பாரதிக்குப்பிறகு தமிழ்நாட்டில் ஒரு உண்மையான கவி இருக்கிறார். அவரிடம் நாம் எது வேண்டுமானாலும் எதிர்பார்க்கலாம். நான் படித்த வரிகளை எழுதக்கூடிய ஒருவர் ஒருபோதும் மட்டமாக எழுத முடியாது என்று சொல்லிக் கொண்டேன்.

பாரதியின் உத்தரவின் பேரில், பாரதிதாஸன், அவருடைய கம்பீரமான குரலில் பாடிய முதல் பாட்டை,

‘ எங்கெங்குக் காணினும் சக்தியடா !’ என்று ஆரம்பித்து, உடல் புள காங்கித மடையப் பாடின பொழுதும் அதை ஒட்டிய கதையைச் சொன்னபொழுதும் ‘ தமிழ் நாட்டின் உயிர் வாழும் கவிகளில் முதல் ஸ்தானம்கூட இவர் பெறலாம் போலிருக்கிறதே ” என்று வியந்தோம். பாரதிதாசன் எழுத்தில் எங்காவது கவிதை யழகு இருக்கத் தவறாது.

“ கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக்கிடந்திட்ட ஆணழகை
ஓடைக்குளிர் மலர்ப்பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்தவிழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி !
ஆடை திருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.

போலவும்,

ஓட்டும் இரண்டுளத்தைத்—தம்மில்
ஓங்கிய காதலினைப்
பிட்டுப் பிட்டுப் புகன்றார்—அதைப்
பெற்றவர் கேட்கவில்லை
குட்டை மனத்தாலே—அவர்
கோபப் பெருக்காலே
வெட்டிப் பிரிக்க வந்தார்—அந்த
வீணையை நாதத்தினை.

போலவும்,

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
'என்னை எழு'தென்று சொன்னதுவான்!
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்!
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

போலவும் கவிதைகள் நிறைய உண்டு!

"சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" "புரட்சிக் கவி"
"வீரத்தாய்"—இம் மூன்றும் நீண்ட பாடல்கள்.
"சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்பது பாரதியின் குயில் பாணியில் எழுதப்பட்டிருக்கிறது.

குப்பன் வஞ்சியின் காதலன். இருவரும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் வசிக்கிறார்கள். ஒரு நாள் அவள் காதலனை இரண்டு மூலிகைகள் கொண்டுவரச் சொல்லு கிறாள். அவைகளின் அந்தரங்கத்தைச் சொல்லி அவை வேண்டாம் என்று அவன் சொல்லியும் அவள் கேட்க வில்லை.

'பெண்ணுக் கிதுதகுமோ? வண்ணமலர்ச்
சோலையிலே
எண்ணம் வேறாகி இருக்கின்றேன் நான்' என்று
கண்ணை அவள் கையிலிட்டுக் கையேந்தி
நின்றிட்டான்.



395—6

அவள், "உயிர் துறப்பேன்" என்று பயமுறுத்துகிருள். குப்பன் மூலிகை கொண்டு வந்தால் என்ன தருவாய்? என்று கேட்கிருன்.

'முன்னே இலை கொடுத்தால் முத்தம் பிற கென்ருள்.

..........................................................
கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!

மூலிகையைக் கண்டெடுத்து விடுகிருர்கள். ஒன்றைத் தின்றவுடன் உலகத்தில் பேசுவதெல்லாம் கேட்கிறது.

ஒரு பிரெஞ்சுக்காரன் இத்தாலியனுக்கு சமத்துவத்தைப் பற்றிப் பேசுகிருன். ஒரு அமெரிக்கன் பேசுவதும் கேட்கிறது. ஒரு ஆங்கிலேயனும் பேசுகிருன்.

'......ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந்தீவு நமைவிட்டுப் போகாது.
வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்கள் என்ருல்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
..........................................................
பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்
சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதி காசங்கள்
தேன் சுரக்கப்பேசி இந்துதேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டு வந்த பூசுரரும் வாழ்கின்ருர்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கியே அந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப்படும் அங்கே.'

அவர்கள் கையோடு கை கலந்து முத்தமிடப் போகையிலே ஒரு பாகவதர் கதை செய்வது கேட்கிறது.

ஜாம்பவான் ஹநுமாரைச் சந்தித்து சஞ்சீவி பருவதத்தை எடுத்து வரச்சொல்லும் சந்தர்ப்பம். குப்பன் 'ஐயையோ, மோசம் வந்துவிட்டதே!' என்கிருன்.

'எப்படித்தான் நாம் பிழைப்போம்? ஏதும் அறிகிலேன்
சஞ்சீவி பருவதத்தைத் தாவித் தரையோடு
பஞ்சிருக்கும் மூட்டை போல் பாவி அவன் எவனே
தூக்கு கின்ருன்! வஞ்சி! சுகித்திருக்க எண்ணினையே!
சாக்காடு வந்ததடி!'

வஞ்சி சமாதானப் படுத்துகிருள்.

'காதல் நிசம். இக்கனிமுத்தம் மிக்க உண்மை!
மாது தோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்!'

மலையை ஹனுமார் கொண்டு போனவுடன் செத்த ராமனும் லக்ஷ்மணனும் சேர்ந்தெழுந்தார்!

ஹனுமார் மறுபடியும் பருவதத்தை இருந்த இடத்தில் வைத்து விட்டார்.

...மலையைக் கடுகளவும் ஆடாமல்
கண்ணுடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைப்பது போல்'

வைத்து விட்டாராம்!

பிறகு காட்சி தரும் மூலிகையைத் தின்கிருர்கள் உடனே, 'மனிதர் கூட்டத்தையும், பட்டை நாமக்காரப் பாகவதன் ரூபாயைத் தட்டிப் பார்க்கின்றதையும்' பார்த்தார்கள்.

உடனே வஞ்சி மூடப்பழக்க வழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் பற்றிப் பிரசங்கம் செய்கிருள்,

'மூடப்பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்ருே? உயர்வதென்ருே நானறியேன்'

என்கிருள்.

இருவரும் இயற்கையழகைக் கண்டு ஆறுதல் அடைகிருர்கள்.

'மாலைப் பொழுதும் வடிவழகு காட்டுது பார்!
சாலையிலோர் அன்னத்தைத் தன் பேடுதேடுது பார்!
என்னடி சொல்கின்ருய் ஏடி இளவஞ்சி?

என்கிருன் குப்பன். அவள்,

'......காதலரே நாம் விரைவாய்ச்
சாரல் அடைவோமே காதலுக்குத் தக்க இடம்'

என்கிருள்.

கவிதையின் போக்கை ஒருவாறு வாசகர்களுக்குக் காட்டுவதற்கே இதை மட்டும் கொஞ்சம் விரிவாக எழுதியிருக்கிறேன்.

—காலஞ் சென்ற, கு. ப. ரா.

கவிஞர்கள் எப்போதுமே உணர்ச்சிக் களஞ்சியங்கள். பாரதி தாசன் அதற்கொரு சிறந்த உதாரணமாவார். "ஓ கவிஞன் பிரசாரம் செய்யலாமோ? இவர் செய்கிறாரே!" என்போர் சிலர் உண்டு. பாரதி தேசியப் பிரசாரம் செய்தார். அவரைத் தேசியக் கவி என்று கொண்டாடுகிறோம். பாரதி தாசன் தாம் சரியென்று நினைக்கும் சமூகப் புரட்சிப் பிரசாரம் செய்தால், அதுமட்டும் எப்படித் தவறாகும்? கவிஞர்களும் மனிதர்கள் தான். அவர்களுடைய மனித உணர்ச்சிகள், பண்பும் பயனும் பெற்று, உள்ளதைச் சொல்லோவியங்களாய் வெளிப்படுவதைத்தான் கவிதை என்கிறோம். பாரதி தாசனின் சில கொள்கைகள் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதற்காக, அவருடைய கவிதைகளின் சிறப்புக் குன்றிவிடாது. சகல கலைஞருக்கும் ஒரு பண்புதான் மிக முக்கியமாகும். "ஓவியம் வரைந்தான்—அவன்தன் உளத்தினை வரைந்தான்." என்று பாரதி தாசன் கூறுவதேபோல, உள்ள உணர்ச்சியை ஒளியாமல், வேகத்தோடு வெளியிடுவதுதான் அது. இந்தப் பண்பு பாரதி தாசனிடம் நிறைந்திருக்கிறது.

சொற்கள் மந்திர சக்தியைப் பெற்று விடுகின்றன கவிஞர்களின் வாக்கிலே. இந்த அற்புதத்தைப் பாரதி தாசனின் பல பாடல்களிலே நாம் காணலாம். 'நடுவீதியிற் பாவோடும் மடவார்' களை நடை ஓவியங்கள்; என்று அவர் வர்ணிக்கும் பாட்டைப் படிக்கும்போது, அந்த நடை ஓவியங்கள்' நம் உள்ளக் கண்முன்னே நர்த்தனம் புரியத் தொடங்கிவிடுகின்றன. 'காடைக்'காரக் குறவன் வந்து பாடப்பாட' ஆடும் குறத்தி, கவிஞரது பாட்டின் ஒவ்வோர் அடியிலும், அதன் ஒவ்வொரு சொல்

விலுமே ஜீவநடனம் புரிவதுபோல் நமக்குக் காட்சியளிக்கிறுன். பாரதி தாசனின் 'உலகின் நோக்கம்', பாரதியின் 'ஊழிக்கூத்'தைப்போல் ஆவேசம் பொங்கவில்லையா? ஏனெனில், பாரதிக்குப் பராசக்தி ஓர் உண்மைத் தெய்வம். பாரதி தாசனுக்கோ, இயற்கையின் உருவகமே இங்கே அன்னையாகிறது. ஆயினும், இந்த உலகத் தாயின் கூத்து, உவமையையே நோக்கமாய்க் கொண்டதாகப் பாரதி தாசன் வர்ணிக்கும்போது, நம் உள்ளம் நம்பிக்கை பெற்றுப் பரவசமடைகிறது. பாரதி தாசனின் பல சொல்லோவியங்களிலே சொற்கள் கொஞ்சுகின்றன. 'வான் நழுவி வந்த வளர்பிறையே கண்ணுறங்கு! கன்னம் பூரித்துக் கனிஉதடு மின்உதிர்த்துச் சின்னவிழி வீசிச் சிரித்த தென்ன செல்வமே' என்ற தாலாட்டு வரிகள் போன்ற எத்தனையோ உள்ளங் கொள்ளை கொள்ளும் வர்ணனைகளைப் பாரதி தாசனின் கவிகளிலே அங்கங்கே நாம் காணலாம்.

பாரதிதாசன் ஜனநாயக உலகத்தின் கவி, உலகெங்குமுள்ள நவயுகக் கவிஞர்களில் அவரும் ஒருவர். அவர் ஏழை பங்காளன். கடவுளையும், மன்னர்களையும், பிரபுக்களையும் பற்றிப் பாடியதுபோகப் பாட்டாளி மக்களைப் பாடும் காலம் வந்துவிட்டது. அதன் முன்னணியில் நிற்கும் ஒருவர் பாரதி தாசன், ஆலையின் சங்கே நீ ஊதாயோ...கால முதல் அவர் நெஞ்சம் கொதிக்கவே, வேலை செய்தாரே என்வீட்டை மிதிக்கவே' என்று ஆலைத் தொழிலாளியின் காதலி இரங்கும்போது, அந்த ஏழைக் குடிசையின் தாபங்களெல்லாம் நம் உள்ளத்தை வாட்டிவிடுகின்றன. தர்ம சொரூபமாக அவருக்குத் தோன்றுபவர், பாட்டாளி மக்கள்தான். 'அழுக்குத் துணிக்குள்ளே அறத்தொடு பிணைந்துள்ள அவ்வுயிரே என்றன் ஆருயிராம்' என்கிறுள் அவருடைய இரும்பாலைத் தொழிலாளியின் இல்லக்கிழத்தி.

மனித அனுபவங்களை மட்டுமன்றி, இயற்கை அழகையும் பாரதி தாசன்' பாடுவார். "பழமையிலே புதுநினைவுபாய்ந் தெழுந்தாற்போலே! அமுதமுகம் சிரித்தது

போல், அல்லிவிரிந்தாற்போல்......குருட்டு விழியும் திறந்ததுபோல் இருட்டில் வானவிளக்கு" என்று நிலாவைக் கண்டு உள்ளம் பொங்கி வர்ணிப்பார். 'மல்லிபிளந்தது போன்ற' கண்ணை உடையதொரு சின்னஞ் சிறிய சிட்டுக் குருவியைக் காணும்போது, அன்பு நிறைந்து நகைச்சுவையோடு, 'குத்தின நெல்லைத் தின்று நம் வீட்டுக் கூரையில் குந்திநடத்திடும் பாட்டு' என்று புகல்வார், மழையை வர்ணித்தால், 'தகரப்பந்தல் தணதண' என்னும் ஓசையையும் 'தாழம் குடிசை சளசள' என்னும் ஒலியையும் அவர் பாடலின் வரிகள் நம்காதிலே கொணர்ந்து பெய்துவிடுகின்றன.

'சாதி சமயக் கடைவீதியின் அப்பால் ஒரு சோதி அறிவிற் சரிநீதி விளங்கும்; அதைக் காதினில் தினம்' கேட்க முயலுபவர் பாரதி தாசன். இத்தகைய முயற்சியிலே சில உருவெளிகள் காணப்படுவது இயல்பு. அவைகளைக் கண்டு நாம் மிரளவேண்டியதில்லை. சொற்களை மீறி ஒளி வீசும் அவருடைய கருத்துக்களை நாம் அறியவேண்டும். அந்தக் கருத்துக்களின் மூல உணர்ச்சிகளை நாம் உணரவேண்டும், பாரதி தாசனின் கவிதை தமிழ்நாடெங்கும் பரவவேண்டும். ஏனெனில், அவர் ஓர் உயர்ந்த கவிஞர்.

தி. ஜ. ர.
ஆசிரியர் "சக்தி"

கவிஞர் பாரதிதாசன் பாரதியாரோடு நெருங்கிப் பழகி, அவருடைய குரலின் கவிதா வெறியையும் இசையமுதையும் உணர்ந்து, அனுபவத்திலும் கொண்டு வந்து விட்டார்.

சொந்த அனுபவங்களைப், பாரதிதாசன், இசைச் சிறப்புடன் பாடியிருக்கும் சின்னஞ்சிறு கவிதைச் சித்திரங்கள் அழகின் ஜ்வாலையை அள்ளி வீசுகின்றன; உள்ளத்தில் மின்னும் உண்மைகளைத் தமிழ் மொழியில் ஆவேசத்துடன் அமைத்திருக்கிறார்.

இவருடைய சில நயமான பாடல்கள், கவிதைக் கலைக்கு ஒரு புஷ்பாஞ்சலியாகவே பொலிகின்றன; மொழியின் சிருஷ்டி மெருகில், ஒரு புதுமையும் எழிலும் தோன்றித் தோன்றி மறைகின்றன. மொழித்திரையின் பின், பாரதிதாசன் பாடியிருக்கும் குடும்ப விளக்கு ஓர் அபூர்வ இல்லற வாழ்க்கைச் சித்திரம். குடும்பத்தில், ஒரு மனைவி தனது கடமையை உணர்ந்து உணர்ந்து, இடையறாது தினந்தோறும் பணியாற்றிவரும் அருமையான சித்திரம் இது; வாழ்க்கைத் துறைமுகத்தில் இல்லற தீபஸ்தம்பமாக ஒரு மனைவி ஒளி வீசுகிறாள். கடமையை மறந்தவள் காதலியுமல்ல, சூரியன் உதயமாகிக், கதிர் வீசி, உலகத்தைக் காத்து அந்தியில் மறைவதுபோல, ஒரு உண்மை மனைவியும் உணர்ந்து உணர்ந்து தனது கடமையை இரவும் பகலும் இடையறாது செய்வதில் இன்ப மடைகிறாள். பாரதிதாசன் அமைந்திருக்கும் இந்தச் சித்திரம், அனுபவத்தில் உதித்த சித்திரம். ஒரு உத்தமமான மனைவியின் இல்லற தருமம் இந்தப்

பாட்டில் ஜோதிப் படமாகவே சுழன்று சுழன்று வருகிறது. சின்னஞ் சிறு நிகழ்ச்சிகளும் சித்திரப் பொலிவுடன் மின்னுகின்றன.

மனைவி, இதய நிறைவுடன் இன்னிசையில் பாடி, தன் கணவனையும் குடும்பத்தையும் மகிழ்விக்கும் நிலையைப் பாருங்கள் :

“ குளிர்விழி, இளநகைப் பூங்
குழலினள் குந்தினள் ; தன்
தளிருடல் யாழ்உ டம்பு
தழுவின ; இருகு ரல்கள்
ஒளியும் நல்வானும் ஆகி
உலவிடும் இசைத்தேர் ஏறித்,
தெளிதமிழ் பவனி வந்தாள்
செவிக்கெலாம் காட்சி தந்தாள்.
உள்ளத்தில் கவிதை வைத்தே
உயிரினல் எழுப்பினள் ; அவ்
வெள்ளத்தில் கலையைக் கோத்தாள் ;
தெள்ளத் தெளிந்த நீர்போல்
செழுந்தமிழ்ப் பொருள் போய் நெஞ்சப்
பள்ளத்தில், கோடைத் துன்பம்
பறந்திடப் பாய்ச்சி விட்டாள்.
“ வீடெலாம் இசையே ; வீட்டில்
நெஞ்செலாம் மெருகே : நெஞ்ச
ஏடெலாம் அறிவே ; ஏட்டின்
எழுத்தெலாம் களிப்பே ; அந்தக்
காடெலாம் ஆடும் கூத்தே !
காகங்கள் குருவி எல்லாம்
பாடெலாம் இவ்வா றுனல்
மனிதர்க்கா கேட்க வேண்டும் ?”

இது ஒரு அருமையான கவிதைச் சித்திரம் அல்லவா? இனி நமது புதுமைக் கவியின் 'இசையமு'தைக் குடிப் போம். இந்த நூலில். இசை விறுவிறுப்புடன் சுழல்கிறது உள்ளே, வாழ்க்கையின் நிழல்கள் பிரதிபலிக்கின்றன. வண்டிக்காரன் முதல் பெண்கள் கடன் வரை, இசை துள்ளி வருகிறது; தமிழ் மொழி உணர்ச்சி மேலாகவே வருகிறது; நாதம், எல்லா வாதங்களையும் முறியடிக்கிறது.

"தெள்ளுதமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ் மறவர் யாம் யாம் யாம் பகையே!

நிலவைப் பற்றிய சித்திரத்தில் புதுமை மின்னுகிறது.

"முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்தது விண் மேலே—அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!"
அமுதமுகம் சிரித்தது போல்
அல்லி விரிந்தாற் போல்—மேல்
சுழற்றி எரிந்த வெள்ளித் தட்டுத்
தொத்திக் கிடந்தாற் போல்!
முழுமை நிலா! அழகு நிலா!
குருட்டு விழியும் திறந்தது போல்
இருட்டில் வான விளக்கு!"

இது (Shelly) ஷெல்லியின் நினைவையே நமக்கு நினைவுறுத்துகின்றது. ஆனால், இது பாரதிதாசனின் சொந்தச் சித்திரம். அனுபவச் சித்திரம்.

'பூனைப் பாட்டு' பூனை போல ஓடி வருகிறது: இது ஒரு இசைச் சுழல்; ஹாஸ்யச் சித்திரம். பூனையின் விசித்திர வடிவமும் அதன் குணமும் இந்தப் பாட்டில் நன்கு அமைந்திருக்கின்றன.

" பூக்காரியின் பூவும் பேச்சும் கற்பனையும் உணர்ச்சி அலையாகவே உதயமாகின்றன. இயற்கைக் காதலின் எழில் கும்மாளம் போடுகிறது. குழந்தையின் தாலாட்டு ஒரு இசைத்தேன் !"

பாரதிதாசன் பாட்டைப் படிக்கும் போது இன்பம் துள்ளிக்குதித்து வருகிறது. சொற்கள் கவிதாஜீவனுடன் துள்ளி விளையாடுகின்றன.

" உவகை ! உவகை ! உலகத்தாயின் கூத்து—வந்து
குவியுதடா நெஞ்சில் உவகை ! உவகை !"

நெருங்கிய நிலையில் இது பாரதியாரைப் பின்பற்றிய சந்தம். இசையின் வேகம் அவ்வாறு தொனிக்கிறது. அனுபவித்துப் பாடினால் இதன் உண்மை தெரியும்.

சொற்கள் உணர்ச்சியின் ஆழத்தில் பிறந்து இன்பமாய் திகழ்கின்றன.

எளிய சொற்களும் சந்தப்புயலில் சிறகடித்து வாழ்கின்றன.

—வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.
நிர்வாக ஆசிரியர் : ஸ்டார் பிரசுரங்கள்.

# புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன் புரட்சிக் கவிஞர். மற்றப் புதுக் கவிஞர்களிடம் இல்லாத சில விசேஷ அம்சங்கள் இவரிடம் உண்டு. தேசிக விநாயகம் பிள்ளை சாந்தமும் அமைதியும் அன்பும் தழைக்கப்பாடுகிறவர். போர், வெற்றி, சமூக, அரசியல், புரட்சிகள் இவைகளுக்கும் அவருக்கும் வெகு தூரம். ஆனால் பாரதி தாசன், போர்முரசு கொட்டும் புதுக் கவி. 'கொலைவாளினை எடடா மிகு - கொடியோர் செயல் அறவே' என முரசடிக்கிறார். சமூகக் கொடுமை யெல்லாம் தகர்த் தெறியவேண்டும் என்பதே இவர் கொள்கை. இவர் கொட்டும் பேரிகை நாதத்தைக் கேளுங்கள்.

'நல்லவர் நாட்டினை
வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப்பான்மை,
தொல்புவி மேல்விழும்
பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்.
சொல்லிடும் நெஞ்சில்
எரிமலை பூகம்பம்
சூழத்தகாது கண்டாய்.
செல்வங்கள் யார்க்கும்
என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்.'

இவர் பாடல்களெல்லாம் ஆணித்தரமானவை; அவைகளில், காணப்படும் அபிப்பிராயங்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத்தான் இருக்கும். காதலை நம் நாட்

டினர் இழிவுபடுத்தி வருவதைக் கண்டு, இவர் ஒரு கதா பாத்திரத்தின் வாயிலாகக் கூறுவது இது :

'காதலிருவர்களும் - நம்
கருத்தொருமித்த பின்
வாதுகள் வம்புகள் ஏன்? இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?
சூது நிறையுலகே - ஏ துட்ட இருட்டறையே!

கடல் சூழ்ந்த உலகம் அவருக்குச் 'சூது நிறை உல'காகவும் 'துஷ்ட இருட்டறை'யாகவும் தோன்றுகிறது. உண்மையும் இதுதானே!

தாலாட்டுப் பாடல்களில்கூட, இவருடைய தத்துவங்களும் வயிற்றெரிச்சலும் கலந்து வருகின்றன :

'எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை
வெல்லம் போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,
காப்பார் கடவுள் உமைக் கட்டையில் நீர் போகுமட்டும்,
வேர்ப்பீர், உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு!'

கடுமையான நடுவேயும், கவி, குழந்தையை 'என் செந்தமிழே' என்று அழைப்பது மிக அருமையாக உள்ளது. பெண் குழந்தைக்கு ஒரு தாலாட்டு;

'மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!'

* * *

"புண்ணிற் சரம்விடுக்கும் பொய்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே!'

* * *

எல்லாம் கடவுள் செயல் என்று துடை நடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய்ய வந்தவளே!

*

—ப. ரா.

பாரதி தாசனை நான் நேரில் கண்டதில்லை; ஆனாலும் நான் அவரைக் கண்டிருக்கிறேன். அவரது திருவுருவப் படத்தைப் பத்திரிகைகளில் பார்த்தேன். அவரது ஒப்பற்ற எழுத்துக்களைக் கண்டேன். அவற்றில் இன்பம் நுகர்ந்தேன். இன்னும் சொல்லமுடியாத - உணர்த்த முடியாத உணர்ச்சிகள், எளிமை அருமை, இனிமை என்னெல்லாமோ கண்டேன். பத்திரிகைப் படமும் படித்துத் துய்த்த பாடல்களும் கவி பாரதி தாசனை என் உள்ளத்திரையில் தெள்ளிய உயிரோவியமாகக் கொண்டு நிறுத்தின. ஆம்! என் முன் பாரதி தாசன் நின்றார். கண்ணார அவரைக் கண்டேன்; களி கொண்டேன். பாரதி தாசனே விரும்பினாலும் என் முன்னின்று இனி அகல முடியாது!

தமிழ் நாட்டில் கவிஞருக்குக் குறைவில்லை; நாம் அதை வரவேற்க வேண்டியதுதான். ஆனாலும், 'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாய் விடுமா?' கவிஞர்கள் எல்லோரும் புரட்சிக் கவி கனக சுப்பு ரத்தினமாகி விடமாட்டார்கள். பாரதி தாசனுக்கு ஈடு பாரதி தாசன்தான்; அல்லது அவரது கவிதைகளே தான்.

எவ்வளவோ கவிதைகள் படித்திருக்கிறோம். சில நம் மனதைக் கொள்ளை கொள்கின்றன. சில நம்மைச் சிந்தனைச் சுழலில் சிக்க வைக்கின்றன; சில நம் இதயத்தில் இடம் பெறுகின்றன: பல சிறிது நேரத்திற்குள்ளாகவே சிந்தனையினின்றும் சிதைந்து தேய்ந்து மாய்ந்து விடுகின்றன. சுப்புரத்தினத்தின் கவிதைகள் நம்மைச் சிந்தனைச் சுழலில் ஆழ்த்துவதோடு உள்ளத்தையும் கொள்ளைகொண்டு விடுகின்றன.

முன்பெல்லாம் கவிதைகள் எழுதுவதென்றால், அகராதி, நிகண்டு இவற்றிலிருந்து புரியாத வார்த்தைகளைப்

பொறுக்கி எடுத்து 'சந்தம்' எனும் போர்வை போர்த்து 'மோனை' எனும் முத்துக் கட்டி, 'எதுகை' யெனும் அணி அணிவித்து எழுத்துக் கூட்டங்களை இழுத்துக் கட்டி, "இதோ, பார்! இவைதான் கவிதைகள். எப்படி யிருக்கின்றன?" என்று கேட்பார்கள். படித்தவர்கள் (?) எல்லாமே இவற்றை வான்கிழியப் புகழும்போது பாமரன் 'ஆமாம்! போடுவதன்றி அடுத்தது செய்ய அறியான்.' 'அடே, புரியாத பாஷையில் நான்கு நான்கு வரியாக சுக் கும் எகு திப் பிலி' என்று செப்பிடு வித்தை செய்வது தான் கவிதையாம். இவற்றிற்கும் நமக்கும் ஒத்து வராது" என பாமர மக்களை கலங்க வைத்தன; அவை கவிதைகள்! துணிந்து இதற்கு முற்றுப் புள்ளி வைத்தவர் பாரதியார்; எழுத்துக் கூட்டமும் வெறும் இன்னிசையும் கவிதை அல்ல; எண்ண எழுச்சியும், எளிமையும் எவருக்கும் விளங்கும் வகையில் உள்ள உணர்ச்சிகள் செய்யுள்களில் உந்தி வந்து கூத்தாட - பாமரனும் படித்துப் பரவசப்படுவதுதான் கவிதை என்று வழிகாட்டி நின்ருர் பாரதி. பாரதியையும் ஒப்பற்ற அவரது கவிதைகளையும் ஒரு காலத்தில், 'பைத்தியம்!' என எள்ளி நகையாடிய சில பெரிய மனிதர்களும் இன்று பாரதியுடன் உறவு கொண்டாடுகிருர்கள்; கொண்டாடி விட்டுப் போகட்டும்.

பின்னர் பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பாரதி தாசன் பண் நிறைந்த பாடல்களைப் பாடினுர். உணர்ச்சி ஊட்டும் வார்த்தைகளும், உள்ளத்தைப் பிரதிபலிக்கும் சொற்ருெடர்களும், 'டண், டண்' எனப் பண் இசைக்கும் கிண்கிணி கீதமோடு, சந்தமிசைக்கும் செய்யுள்களும் குதித்தோடி வந்தன. பாரதி தாசனிடத்தில், இவற்றின் இனிமையைக் கண்ட பாமர மக்களும் கவிதைச் சுவையை கனிவோடு பருக ஆரம்பித்தனர்.

இதனுல் இலக்கணப் போர்வையை விட்டு வெளியே வர மறுத்த கவிஞர்களும் இன்று வெளியே வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. படித்துப் பட்டம் பெற்றவர்கள் தான் கவிகளைச் சுவைக்க முடியும் என்ற எண்ணம் காற்றில் கலந்து மறைந்தது.

அன்பர் பாரதி தாசனின் கவிக் குழந்தைகள் வீரத்துடன் விளங்குகின்றன; காதல் கனிவுக்கும் குறைவில்லை, கவிகளில் கலந்துள்ள உவமை யழகைச் சிறிது உன்னிப் பார்த்தால் உள்ளம் குளிர்ந்து உவகை பூத்துப் பொங்கிப் பூரித்துப் போகிறோம் நாம். சமூக நிலையையும் ஊழல்களையும் ஒழிக்கக் கவி பாரதி கூட இவ்வளவு பாடல்களை உதிர்த்துத் தள்ளவில்லை. உருண்டு செல்லும் உலகத்தின் உன்மத்த வேகத்தில் நாம் பின் தங்கிவிடக் கூடாது என்பதற்காகப் பாரதி தாசன் பதறிக் கதறும் கவிகள் பலப் பல. பாரதி தாசனை அறிய முதலில் வெளி வந்த 'பாரதி தாசன் கவிதைகள்' என்ற நூலே போதும். விதவா விவாகம், கைம்மை ஒழிப்பு, காதல் மணம், கர்ப்பத் தடை முதலியவற்றை எளிய செய்யுள்களில் இனிமையாக உள்ளத்தை உருக்குமாறு செய்யும் இன்ப வித்தை பாரதி தாசன் ஒருவரால்தான் செய்ய முடியும்.

ஆஸ்கார் ஒயில்டு என்ற ஆங்கில அறிஞன் எழுதிய 'ஸலோமை'ப்பற்றி பிரமாதமாகக் கூறுபவர்கள் 'எதிர் பாராத முத்தத்தை'ப் படித்துப் பார்க்கட்டும். ஆஸ்கார் ஒயில்டையும், அடுத்து ஷேக்ஸ்பியரையும் நாம் நாடித் தேடிச் செல்வது உள் வீட்டில் புத்துருக்கு நெய் மணம் கமழ ஊருக்கு வெளியே வெண்ணெ விற்குமா என்று பார்ப்பதையே ஒக்கும். தாசனின் எழுத்துக்கள் ஒரு முறை படித்தாலே சதா நமது காதருகே கெக்கலி செய்து கொண்டிருக்கும்.

கொண்ட கொள்கையைக் கடைப்பிடிப்பதில் பாரதி தாசன் நிலைத்த நெஞ்சினர். இதைச் சாக்காக வைத்துக் கொண்டு அவரது கவிதைக் கனலை தங்கள் காரணமாகிய கவைக்குதவாத சல்லாத் துணியால் போர்த்துவிட முற்படுகின்றனர். பேதமை! கொள்கையை மட்டும் கனகசுப்பு ரத்தினம் விட்டுக் கொடுத்திருந்தால் 'பாரதி தாசனா'கவே வைத்திருக்க மாட்டார்கள்; 'பாரதி ஆசானாகவே' போற்றி யிருப்பார்கள்.

பாரதி தாசனின் மேன்மையைப் பாமரர்களே உணர்ந்து புகழ ஆரம்பித்ததும், படித்தவர்கள் என்று

தங்களைத் தாங்களே சொல்லிக்கொள்பவர்கள். "பரவா யில்லை, ஆனால் இன்னும் அவரது கவிதையும், அவரும் பக்குவமடையவில்லை' எனச் சொல்கின்றனர். உண்மை யில் தமிழ் மொழி ஓங்கி வளர்ந்து உலகெல்லாம் பரவி உவகைப் பூக்கள் மலர உணர்ச்சிக் கனிகள் சொரிய வேண்டுமென விரும்பும் தமிழர்கள், பாரதி தாசனின் மேதையை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. ஓரளவு தமிழில் இன்று ஒரு சில செய்யுள் நூல்கள் நடமாடக் காரணமே பாரதியும், அவரது தாசனுமே ஆவார்கள்.

பாரதி தாசன் பால்யத்தில் பாடிய பாடல்களில் சிறப்பான செய்யுள் மணம் கமழுகின்றனவாம். ஆனால் அவை மதத்தைப் பற்றியவையாக இருப்பதால் வெளி யிடக் கவிஞர் மறுப்பதாக கவிஞருடன் நெருங்கிப் பழ கிய நண்பர் ஒருவர் சொன்னார். கடல் வாய்ப்படாமலோ, காலத்திற்கும், கரையானுக்கும் இறையாகாமலோ அவற்றை இப்போதே நாம் காத்துவைத்துப் பொக்கிஷம் எனப் போற்ற வேண்டும். எனவே கவிஞர், முல்லைப் பதிப்பகத்தார் மூலமாகத் தமது முதல் - பாடல்களையும், தமிழுலகுக்கு அளித்தல் வேண்டும். இதை எவ்வித மாயினும் செய்தே தீரவேண்டும். மத மாத்சர்ய மாயை யில் நாம் வீழ்ந்து விடாதுபடி கவிஞரின் கன்னிக் கவிதை களே நம்மைக் காக்குமாக!

பாரதி தாசன் பல்லாண்டு வாழ்ந்து தரணியெலாம் தமிழ் மணக்கச் செய்து மேலும் புகழ் மணந்து வாழ்க! வாழ்கவே!

—வ. உ. சி. சுப்ரமணியம்

(தேச பக்தர் - கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் அருமைப் புதல்வர்.)

தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் உணர்ச்சி நிறைந்த புலவர்கள் இருந்தனர். அதன்பிறகு, தமிழ்நாட்டில் கவிகள் பெரும்பாலும் சாதிமத சமயங்களில் உழன்று, உலகியலை மறந்து, கடவுட் பாக்களே பாடி மக்களை உணர்ச்சியற்ற பூச்சிகளாக்கி விட்டனர். இத்தகைய குறைபாடுகள் ஒழியவே இருபதாம் நூற்றுண்டில்—நம் தமிழ்நாட்டில் புரட்சிக்கவி பாரதிதாசன் தோன்றி யுள்ளார்.

## இலக்கியம் :

இலக்கியமே ஓர் நாட்டின் பண்பாடு ; அது ஒழுக்கம், முதலியவற்றை உணர்த்துவது. நல்ல இலக்கியங்கள், மக்கள் அறிவை விளக்குவனவாகவும், பரந்த உள்ளத் துடன் மக்கள் அன்புகொண்டு இன்புற்று ஒன்றுகூடி வாழச்செய்வனவாகவும் உள்ளன.

“ மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனேபாவம் வானைப்போல் விரிவ டைந்து,
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடி ”—

என்று இலக்கியத்தின் பண்புகளைக் காட்டுகிறார் நம் கவிஞர்.

## புரட்சி :

ஒவ்வொரு நாட்டிலும் பற்பல துறைகளில் பற்பல காலங்களில் மாறுதல்கள் உண்டாயின.

அரசியல், மதம், கல்வி, கைத்தொழில், இவைகள் யாவற்றிலும் புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன.

புரட்சியே விரைவினில் வெற்றி தரவல்லது. நம் கவிஞர் பாரதிதாசனின் புரட்சி, அறிவுப் புரட்சியாகும்.

மூடக்கொள்கை, சமயக் கட்டுப்பாடு, அடிமைத்தனம் இவைகளிலிருந்து விடுபட்டு அறிவின் இன்பம் பெறச் செய்வதே நம் கவிஞரின் நோக்கம்.

"இக்கால நால்வருணம் அன்றிருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றிப்
புக்க பயன் உண்டாமோ?"

"ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன்
புலிவேஷம் போடுகின்ருன்! பொதுமக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்ருே?"

"ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!"

என்ற வரிகளில் காணும் கருத்துக்கள் முதலாளிகளுக்குத் துன்பமும், பாட்டாளிகளுக்கு இன்பமும் தருவன! புரட்சிக்கு விதைவிதைப்பாகும்!

## தமிழ் :

தமிழ்மொழியை அன்பே! உயிரே! ஆவியே! என்று உள்ளங்கனிய அழைக்கிருர்.

## பொறுமை :

பொறுமை யென்பது வேண்டியதுதான். ஆனுல் அப்பொறுமையினுல் பயனேற்பட வேண்டும்.

நாட்டிற்குக் கேடு வரும் நேரத்தில் பொறுமை வேண்டும் என்று சும்மா இருத்தல் பொறுமை ஆகாது என்ற ஓர் அரிய கருத்தை, செய்யுளில் அமைத்துள்ளார்.

“பலமுறை பொறுப்பாய் வேறு
பழுதும் நேருமெனில் சீறு!
நிலைமை மிஞ்சுகையில் பகைவனை
நீருக்கலே பொறுமையின் பயன்.”

**ஒற்றுமை :**

புறுக்கள் இரையுண்ணுவதில் ஓர் ஒற்றுமை கற்பிக்கப்படுகிறது.

“இட்டதோர் தாமரைப் பூ
இதழ்விருந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறுக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்து மில்லை;
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை.”

அவ்வளவு ஒற்றுமையுள்ள புறுக்களிலும், சில வேளைகளில், அன்பிழந்து தவறு செய்கின்றனவாம். அவைகள், ஒருவேளை மனிதர்களிடமிருந்து, கற்றுக்கொண்டன போலும் என்று வேடிக்கையாகக் கூறுகிறார்.

“அன்பு
“தவழ்கின்ற புறுக்கள் தம்மில்
ஒருசில தறுத லைகள்
கவலைசேர் மக்களின் பால்
கற்றுக்கொண் டிருத்தல் கூடும்.”

இங்கு “கவலைசேர்மக்கள்” என்ற தொடர் குறிப்பிடத் தக்கது. மக்கள் கவலையின் காரணமாகத்தான் அநேகமாகத் தவறு செய்ய நேர்கின்றது.

**காதல்:**

ஒருவனும் ஒருத்தியும் மனம் உவந்திடில் அதுவே காதல். உண்மைக் காதலுக்கு இடையூருக.

"பேடி வழக்கங்கள், மூடத்தனம் இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள் !

**காதலின் தன்மை:**

"காதல் அடைதல் உயிரியற்கை !—அது
கட்டில் அகப்படும் தன்மை யதோ? அடி
சாதல் அடைவதும் காதலிலே—"

**விதவை மணம்:**

காதலில் ஆடவருக்கும் பெண்களுக்கும் மாறுதல் உண்டோ? மனைவி செத்தால் பெருங்கிழவனும் மறு மணம் செய்துகொள்ளப் பார்க்கிருன். பெண்கள் மாத்திரம் கணவன் இறந்த பிறகு மணத்தல் தீதோ? என்ற நியாயத்தைக் காட்டுகிருர் ஓர் செய்யுளில் அழகாக.

" ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட்கின்ருன்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின்மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

**இயற்கை அழகு:**

அழகே இன்பம். "நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை."

" அழகுதனைக் கண்டேன் நல்லின்பங் கண்டேன் "
" பழமையினால் சாகாதவள் "

என்று அழகின் தன்மையைக் காட்டுகிறார். இதே கருத்துப்பட ஆங்கிலக்கவி " ஷெல்லி " ஓரிடத்தில் " A thing of beauty is joy " என்று பாடி யிருக்கிறார்.

**உவமைகள் :**

உயர்ந்த கவிஞர்களுக்கு இயற்கையாகவே அழகில் உவமைகள் அமைவதுண்டு.

நிலாவைப் பெண்ணாகவும், நீல வானத்தை முக்காடாகவும், குன்றின்மேல் வெண்மையான நிலவொளியை வெண்ணெயின் நிறத்திற்கும், அவ்வெண்ணையை எடுத்துண்ணுவதுபோல் அழகை உண்ணும்படியும் அமைவுறப் பாடுகிறார் !

" நீல முக் காட்டுக் காரி
நிலாப்பெண்ணாள் வற்றக் காய்ந்த
பாலிலே உறை மோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுள்ள வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசி விட்டாள் !
ஏலுமட் டுந்தோழா நீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம் !"

இதையே ஒரு சைவப்புலவர் பாடினால் "சிவனடியார் திருமேனியில் திருநீறு பூசினதுபோல்" என்று உவமை காட்டுவார். வைணவப் புலவர் பாடியிருந்தால் நாராயணனுக்கு அன்னம் குவியலிட்டதுபோல் என்று உவமை காட்டுவார்.

**நகைச்சுவை :**

பெண்கள் நாணமுடையவர்கள். தங்கள் ஆடை விலகினால் உடனே திருத்திக்கொள்வார்கள், பிறர்

விலக்கிவிட்டால் உடனே கோபம் வந்துவிடும். ஆனால் "தென்றல்" வந்து விலக்கினால் அதை விலக்காமல் இன்பம் நுகர்பவர் என்ற பொருட்பட,

"பெண்கள்,
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும் விலக்கார் உன்னை!"

என்று தென்றலை நோக்கிப் பாடுகிறார் நம் கவிஞர். இனி இவ்வாறாகவே ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டுவோமானால் முடிவில்லாமல் ஆங்காங்கு ஆழ்ந்த கருத்துக்களும், கவியழகும், கவியின்பமும் கணக்கில்லாமல் காணலாம். சில பகுதிகளைத்தான் இச்சிறு கட்டுரையில் காட்ட இயலும்.

கவிக்களஞ்சியம் பாரதிதாசனின் கவியின் சுவையை எழுத இயலாது. ஒப்பற்ற கவி பாரதிதாசனைப்போல், கவிஞர் தோன்றினதுமில்லை, இனித் தோன்றுவதும் அரிது!

புரட்சிக்கவி பாரதிதாசனின் புதுமைக் கவிகளைப் பருகுதலே இன்பம்!

அறிவுப் புரட்சியே, யாவற்றிற்கும் அடிப்படை!
கவி பாரதிதாசன் நீடு வாழ்க!

—எம். இராஜகோபால் பி.ஏ.
ஆவணப்பதிவாளர். சேலம்

# இன்பக் கவி !

நான் இந்தக் கட்டுரை எழுதியதின் கருத்து, கவிஞரின் கவிதைகளை ஆராய்ச்சி செய்வதற்கல்ல. நான் ஒரு ரசிகை! என் மன எழுச்சியே இந்தக் கட்டுரை!

தமிழ் இலக்கியங்கள் படிக்கும்போது எனக்கு மிகுந்த வெறுப்பு ஏற்படுவதுண்டு. அதன் காரணம் என்ன? தமிழ் நூல்களில் பெரும்பாலன (சங்ககாலத்துக்குப் பிற்பட்ட நூல்கள்) கடவுளைப்பற்றியவை. மற்றும் சாரமற்ற இயற்கைக் கொவ்வாத-இன்பமில்லாத கருத்துக்களைக் கொண்டவை.

ஒரு சமயம் பாரதிதாசன் அவர்களால் எழுதப்பட்ட "எதிர்பாராத முத்தம்" என்ற நூலை ஒரு நண்பர் என்னிடம் தந்து "இதைப் படியுங்கள், இதில் இன்பச்சுவை நிறைய உண்டு." என்றார். நான் படிக்கத் தொடங்கியது முதல் அதைக் கீழே வைக்க மனம் வரவில்லை. அதனிலுள்ள சில வரிகள் என் மனத்தைவிட்டு அகல்வதில்லை. "பழத்தோட்டம் அங்கே; தீராப் பசிகாரி இவ்விடத்தில்!" "கோலச் சிற்றிடை கொடிபோல் துவளும்" இவை போன்ற வரிகள் ஏராளம். அவைகளை எழுதினால் விரியும். அவ்வளவு சுவை நிறைந்த சொற்கள். இதுவரை படித்தறியாத பாடல்கள்! பிறகு, மற்றும் பாரதிதாசனின் நூல்கள் என்னென்ன இருக்கின்றன என்று நான் தேடிப் படிக்க ஆரம்பித்தேன். எனக்கு அவை பெருவிருந்தாக அமைந்தன. "இரணிய"னில் ஓரிடம், நரசிம்மனைப் பார்த்து, "இரணியன், ஏடா! தூணை உதைத்தேன் நீ

வந்தாய், உன்னை உதைத்தால் தூண் வருமா" என்று கேட்கிறான். என்ன நகைச்சுவை!

மற்றும் 'காதல் நினைவுகள்' என்ற நூலில் முதல் பக்கத்திலிருந்து கடைசிவரை ஒரே இன்பமயம். கவிஞரின் நூல்கள் அனைத்தும் அப்படியே! தமிழ் நாட்டில் பாமரர் முதல் அறிவாளிவரை படித்து இன்புறத்தக்க கவிதைகள் பாரதிதாசன் கவிதைகளைத் தவிர வேறில்லை. வேண்டுமானால் ஒரு சிலர் 'நாஸ்திகக்கவி' 'பிரசாரக் கவி' என்றெல்லாம் கூறலாம். ஆனால் இலக்கியத்தின் எதிர்காலம் கவி பாரதிதாசனின் காலடியில் காத்துக் கிடக்கிறது! நாட்டிலும், நாட்டு மக்கள் உள்ளத்திலும் என்றென்றும் ஜீவகளையுடன் திகழ்கிறார் நம் கவி பாரதிதாசன்!

"கலையிலே பிரசாரமா?" என்று சிலர் கூச்சலிடுகின்றனர். "கலையே பிரசாரந்தான்!" ஒருவனுடைய "கற்பனை", உலகையே வியாபிக்கச் செய்வது பிரசாரமல்ல என்றால் பின் எது? என்று தி. ஜ. ர. கூறுகிறார். அதுவே அந்தக் கூச்சலுக்குப் பதிலாகும்! "கவிதையிலே நாஸ்திகமா?" என்பது ஒரு சிலரின் கதறல்! நம்முடைய ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் போன்ற மதத்தலைவர்கள் முன்பு, பக்தியை ஊட்டிஊட்டி வைத்துவிட்டுப் போயினரே! அதைவிடவா, இன்றுள்ள ஆஸ்திகத்தைவைத்துப் பிழைக்கும் கும்பல்கள் பக்தியை வளர்த்துவிட்டனர்.— வளர்க்கப் போகின்றனர்?

இன்று நாம் எந்தக் கவிஞரிடமும் காணமுடியாத உணர்ச்சி மிக்க - புரட்சிகரமான - இன்பம் நிறைந்த சொற் சித்திரங்களைப் பாரதிதாசனிடந்தான் காண்கிறோம். அவருடைய ஒரு வரிக்கு ஈடாக எந்தக் கவிஞரும் இதுகாறும் பாடவில்லை. இனிப் பாடவும் முடியாது!

"கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலைவிட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!" என்ன உண்மை நிறைந்த இன்பச் சித்திரம்! இன்னும், "ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் - இவன் ஆயிரம் ஏடு திருப்பு கின்றான்." அப்படிப்பட்ட படிப்பு! இன்னும் பாருங்கள். "பெண்கள் விலக்காத உடையை நீபோய் விலக்கினும் விலக்கார் உன்னை" இது தென்றலைப் பார்த்துக் கவி கூறுவது! மற்றும், "கை இரண்டும் மெய்யிறுக, இதழ் நிலத்தில் கன உதட்டை ஊன்றினான், விதைத்தான் முத்தம்!" வேறென்ன வேண்டும்! இதுபோன்ற ஒவ்வொரு வாக்கியங்களையும் வைத்துக்கொண்டே வாழ் நாள் முழுதும் இன்புறலாம் போலிருக்கிறது! அவ்வளவு சுவைநிறைந்த கவிதைத் தேனை நமக்குக் கிடைத்திருக் கிறது.

"நீட்டடி சத்தியம்! நான் மணப்பேன்!-அடிகோதை தொடங்கடி! என்று சொன்னான் - இன்பம். கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!!! மாந்தோப்பில்" இதுபோன்ற கவிதைகளைப் படிப்பதும் வாசகர்களுக்கும் கொள்ளை தான்!

மக்களுக்கும் இன்பம் தந்து, தம் வாழ்விலும் இன்பத்துடன் காணப்படும் கவிஞர் பாரதிதாசன் வாழ்க!

—எஸ். பத்மகுமாரி

# வானொலிச் சொற்பொழிவு !

தமிழ்நாட்டின் ஒப்பற்ற இலக்கிய விமர்சகர் புதுமைப் பித்தன் அவர்கள் அண்மையில், சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கமே இதன்கீழ் காணப்படுவது :

"பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல. இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின், ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்.

"எங்கெங்குக் காணினும் சக்தியடா !—ஏழுகட
லவள் வண்ணமடா" என

ஸ்ரீ கனக சுப்புரத்தினம் தமது கன்னிக் கவிதையைக் கொணர்ந்து சமர்ப்பித்த பொழுது, பாரதியாரின் 'தராசு' 'எழுக புலவன்' என ஆசீர்வதித்தது. அன்று முதல் பாரதி தாஸனுகிவிட்ட, ஸ்ரீ கனக சுப்புரத்தினம் பாரதி வகுத்த பாதையிலே பல அழகுக் கனவுகளை நிர்மாணித்துத் தந்திருக்கிருர். பரிச வாய்வும், பக்க வாதமும் போட்டலேக்கும் இன்றைய கவிதையுலகிலே, அவருடைய பாட்டுக்கள்தான் நிமிர்ந்து நடக்கின்றன.

'நண்பர் ஸ்ரீ கனக சுப்புரத்தினம் நம்மிடையே வாழ்பவர்; நம்மைப்போல, கருத்து விசித்திரங்களும் கருத்து விருப்பு வெறுப்புக்களும் ஆணித்தரமான அபிப் பிராயங்களும் கொண்டவர், பாரதிதாசன் கவி, கனவுக் கோயில்களைக் கட்டி நம்மை அதில் குடியேற்றி மகிழ் கிறவர். 'குள்ளச் சிறு மனிதர்களின்' எத்து நூல் வைத்து அவரது காவிய மாளிகைகளை முழம்போட முயலுகிறவர்களுக்கு, ஸ்ரீ கனக சுப்புரத்தினம், இடை மறித்து நின்று தம் கருத்துக்களைக் காட்டி மிரட்டி ஓட்டி விடுவார். பாரதி தாஸனைப் பழகி அனுபவிக்க வேண்டு மெனில் ஸ்ரீ கனக சுப்புரத்தினத்தின் கருத்துக்களைக்

கண்டு பயப்படுவது விவேகமல்ல; "நட்ட கல்லும் பேசுமோ?" என்று பாடியவரைவிட இவர் பிரமாதமான தவறு எதுவும் செய்து விடவில்லை. அவருடைய காவியங்களில், ராமாயணம் என்னும் பெரும் புளுகும், 'எங்கள் மடாதிபதி' 'சைவத்தை ஆரம்பித்த' விமரிசையும், இருந்தால் என்ன குற்றம். அவர் கவி,

கோட்டைப் பவுன் உருக்கிச்—செய்த
குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகளைப்

பார்க்கத் தெரியாத ரஸிகர்களைக் 'குருடேயும் அன்று நின் குற்றம்' என்று அவ்வையுடன் சேர்ந்தே ஆசிர்வதிக்க வேண்டி யிருக்கிறது. பாரதிதாஸன் கட்டிவைத்துள்ள கவிதைக்கோயிலிலே எத்தனையோ பிராகாரங்கள் உண்டு; எத்தனையோ ஆயிரக்கால் மண்டபங்கள் உண்டு. அவற்றில் நடுநாயகமாக விளங்குவது என நான் கருதுவது, புரட்சிக் கவி என்ற அவரது பாட்டு. கதை எல்லாம் பழைய கதைதான்; ஆனால் பழசு என்று சொல்லிவிட்டால் போதுமா? முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் பெற்றியதாக உள்ள மனுஷ இதிகாசக் கருத்து. விஷயம் தெரிந்த விவேகிகள், பில்கணீயத்தின் கருத்துத்தானே என்று அதைத் தாண்டிச் சென்று விடுவார்கள். அரசன், கவி என்னதான் கவிராயர்கள் தம்மைப் புவியரசர்களுக்கு மேல் எனக் கற்பனைபண்ணிக் கொண்டிருப்பதை, அந்தப் புவியரசர்கள் புன்சிரிப்புடன் சகித்துக்கொண் டிருந்தாலும், தம் நெஞ்சை, அந்தஸ்தைத் தொடும் காரியத்துக்குள், கவிராயர்கள் பிரவேசித்து விட்டால், தமது சுய உருவைக் காட்டிவிடுவார்கள் என்பதுதான் ஆதாரக் கருத்து. பழைய பில்ஹணீயம் உருவாகும் காலத்திலே, பிராம்மணர்கள், பூலோகப் பிரமர்கள் எனப் பிரஷிக்கப்பட்டு வந்தார்கள். பிராம்மணனைக் கொல்வது பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்று நம்பப்பட்ட காலம். தன் அந்தஸ்துக்காக ஆசைக் குமாரியின் வாழ்வையே பாழ்படுத்திவிடத் துணிந்த மன்னனைப் பிரம்மஹத்தி தோஷம் என்ற பயந்தான் தடுக்கிறது. அந்த நாகரிகம் இன்று நாம் ஏட்டில்

பார்த்து நுகரும் ஒரு விவகாரம். இன்றைய நாகரிகத்தில் பிராம்மணர்களும், மன்னர்களும், தம் பழைய அந்தஸ்து களை இழந்துவிட்டார்கள். தன்னுடைய அந்தஸ்துக் காக ஒருவனை உயிர் வதை செய்யத் துணியும் மன்ன னுக்கு ராஜ்யத்தில் இடமில்லை என்பதுதான் இந்தப் புதிய புரட்சிக் கவியின் ஆதாரக் கருத்து. களவையும் நிலவையும் பற்றிப் பாடிக்கொண்டிருந்த கவிஞன், பிரஞ்சுப் புரட்சிக்கு உதயகீதம் பாடிய ரூஸோவைப் போலக் கனல் விடுகிறான். 'அன்னை யிட்ட தீ அடி வயிற்றிலே' என்று கொண்டு பட்டினத்தார் தம் வீட் டுக்குத் தான் நெருப்பு வைக்கப் பார்க்கிறார். புரட்சிக் கவியான உதாரனது பேச்சு, வீண் கருவம், டம்பம், வரம்பற்ற தன்னிச்சை, கொலை வெறி, அந்தஸ்து என்ற உச்சாணிக் கொப்பு—என்ற உளுத்துப்போன கருத்துக் களைச் சுட்டுச் சாம்பலாக்குகின்றன. கூளங்கள் கொதித் தெழுந்து, உயிர் வதைக்குத் துணிந்திட்ட மன்னனைத் தேடி வரும்போது, மன்னன், இன்றைய வழமுறைப்படி, நாட்டை விட்டு வெளியேறி விடுகிறான். ஓடிப்போன ராஜா மான்டிகார்லோவில் பந்தயக் குதிரை வளர்க் கிறாரா அல்லது ஹாலிவுட் அழகியை மணக்கிறாரா என்று நாம் தேடிச் சென்று கொண்டிருக்க வேண்டாம். ஓடிப்போகிற ராஜாக்கள் அப்படித்தான் செய்வார்கள். பழைய பில்ஹணீயத்துக்கும், இந்தப் புதிய புரட்சிக் கவிக்கும் இவ்வளவுதான் ஒற்றுமை; இவ்வளவே வேற் றுமை. இவை இரண்டும் இரண்டு விதமான மனப் பக்குவங்களைக் காண்பிக்கின்றன. நாம் வெகு நேரமாகப் புரட்சிக் கவியின் முற்றத்தில் நின்றே பேசிக்கொண் டிருந்து விட்டோம். காவியத்தைப் பார்ப்போம். அதிலே வரும் ஒவ்வொரு பாத்திரமும் பச்சைத் தமிழன்; சாயச் சரக்கல்ல; மழைபெய்த மூன்றாம்நாள் சாயம் விட்டுப் போகும் பண்ருட்டிப் பொம்மை அல்ல"

*

## மலேயாவில் சொற்பொழிவு !

கடல்கடந்த - மலேயா, - கோலாலம்பூரில் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 'புரட்சிக்கவி' அல்லது உதாரன் என்ற நாடகம் 1941ல் நடைபெற்ற போது, கவிஞரின் படத்தைத் திறந்து வைத்து, மலேயா, 'தமிழ் முரசு' ஆசிரியர். ரெ. சீனிவாசன் அவர்கள் செய்த சொற்பொழிவின் கருத்துக்கள்: இது முதன் முதலில் செய்து காட்டப்பட்டிருக்கின்றது. இதே போன்று மலாய் நாட்டில் பல்வேறு இடங்களில் பாரதிதாசன் அவர்களது கொள்கை, சிறப்பு ஆகியவைகளைத் தமிழ் மக்களுக்கு விளக்கி வைக்க அவரது திருவுருவப் படங்கள் அடிக்கடி திறந்து வைக்கப்படவேண்டும்.

" தமிழ் நாட்டில் உயிர்க் கவிஞர் உண்டெனில் அது பாரதிதாசன் அவர்களையெ குறிக்கும். தமிழ்க் கவிகள் நாட்டில் தழைத்தோங்கினால்தான் தமிழ் சமுதாயத்தின் மாண்பு உலகிற்கு நன்கு தெரியவரும். ஒரு நாட்டின் நாகரிகம், கலை, இவைகளை உலகிற்கு நிவேதனம் செய்பவர்கள் அந்தந்த நாட்டுக் கவிஞர்களேயாகும். ஒவ்வொரு நாட்டு ஜீவநாடி அந்தந்த நாட்டின் கவிதைகளில் துடித்துக் கொண்டிருக்கும். தமிழ்நாட்டின் பெருமையை, தமிழ்மொழியின் சிறப்பை, தமிழ் மக்களின் உயர்வைக் காப்பாற்றுவதற்கு கவிஞர் பாரதிதாசனைத் தவிர வேறு கவிஞர்கள் இன்று தமிழ்நாட்டில் கிடையாது. எனவே அவரது பாக்களை தமிழ்நாட்டார் அனைவரும் ஆதரிக்கவேண்டும். நாடெங்கும் அவரது கருத்துக்களை நாடகங்கள், பிரசங்கங்கள் வாயிலாக பரப்பவேண்டும். ஒவ்வொரு மொழியின் வளம் சிறப்புறுவதற்கு நாட்டில் பல கவிஞர்கள்

தோன்ற வேண்டும். உதாரணமாக மேல்நாட்டில் ஆங்கில மொழியில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன் இவர்கள் தான் அந்நாட்டு நாகரிகத்தை அணி செய்கின்றனர். இத்தகைய அறிஞர்களால்தான் ஆங்கில நாகரிகத்தின் கட்டட அமைப்பு நிர்மாணமாகியிருக்கிறது. அதே மாதிரி இந்தியாவில் வங்கத்தில் பல அறிஞர்கள், பல கவிஞர்கள் அந்நாட்டின் இலக்கிய பீடத்தை அலங்கரித்து வருவதால் அந்நாட்டின் புகழ் வெளிநாடுகளிலும் சிலாகிக்கப்படுகிறது. அதே போன்று தமிழ் நாட்டின் பெருமையை உலகிற்கு எண்பித்துக் காட்டுவதற்கு தமிழ்க் கவிஞர்களை நாம் வெகுவாக ஆதரித்து அவர்களின் அறிவு ஊற்றிலிருந்து பெருக்கெடுத்தோடும் கவிதா சித்திரங்களை நாம் நமது வாழ்க்கையில் இடம் பெறச் செய்யவேண்டும். தமிழ் மக்கள் இன்று அதல பாதாளத்தில் பலவித இடையூறுகளால் அமிழ்த்தப்பட் டிருக்கின்றனர். தமிழர்களின் நிலையை நினைக்குந்தோறும் மனிதாபிமானம் படைத்த ஒவ்வொருவருக்கும் மனவருத்த முண்டாகாமலிராது. பாரதிதாசன் அவர்கள் எளிய, இனிய, ஆனல் ஆவேசமான, அர்த்தபுஷ்டியான பதங்களால் கதறிக் கதறிக் கூறுகிருர். தமிழ் மக்கள் இதைக்கண்டு திருந்தாவிடில் அவர்களது நிலை தலைகீழாக மாறிவிடு மென்பதற் கையமின்று. பாரதிதாசன் அவர்கள் காலத்திலேயே தமிழ் மக்கள் ஓர் அளவு திருந்தி விடுவார்களாஞல் அது ஒன்றே பாரதி தாசன் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமத்திற்கு பிரதி நன்றியாகவிருக்கும். இன்றையத் தமிழர்களில் பலர் தமிழ் நாட்டை அசட்டை செய்து ஆரிய தர்மங்களிலும் ஆரிய மாய்மாலங்களிலும் அகப்பட்டு உழலுகின்றனர். இது நிவர்த்திக்கப்பட்டாலன்றி, தமிழர்களுக்கு விடுதலை என்பது கனவில்கூட கிட்டாது. அருகிக்கொண்டிருக்கும் தமிழ் நாட்டுப் பற்றை உத்தாரணம் செய்வ

தற்கு பாரதிதாசன் அவர்களது கவிதை நமக்கு துணையாக இருக்கிறது. தமிழர்களை நசுக்கவேண்டும் அவர்களது வாழ்வை குலைக்க வேண்டும் என்று கனவு காண்போருக்கு கவிஞர் பாரதிதாசன் அவர்களது பாக்கள் பல இடங்களில் மூத்தாய்ப்பு வைக்கின்றன.

வாழ்வை நிர்ணயிக்கும் பொறுப்பை தமிழிளைஞர்கள் வெகுவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பாரதிதாசன் அவர்களின் பாடல்களை நாடெங்கும் பரப்பி தமிழனது நாகரிகக் கோட்டையின் மதில் சுவரை எழுப்ப வேண்டும். பாரதிதாசன் அவர்கள் எழுதிய கவிதையில் "புரட்சிக் கவி" என்ற பாகம்தான் இன்று இங்கு நடத்திக் காட்டப்படப் போகின்றது. பாரதிதாசன் வாழ்நாளிலேயே நாம் அவரை நன்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். அவரிடமுள்ள கருத்துச் செறிந்த, அறிவு வளர்ச்சிக்குரிய பல சாதனங்களை நன்கு உபயோகப்படுத்தி தமிழ் நாட்டில் மறு மலர்ச்சியைக் காணுவதற்கு நாம் எல்லோரும் முழு மூச்சுடன் தியாக அக்கினியில் குதிக்க வேண்டும். தமிழ்க் கலையின் மேம்பாட்டை பிற நாடுகளிலும் பரப்புவதற்கு ஆங்கில மொழியிலும் இன்னும் பல இதர மொழிகளிலும் அவரது பாக்களை மொழிபெயர்த்து வெளி நாட்டார்களுக்கு தமிழ் நாட்டின் கலைப் பொக்கிஷத்தை விளம்பரப் படுத்த வேண்டும்.

*

கவிஞர் பாரதிதாசன் திறமையை ஆணித்தரமாக நிரூபிக்கும் அற்புதப் பாடல்கள் இயற்கை வர்ணனையிலும் புது உலகக் கருத்துக்களிலும் நிறைந்துள்ளன. நிலா வர்ணனை ஒன்றே போதுமே கவிஞரின் மேதையையும் கற்பனைச் செறிவையும் எடைபோட.

'விண்ணை ஒளியால் கவ்வி, இருட் காட்டை அழித்து வரும் நிலா'வைப்பற்றி இதுவரை யாருமே பாடாத உயரிய உவமைகளுடன் கவிஞர் கூறுகின்றார். முதலில் நிலாவை விண்மோகினி யாக்கி, விழிக்கிறார் பாருங்கள்:

'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோலமுழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?'

இவ்விதம் உள்ளங் கவரும் எடுப்பிலே கிளம்பும் கற்பனை மேலே எவ்வுகிறது, வரிக்கு வரி. 'சோலையிலே பூத்த தனிப்பூவோ! சொக்க வெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ!' என வியப்புகளை அடுக்கும் கவியுள்ளத்திலே ஒரு ஐயம் பிறக்கிறது—ஒரு வேளை சூரியனின் புனர்ஜன்மந்தானோ இந்த சீதக்கதிர்மதி என்று.

'காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!'

அல்லது கன்னக் காரிருள் சிரித்ததனால் விளைந்ததா?

'பெருஞ் சிரிப்பின் ஒளி முத்தோ நிலவே நீதான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்

சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ ?'

இந்த 'இன்பமெனும் பால் நுரையை, குளிர் விளக்கை' கண்டதனால் உள்ளத்திலே பொங்கி எழுகிறதே உணர்ச்சி, அது எப்படி இருக்கிறதாம்? உடலோய உழைத்து பசியால் செத்து வாழ்வு நடத்தும் தரித்திரன் கூழ் தேடி அலைகிறான். அவன் கையிலே சோற்றுப் பானையே கிடைத்து விட்டால்? அவன் மனதின் எக்களிப்பை அளக்க முடியுமா? அதே போலத் தான் இதுவும். கவிஞரே பேசட்டும்:

நித்திய தரித்திரராய் உழைத் துழைத்து
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பம் தானோ!

இதை ரசித்தபடியே பக்கங்களைப் புரட்டினால், மயிலுடன் கவி ரகசியம் பேசுவது கேட்கிறது. மயிலின் உச்சிக் கொண்டை 'உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை' என உருவகப்படுத்தும் பாரதிதாசர் தோகை அழகைப் புதுவிதமாகக் காட்டுவதைக்கண்டு உள்ளமும் மகிழ்வுச் சிறகு பரப்பி ஆடாமல் தூங்கியா கிடக்கும்! இதோ.....

'ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆன மெல்லுடல்' என்னும் பொழுது

'சபாஷ், கரகோஷம்!' என்றுதான் நாமும் சொல்ல வேண்டியதாகிறது.

இரவின் எழிலைப் பற்றிய மணியான உவமைகள் அங்கங்கே சிதறிக்கிடக்கின்றன. ஒவ்வொன்றும் அமுதப் பிரவாகம் தான். 'மாலைப் போதைத் துரத்தி வந்த அந்திப் போதை வழியனுப்பி' வரும் இருள் எப்படி இருக்கிறது பாருங்கள், கவிதா நோக்கிலே.

'நீலம் கரைந்த நிறை குடத்தின் உட்புறம்போல்
ஞாலம் கறுப்பாக்கும் நள்ளிருள்'

மக்கள் துயில் கிடக்கின்றாரே; எவ்விதம்? 'சோலை உதிர் பூ வென்ன!' அபாரம் என்று சொல்லாமல் இருக்க முடியுமா?

வேறோர் இடத்தில் வரும் வியப்பு இது.

'தனிஒரு வெள்ளிக் கலம் சிந்தும்
தரளங்கள் போல்வன நிலவு நக்ஷத்திரம்
புனையிருள் அந்திப் பெண்ணாள் ஒளி
போர்த்த துண்டோ எழில் பூத்ததுண்டோ?'

'குடும்ப விளக்கு' என்ற அழகுக் காவியத்திலே இரவின் உருவகம் உள்ளத்தை சொக்கச் செய்வது. அதையும் பார்த்து விடலாமே. இரவுப் பெண் பவனி கிளம்புகிறாள். அதற்கு முன்பாக விருந்துண்டு, ஆடை மாற்றி, சிங்காரித்துக்கொள்ள வேண்டாமா? எல்லாம் நடைபெறுகின்றன. எப்படி?

'மேற்றிசைக் கதிர்ப் பழத்தை
விழுந்துண்டு, நீல ஆடை
மாற்றுடையாய் உடுத்து
மரகத அணிகள் பூண்டு
கோற்கிளை உறங்கும் புட்கள்
கொட்டிடும் இறகின் சத்தக்
காற்சிலம் பசையக்
காதற் கரும்பான இரவு' வந்தது.

கவியின் கற்பனையைக் காட்டும் கண்ணுடியில்லையா இது? பூரிக்கின்ற நிலவின் ஒளிக்கு உவமை 'வயிரக் குப்பை!' கற்பனைச் செல்வம் பெற்ற கவியுள்ளம் தான் இப்படிப் பேச முடியும்.

பொழுது புலர்கிறது. உவமையாகச் சொல்வதானுல்? பிறர் என்னவும் சொல்லட்டும். நமது கவிஞர் பேசுகிருர், சலசலக்கும் கருங்கடல் பெட்டியை உடைத்து எழுந்ததுபோல கதிரோன் எழுகிருன் என்று.

'ஒலி கடல் நீலப்பெட்டி
உடைத் தெழுந்தது கதிர்தான்'

இருளின் ஓட்டம் எப்படி இருக்கிறது என்ருலோ.........

'தொட்டி நீலத்தில் சுண்ணும்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது'

என்கிருர்.

காட்டைக் குறிக்குமிடத்தில் கவிஞர் 'நீள் கிளைகள் ஆல் விழுதினேடு-கொடி நெய்து வைத்த நற்சிலந்திக்கூடு' என எழுதுகிருர். அதன் நயத்தைப் பாராட்டாது போக மனம் வருமா? விளக்கொளிக்குக்கூட புது உவமை இருக்கிறது அவர் கவிதையிலே.

சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்
பொன்னுற் செய்த பொடிமுத்தைப் போல்
துளிஒளி விளக்கு.

இனி புதுயுகக் கருத்துக்களைப் புரட்ட வேண்டியது தான்.

மனித உள்ளத்தை பலசரக்குகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகிருரே கவிஞர், அது உங்களுக்குத் தெரியுமல்லவா? 'கடுகு போல் உள்ளம்' 'கடுகுக்கு நேர்மூத்த துவரை உள்ளம்' அதற்கு அண்ணனை 'தொன்னை யுள்ளம்'